சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௦, கார்த்திகை	பரல்
௩௪	டிசம்பர், 1959	௪

திருச்சிற்றம்பலம்

திருவருள் பெற்றார் செயலனைத்தும் சிவன் செயலே

(செல்வி சிலம்பு ௩௪-பரல் ௩, ௧௦௦ ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லாம்
இதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையும்
அவனிவனாய் நின்றமுறை யேகனாகி
அரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றம்
சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி என்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே."

—சிவஞான சித்தியார், ௧௦.

இவற்றான் மெய்யடியார்பால் நிகழும் நிகழ்ச்சிகள் மெய்ப்பொருளாம் சிவபெருமானின் திருவருண் நிகழ்ச்சிகளே என்பது தேற்றம். திருமுறைக்கண் காணப்படும் தொல்பெரும் முதலாசிரியராகிய திருமூல நாயனார் இறைவன் தம்மை "நன்றாகத் தமிழ் செய்யுமாறு" படைத்தருளினன் என ஓதியருளுகின்றனர். அது வருமாறு:

"பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே." —௧௦. ௧௫௨.

தமிழ் - தமிழாகமம். திருமுறை எனினும் ஆகமம் எனினும் ஒன்றே.

ஆளுடைய பிள்ளையார் உலகன்னையின் திருமுலைப்பால் உண்டருளியபோதே "தோடுடைய செவியன்" எனத் தொடங்கிச், சிவபெருமான் "தம்மை யடையாளங்களுடன் சாற்றி" யருளினர். இந்நிகழ்வு ஓதுவார்தம் வேண்டுகோளின்றி இறைவன் உண்ணின்றெழுப்பி உணர்த்தியருளிய திருவாணையான் நிகழ்ந்ததாகும். இவ்வுண்மை வரும் செந்தமிழ்த் திருமாமறையான் உணரலாம்:

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே."

—௩. உச - உ.

ஆளுடையவரசரும் தம் தமக்கையார் திலகவதியம்மையாரின் திருவடியைத் தொழுதனர். அம்மையாரும் 'திருவாளன் திருநீற்றைத் திருவைந்தெழுத் தோதி'க் கொடுத்தருளினர். இதுவே சிவதீக்கை என்னும் சிறப்புப்பிறப்பாம் என்ப. அரசரும் அத் திருநீற்றைப் பெருவாழ்வெனப் பணிந்தேற்று உருவார அணிந்தருளினர். அணிந்து அம்மையாருடன் திருவதிகை வீரட்டானத் திருக்கோவிலுக்குச் சென்றனர். சென்று திருக்கோவில் தொழுது, வலஞ்செய்து வணங்கிச் சிவபெருமான் திருவடிக்கீழ் நிலமிசை வீழ்ந்தெழுந்தனர். எழலும் சிவபெருமான் திருவருளால் திருமாமறை பாடியருளும் உணர்வு உள்ளத்தெழுந்தது. எழலும் திருவாணை வழிநின்று திருமுறை ஓதியருளினர். இம்முறையால் அரசர் திருவாய்மொழியும் ஆண்டவன் திருவாய்மொழியே. இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகள் ஓதியருளியவாற்றானுணரலாம்:

" திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்து முணர்வுபெற வுணர்ந்துரைப்பார்."

—கஉ. திருநாவுக்கரசர், சுக.

சிவபெருமான் மெய்யடியார்பால் உயிர்க்குயிராய் உண்ணின்று உணர்வின்கண் எழுப்புவதே திருமாமறை என்ப. இதனையே எழுதுமறை என்ப. எழுதுதல் - எழுப்புதல். இம்மறையினை வழிமொழிவதே மெய்யடியார்பால் விளங்குவது. 'வழிமொழிவ' தன்னுண்மை முதற்கண் எடுத்துக்காட்டியுள்ள

"ஒழுகலரி" தென்னும் தமிழ்மறையான் உணரலாம். மறை: மொழிக்குக் கருவாம் உணர்வு. இதனைச் சொற்பிரிவிலா மறையென்பர். சொற்பிரிவிலா மறையெனினும், நினைவோசையெனினும் ஒன்றே. நினைவோசை - பைசந்தி. இவ்வுண்மைகள் வரும் தனித்தமிழ் மறைகளான் உணரலாம்:

"சொற்பிரிவி லாதமறை பாடிநட மாடுவர்தொ லானையுரிவை
மற்புரிபு யத்தினிது மேவுவரெந் நாளும்வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமுன யின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக ரென்பர்திரு வேதிகுடியே."

—௩. ௭௮ - ௨.

"எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த எழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து."

—௩௨. சம்பந்தர் - ௭௫.

"பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
அதிக நண்பினை நீலநக் கருக்களித் தருளி
எதிர்கொ ளும்பதி களிலெழுந் தருளினு ரென்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனூர்."

—௩௨. நீலநக்கர் - ௩௪.

ஈண்டு ஓதப்பெறும் 'செந்தமிழ்ப் பழமறை, என்பது பண்டு தமிழகத்தில் வழங்கிவந்து இடைக்காலத்து மறைந்துள்ள தமிழ் நான்மறையேயாம். இங்ஙனம் மறைந்தவுண்மைதான் திருமறைக் காட்டில் "தொல்லை வேதந் திருக்காப்புச் செய்த வாயில்" என வழங்குவதாயிற்று. அவ்வாயிலின் தொடர்வகற்ற இருபெரு முதல்வர் தம்மால் பாடியருளிய செந்தமிழ் மறையே பழந்தமிழ் மறையின் தொடர்புடைய தென்க. இவ்வுண்மையுணராச் சில்லோர் அஞ்ஞான்றும் இன்றும் சில்லோர் வழக்கில் காணப் படும் அயலதாகிய ஆரியமறை எனக் கூறுகின்றனர். அங்ஙன மாயின் இருவரும் ஆரிய மறையினைப் பாடியன்றோ திறப்பித் திருத்தல் வேண்டும். அங்ஙனம் நிகழாமையான் முன் திருக் காப்பிட்ட மறை தமிழ் நான்மறையே என்பது தானே போதரும்.

அம்மயலினர் அம்மட்டோ மொழிகின்றனர்? ஆரிய மறைக்குத் தமிழ்மறை ஒப்பெனக் காட்ட அங்ஙனம் நிகழ்ந்த தென்கின்றனர். அவர்கள் ஒன்றை மறந்து உரைக்கின்றனர். வழக்கத்திலிருந்துவரும் மறைக்கு ஒப்பாகப் பிறிதோர் மறை தோன்றுவது எங்ஙனம் ஏற்புடைத்தாகும்? ஆரியமறை செந்

தமிழோர்க்குப் புரியாமொழியிலிருப்பதால் அங்ஙனம் நிகழ்ந்த தெனக் கூறுவராயின், புரியும் தமிழ்மறை வந்த பின்னும் ஆரிய மறைக்குத் தமிழகத்தில் இடமிருப்பதேன் என வினுயினர்க்கு அவர் தாம் இறுக்கும் விடை யாது? அவ்வாரிய மறையைப் புரிந்துகொள்ளும் தமிழகத்து வாழும் தமிழறியாத ஆரியர் தாம் யாவர்? இவையொன்றுக்கும் நேர்மையான விடையின்மையால் அவர் கூறுவன மயக்கே என்க.

ஆளுடைய பிள்ளையார் தமிழ் வழங்கா வேற்று நாட்டி லுள்ள சிவபெருமான் திருக்கோவில்களுக்குத் தமிழ்நாட்டி லிருந்தே பாடியருளினர். இதன் உண்மை திருக்கோவில் வழிபாடு அவ்வந் நாட்டுமொழியினுலேயே நடத்தல் வேண்டும் என்பதேயாம். அதனை வலியுறுத்தவே வரும் தேவாரத் திருமாமறைகளைக் கட்டளையிட்டருளினர் :

"அந்தண் சோற்றுத் துறையெம் ஆதியைச்
சிந்தை செய்ம்மின் அடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே." —க. உஅ - கக.

"நல்ல புனற்புகலித் தமிழ்ஞான சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரு ரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினுல் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே."
—க. கO௫ - கக.

'வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னுவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே." —உ. உ - கக.

தமிழ் மாமறைக்கண் ஒப்பில் முழுமுதலாம் சிவபெருமான் வழிபாடே சிறப்பு. ஆரிய மறைக்கண் பலதெய்வ வழிபாடும், விரத வேள்விகளுமே சிறப்புடையன. அதனுலேயே அவ்வாரிய மறை தமிழ்மறைக்கு எத்துணையோ தாழ்ந்த நிலையினையுடைய தென்பது போதரும். அவ்வுண்மை யுணர்த்துவதே "விரத மேபர மாகவே தியருஞ், சரத மாகவே சாத்திரங் காட்டினர்" என்னும் திருவாசகச் செழுமறைத் தொடர். மேலும் விரத வேள்விகளை வலியுறுத்தும் ஆரிய மறைவல்லார் சிவவழிபாட் டினை விலக்கவும் செய்வர் என்பது சண்டேசுர நாயனுர் தந்தை யின் தகாச்செயலான் உணரலாம். அதனைக் காட்டுவதே வரும் தமிழ்த் திருமாமறை யென்க:

"ஏத நன்னில மீரறு வேலி
ஏயர்கோ னுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்த சண்டிக்குன்
சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே." —எ. ௫௫ - ௬.

ஆளுடைய பிள்ளையார் பாடியருளிய தமிழ்த் திருமாமறை இறைவன் வழிபாட்டு மறையேயாம் என்னும் உண்மை வருமாறு உணர்க:

"ஆறதே றுஞ்சடை யானருண் மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூ று சண்பகந் தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே."
—௧௧. நம்பியாண்டார் நம்பி, திருச்சண்பை - ௫.

மேலும் ஆளுடைய பிள்ளையாரால் துறக்கப்பட்டவர் தமிழ்த் திருமாமறையினை அறியாப் பயனற்ற புல்லரே என்னும் உண்மையினை வருமாறு காண்க:

"... ... ... நீத்தது
அமிழ்ச்சுவை யேயறிந் தரனடி பரவுந்
தமிழ்ச்சுவை யறியாத் தம்பங் களையே."
—௧௧. நம்பி, பிள்ளையார் திருமும் - ௪.

அரனடிபரவுந்தமிழ் - தமிழ்த் திருமாமறைகள்.

இவ்வுண்மையினை வருந் தமிழ்மாமறை யானுமுணரலாம்:

"வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே." —௫. ௫அ - ௬.

சமணர்கள், தமிழ்ச் சான்றோரால் புத்த, சமண, ஆரியக் கோட்பாட்டினர் வருவதற்குப் பல ஆயிரயாண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழ்மொழியான் வழிபட்டுவந்த சிவனெறியினை அறிந்திலர். அதனால் அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றும் சிவனுக்கு அடிமையாயிலர். இலக்கண நூல் வாயிலாகவும் தமிழகத்துத் தோன்றி வழங்கிவரும் தொன்மைத் தெய்வ நெறியினையும், தெய்வத்தினையும் நன்குணர்தல் கூடும். பின்னர் அத் தெய்வ வழிபாட்டினுக்குரிய செந்தமிழ் மாமறை

ஏது என ஆய்ந்து மேற்கோடலும் நேரும். இவை ஏதுமின்மையால் உண்மை இயற்கைத் தமிழான் எளிதாக எய்தப்பெறும் சிவனுக்கடிமையாம் ஏற்றத்தினை யிழந்தனர். சிவனுக்கு உவப்பாந் தமிழ்மொழியினைப் புறக்கணிப்போர் தமிழ்த் தெய்வமாம் சிவனையும் புறக்கணித்தோராவர். சிவன் திருக்கோவில்களில் செந்தமிழ்த் திருமாமறையாம் தேவார திருவாசகங்களின் வழி அருச்சனை புரிவதை மறுப்போர் எங்ஙனம் புறக்கணியாதவராவர்? சிவபெருமானுக்குச் செந்தமிழ்த் திருமாமறை நனிமிக வுகப்புடைய தென்பதனை வரும் திருமுறைகளான் உணரலாம்:

"நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானைத்
தொண்ட னேனறி யாமை யறிந்து
கல்வி யன்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டியென் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே." —௭. ௬௭ - ௫.

"பரந்தபாரிட மூரிடைப்பலி பற்றிப்பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறையோர்க் கிடமாய திருமிழலை
இருந்துநீர்தமி ழோடிசைகேட்கு மிச்சையாற்காசு நித்தநல்கினீர்
அருந்தண் வீழிகொண் டீ ரடியேற்கு மருளுதிரே." —௭. ௮௮ - ௮.

மேலும் இம் முதல்வர்களாகிய நம் சமயாசிரியர்களை நோக்கி நம்மைப் பாடுக என்றும், பாட மறந்தனையோ என்றும், சிவபெருமான் வெளிப்படையாகத் தூண்டிப் பாடுவித்துக் கொண்ட இடங்களும் எண்ணில. பாடுதற்கு அடியெடுத்துக் கொடுத்தருளிய இடங்களும் பல. தானே மணிமொழிப் பெருமான்பால் எழுந்தருளி வந்து திருவாசகம் திருக்கோவையார்களைத் தன் திருக்கையினால் எழுதிக்கொண்டருளினன். அம்மட்டோ? சேரவேந்தனுக்கு "மதிமலி புரிசை" என்னும் செந்தமிழ்த் திருமுகப்பாசுரம் பாணபத்திரர்பால் எழுதி விடுத்தருளினன். உமாபதி சிவனார்க்கும் "அடியார்க்கெளியன்" என்னும் செந்தமிழ்ச் சீட்டொன்று பெத்தான் சாம்பானார்பால் விடுத்தருளினன். இவையனைத்தும் செந்தமிழின்பால் சிவபெருமானுக்குரிய உகப்பினையே புலப்படுத்துவன என்க. உகப்பு - உயர்வு.

திருக்கயிலைக்குச் சென்றருளிய காரைக்காலம்மையார்பால் சிவபெருமான் உரையாடியதும் "அம்மையே" என அழைத்ததும் செந்தமிழிலேயே. ஆண்டுச் சென்றுள்ள சேரமான்

பெருமாள் நாயனர் விண்ணப்பித்துக் கேட்பித்ததும் "செந் தமிழ்த் திருவுலாப்புறமே". இவைபோன்ற நிகழ்ச்சிகள் இன்னும் எண்ணில. ஒருவர் தமக்குகப்பான மொழியிற்றான் வரைவர் என்பதனை வரும் சிலப்பதிகார வரிகளான் உணரலாம்:

"எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு."

—சிலப். கடு. அடைக். ருரு - கூ.

நம்பிரான் திருமூலர் செய்தருளிய திருமந்திரமும் சிவ பெருமான் திருமொழியே; அவர் நாடொறும் இறைவனை நாடி முறையுற ஓதியருளினமையான் என்க. இவ்வுண்மை வருமாறு காண்க:

"நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே."

மேலும் திருமந்திரம் "சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்" என ஓதுவதனுல் தமிழ் வேதாகமங்கள் அத் தத்துவம் தோன்றிய நாள் தொட்டு உள்ளன என்பது துணிபு. இவ் வுண்மை வருமாறு காண்க:

"சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி யாதுட னேயுணர்ந் தோமால்." —கO. கசகூ.

மேலதனை வலியுறுத்தும் திருமாமறைகள் வருமாறு:

"தேம்பனுண்ணிடை யாள்செழுஞ்சேலன
கண்ணியோடண்ணல் சேர்விடந்தேனமர்
பூம்பொழிறிகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமென்
றோம்புதன்மையன் முத்தமிழ்நான்மறை
ஞானசம்பந்த னெண்டமிழ்மாலைகொண்
டாம்படியிவை யேத்தவல்லார்க்கடை யாவினையே."

—உ. க - கக.

"மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்
முத்தமிழு நான்மறையு மானுன் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியும் அந்தமும் ஆனுன் கண்டாய்

பால விருத்தனும் ஆனான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன்றானே." —சு. உரு - கூ.

இதுகாறுங் கூறியவாற்றால் மூவர் அருளிய 'திருமா மறைகள்' தமிழ் வேதம் என்பது தெளிந்து துணியப்பட்டதாகும். இதுபோல் மணிவாசகப் பெருமானாருளிய 'திருவாசகம்' தமிழ் வேத முடிபாகும் என்பதுங் காண்க. திருமூலர் 'திருமந்திரம்' தமிழாகமமாகும் என்பதுந் துணிபு.

ஆரிய வேதமும் தமிழ் வேதமும் வெவ்வேறென்னும் உண்மையினை வருமாறு காண்க:

"பங்கமேறு மதிசேர்சடையார் விடையார் பலவேதம்
அங்கமாறு மறைநான்கவையு மானார்மீனாரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர் மனைக்கே நுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பை நகராரே." —க. சுசு - க.

"மைம்மலர்க்கோதை மார்பினரெனவு
மலைமகளவளொடு மருவினரெனவும்
செம்மலர்ப்பிறையும் சிறையணிபுனலும்
சென்னிமேலுடையரெஞ் சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன் றடியவர்பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற்சேர
அம்மலர்க்கொன்றை யணிந்தவெம்மடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே.' —க. எஎ - ச.

"பந்தணவு மெல்விரலாள் பாகன் றன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் றன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்
திருமார்பிற் புரிவெண்ணூ றிகழப் பூண்ட
அந்தணனை யாவடுதண் டுறையுள் மேய
அரனடியே யடிநாயேன் அடைந்துய்ந் தேனே."
—சு. சசு - கO.

"மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல் போன்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் மண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் தானே." —சு. உரு - ரு.

நடுநின்று உண்மையான் நோக்குவோர்க்கு ஆரிய வேதத்தினும் தமிழ் வேதம் நனிமிகு சிறப்புடைய தென்பதைக் காரணத்துடன் விளக்கும் திருமுறைகண்ட புராணத் திருப்பாட்டுகளான் உணரலாம்:

"கொண்டுகுல சேகரனுங் கோன்பால் வந்து
குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கை யெல்லா
மண்டுபெருங் காதலுடன் சொல்லி யந்த
வண்டமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்
கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல்
எண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற் காக
இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்நீ."

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு
மதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ் சாற்றுங்
கரியைவளை விக்குங்கன் மிதக்கப் பண்ணுங்
காமதலை கரையிலுறக் காற்றுங் காணே."
—திருமுறை கண்டபுராணம், கரு, கஎ.

சிவபெருமான் தமிழ் முழுதும் ஆனான் என்பதனை வரும் திருமாமறையான் உணர்க:

"பண்ணும்பத மேழும்பல வோசைத்தமிழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலிபலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர்மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழலையே." —க. கக-௪

நால்வர் நம் மூலர் முதலிய ஐங்குரவர்தம் திருவருட் பெற்றியினைத் 'தாயுமானச் செல்வர்' உளங்குளிரக் கிளந்தெடுத்தோதும் முறை எல்லாருள்ளத்தும் ஓவாதுள்கி உணர்ந்து ஓவா இன்பம் உறவேண்டிய தொன்றாகும். அது வருமாறு:

"தேவரெலாந் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கு
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்."

"வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளாற் சாருநாள் எந்நாளோ."

"ஏரின் சிவபோகம் இங்கிவற்கே என்னஉழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ."

"பித்தரிறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ."

"போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ."

—ந. அடியார், க - ச

"சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநாள் எந்நாளோ."

—ந. அடியார், எ.

சிவபெருமான் 'கண்ணுதலோன்' என்ற காரணத்திருப் பெயரான் அழைக்கப்படுகின்றனன். அது 'நெற்றிக்கண்ணையுடையவன்' எனப் பொருள்படும். இத் திருப்பெயரையே வேறொரு வகையான் நோக்குவோமாயின் 'கருதுதலையுடையவன்' எனப் பொருள்படும். கண்ணுதல் - கருதுதல். சிவபெருமான் அனைத்துச் செய்கைகளையும் ஏனையார் போன்று கைகருவி கொண்டு கடவுள் படையாமல், வையமெலாங் கண்ணுதலால் வாழ்விற்கும் மெய்யவனைக், கண்ணுதலோன் என்றே கனிந்துரைத்தார் செந்தமிழோர், கண்ணுமறி வுக்கண்ணுங் காண் எனப் படைத்தருள்வன்.

தேவார திருவாசக திருமந்திரங்களைப் பாடியருளிய திருவருள் பெற்ற மெய்யடியார்கள் ஐவரும் "சிவயசிவ" என்னும் திருவைந்தெழுத்தின் திருமாமறை போல்வர். அவர்தம் மறைகளே செந்தமிழர்க்குத் தெய்வமறையாகும். இவற்றின் வழியாகவே செந்நெறிச் செல்வர்கள் வீட்டிலும், கூடங்களிலும், திருமடங்களிலும், திருக்கோவில்களிலும் நாள் வழிபாடு சிறப்பு வழிபாடுகள் அனைத்தும் நிகழ்த்தி வரவேண்டுவது இன்றியமையாத தலைக்கடனாகும். இதுபோலவே திருமண முதலிய எல்லாச் சடங்குகளும் இத் தமிழ்மறைவழியாகவே நடத்திவருதல் வேண்டும். இங்ஙனமின்றி ஆரியமொழியால் நடத்த வுன்னுவது தந்தாயினைச் சிறப்புச் செய்யாச் சேயினர் செயலே.

மெய்யடியார் செய்கையெலாம் மெய்ப்பொருளின் செய்கையென
உய்யவுளங் கொண்டொழுகல் ஓம்பு.
செந்தமிழ்வெண் ணீறும் சிவமணியும் மெய்யடியார்
தந்தவையும் வாழ்க தழைத்து.

திருச்சிற்றம்பலம்.

இயற்கை

(செல்வி, சிலம்பு ௩௪ - பரல் - ௩, ௧௦௮ ஆம் பக்கத்தொடர்ச்சி)

‘இயற்கை’ யென்ற ஒன்றினை உலகுக் கீந்தவன் கடவுளே, என்ற எம் கருத்தினை விரித்துரைத்திருந்தேம் யாமாகிய, மறைமலையடிகள். வாசகர்கள் எம் “இயற்கை” என்ற தலைப்பின்கீழ் வரைந்த கட்டுரையை அவர்தம் கருத்துட்கொண்டால் எம்பக்கமே சார்வரென்ற எண்ணுடன் மீண்டும் திருவருளை யுன்னி இயக்குநர்வழி வரைகின்றனம். எம் கருத்தை ஒப்புதலென்ற தன்மை உங்கட்கேற்படத் திருவருளை மீண்டும் போற்றுகின்றனம்.

இயற்கையை எவ்வாறு ஒரு கவிஞன் கண்டு களித்து அன்னவன் உள்ளக் கிடக்கையை வெளியிடுகின்றனனென்பதை எம் சிற்றறிவுக்கெட்டியவரை வரைந்தேம். இருப்பினும் இயற்கையே உலகத்தோற்றத்தைத் தன்னுட்கொண்டிருந்தால் இவ்வாறு மாறுபட்ட கருத்துக்களை மானிடரின் சிந்தையைக் குழப்பி, அவரவர் தம் ஆற்றல்வழிச் செல்லவே உதவியதோ என்றுன்னவும் இடம் ஏற்படுகின்றது. ஒரு மகன் காடு துறந்து நாடு நோக்கி வருவதும், நாடு துறந்து காடு நோக்கிப் போவதுமுண்டோ என்பதே இற்றையக்கூற்று. நாடு துறந்து காடு நோக்கிச் செல்பவன், தன் நாட்டினிலே தன்னால் பொறுக்க இயலா மனவருத்தங்கொண்டு மதியிழக்கச்செய்யும் நிலை அன்னவனுக்குச் சூழுங்கால், எவர் நோக்கிலும் அகப்படாது காடே தனக்குகந்ததெனத் தம்முட்கொண்டு காடுநோக்கிச் செல்வனென்ற கருத்தை எவரும் புரிதல் எளிதே. காடு துறந்து நாடு நோக்கி வருபவரின் எண்ணிக்கை முற்றிலுமிராதெனவே, யாம் உன்னுகின்றனம். நாட்டினில் வாழும் வாழ்க்கையும், கானகத்து வாழும் வாழ்க்கையும் பெருமளவில் தம்முள் கருத்து வேற்றுமை கொண்டதாகவே இருக்கும். நாகரிகம், பண்பாடு, உணவு, இல்லறவின்பம், கல்வி முதலிய துறைகளிலும், ஏன், கடவுள் வழிபாடு என்ற இயல்பான முறையிலுங்கூடப் பெருமளவு கற்பனைக்கெட்டா வொன்றாகவே அமையுமென்பதை எவரும் மறுக்கத் துணியார்.

இவ்வாறு இயற்கையே, இயல்பிலே தன்னிலை பிறழாதிருத்தலே, அது தோற்றுவித்ததென வுரைக்கும் குழாத்தினரின் கூற்றுப்படி அன்னையின் வயிற்றினிலே கருத்தரித்து அவனியிலவதரித்த மானிட இனம், இத்தகைய வேற்றுமைகளைக்

கொண்டு வாழ வழிவகுத்ததென்னே? சிந்திமின்! மேலும், நாட்டினிலே செல்வச் சிறப்புடன் சீர்பெறு மன்னனுய் வாழ்ந்த வன் மணிமுடி துறந்து காடுநோக்கிச் சென்றனன், என்ற கருத்தின் பொருளென்னே? அன்னவன் கானகத்து மரநிழலில் அமர்ந்து, தன்னிடம் நன்னம்பிக்கைகொண்டு தன்னுடன் வந்த் குழுவினை நோக்கி, "அன்பர்களே! இவண் இனி நமக் கின்னல் இல்லை. அமைதியே, நம் கருத்தினைத் தம்முள் ஈர்க்கும் ஆற்றல் படைத்ததாய புள்ளினங்களின் இனிமைகொண்ட குரலினைச் செவிமடுங்கள், அமைதியுறுங்கள். நமக்கெதிர் எவரு மிங்கில்லை. அவை தம் இனிய குரல் நம்மை இன்பப் பெருக்கி லாழ்த்தி நம் மனத்துறையும் மாசுபோக்கி அமைதியை அளிக்கும். நமக்கு இங்கு எதிரிகள் இருக்கின்றனர். அவர் எவரென நினைந்தால், குளிரும், அதனுலேற்படும் காலநிலையுமே. வாழ்க்கையில் பேரவா, புகழ் விரும்பாத ஒவ்வொரு மனிதனுக்கும் கானகமே உகந்ததென எம் சிந்தையுட் செல்கின்ற கருத்தினை ஏற்கவே எம் மனமுன்னுகின்றது. நம் சிந்தையுட் கடவுட் டன்மை எத்தகையதென்பதை யுன்ன எழில்பெற்ற ஏற்றமுள்ள சிகரங்கள் தம்முள்ளே பலப்பல வகையிற் பயனுறு பணிகளாம், பசியினைத் தீர்த்தல், மனதினை நிறைத்தல், மதியினை விரித்தல் என்ற தன்மைகளை எடுத்து வாரி வழங்குகின்றன. அமைதி, ஒய்வு, தூய்மை எங்கும் மிளிர்கின்றன. பிணைமின் நும் கருத்தை, இத்துடனென," உரைத்தனன். இஃதிவ்வாறுக, இம்மன்னனை நாடு துறந்து காடு நோக்கிச் செல்ல வழிவகுத்த இவன் இளையவனின் நிலை என்னவென் றுய்வாம். "எம் மூத்தவனின் அரசுரிமையைப் பெற யான் வகுத்த வழியே சாலச் சிறந்தது. எம் அண்ணன் மணிமுடி தரித்து மன்னனுய் வீற்றிருந்த அரியணையில் அழகுற, மலர்க்கடவுளென வுரைக்கும் கூற்றுக்களின்படி, மாறனுய் வீற்றிருந்து தெங்குலவு சோலையாம் இத் திருநாட்டில் பொன்னெத்த பூண்முலையாருடனும், குலமஞ்ஞைபோன்ற அன்ன நடையுடைய மகளிருடனும், நீள்மணிமாடம் நிலாவுங் கோலஉருவில் திகழும்கொடிமங்கைகளுடனும், மாவடு வகிரன்ன கண்ணியருடனும், வாருருவப் பூண்முலையருடனும், ஒள்நித்தில நகையும், வண்ணக்கிளிமொழியு மியைந்த வார்குழல் வனிதைகளுடனும் கேளிக்கை நடாத்தி இன்பமுண்டு இறுமாந்திருப்பேன். என் அண்ணனே பேதை, அவன் என்றுமே கற்பெனப் படுவது ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் இயைந்ததேயென்று தம்போலென்னையும் ஒழுக்கத்துடன் வாழ்தலே சிறந்ததென உரைத்தமைக்கு, யானுகிய இற்றைய பார்புகழும் மன்னனளித்த பரிசு காடு நோக்கிக் கடுகுகவென்பதே. உலகத்திலே ஆடவன் தோன்றியதே பெண்டிரைக் காதலித்து அவர் தம்மிடமிருக்கும்

கலைப்பொருட்களைக் கண்டுகளித்து அதனை நுகர என்றுமே தம்மைத் தகுதியுடையோனு யாக்கிக்கொளல் நமக்கென இயற்கையளித்ததெனவுணராது பேதைபோல், வலியிழந்து, தம் மனைவி இருக்கப் பிற பெண்டிரைக் காணலே தவறு; தாயெனவே கொளல் வேண்டுமென்றுரைத்த அறிவிலியின் உரையை நம்மனத்துட் கொண்டால் அதைப்போன்ற புன்சொல் வேறில்லை. அதற்குரிய பரிசை அவன் கானகத்தில் அறிய முயல்கின்றான். சூதும் வாதுமே நமக்கு இத்தகைய உயர் நிலையை யளித்தது, வெற்றி நமதே''யென வீறுடன் அமர்ந்திருக்கின்றனன். வாசகர்களே, இங்குத்தான் நமக்குச் சிந்தனைத் திறன் தேவை. ஆய்மின்! ஓர் அன்னையின் வயிற்றிலே தோன்றிய இருவேறு கோணங்களை நோக்குக. இயற்கையே உன்னையே வினவுகின்றேன். உன் ஆற்றலே உலகை இயக்குகின்றதெனவுரைக்கும் கூற்று உண்மையானல், இரு மகாரையும், ஓர் அன்னையின் வயிற்றில், ஓர் தலை சிறந்த ஆடவனும் அவள் தம் கணவனுடன் மருவியே கிட்டிய, உன் நியதிக்கேற்ப, பத்துத் திங்கள் பாரறியச் சுமந்துபெற்ற மக்களின் மனத்தில் இத்தகைய வேறுபட்ட கருத்தினை ஏன் அமைத்தாய்? அத்தகைய மாறுபட்ட கருத்தினை அவர் தம்முள் அமைக்க உனக்கு வலியுண்டோ? அல்லையேல் உன்னிலும் மேம்பட்ட ஆற்றல் ஒன்றிருந்து உன்னை இப்படி இயக்கச் செய்ததா? உரை. உலகறியட்டும். உனக்கதனை எடுத்தியம்பும் ஆற்றல் இல்லையெனத் துணிந்துரைக்குதும் யாம்.

இயற்கையே! உன் மெய்ம்மையைப் புரியவைக்க உனக்கு வலியில்லையென மீண்டும் உரைக்கின்றேம். இன்னும் கேள். கானகத்துறையும் மன்னனின் மணிமொழி கேள். மண்ணிற் பிறந்து மண்ணிலழியும் மனித இனமுள்பட எல்லா இனங்களும் வாழ வழிவகுத்த வல்லானொருவனுளன். அதையே திருவாசகமுரைத்த மணிவாசகப் பெருமானர்,

> "ஒன்ருய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
> நன்ருக வைத்தென்னை, நாய்சிவிகை ஏற்றுவித்த
> என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
> குன்ருத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

எனத் தீட்டியுள்ளார்.

எல்லாவற்றிற்கும் முதல்வனுகிய இறைவனே பின் கலைகளையும், மெய்ம்மைகளையும், உலகங்களையும், பின்னும் விரித்து உயிர் புணர்ப்புநிலை (சகலாவத்தைகளை) யுறுதற்குரிய கருவி, கரணங்களைத் தோற்றுவித்தனன். அத் தோற்றத்தை அழிக்கவும் ஆக்கவும் ஆற்றல் உடையவன் எவனே அவனே

இயற்கையைத் தோற்றுவித்தவன். அதனையே மெய்கண்டதேவர் சிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்தின்கண்மொழிந்துள்ளார்.

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
அந்தமாதி யென்மனார் புலவர்."

என்றார்.

மணிவாசகப் பெருமானார் தம் மணிவாசகத்து,

"விண்ணிறைந்து(ம்) மண்ணிறைந்து(ம்) மிக்காய் விளங்கொளியாய்
என் இறந்து எல்லை யிலாதானே."

என்று குறித்த பொருளை, நீள்கடலுலகில் வாழும் மக்களே நோக்குக! சிந்தித்தாய்வு காண்க!! இயற்கையென்பதென்னை யென மொழிந்த துரைமகனின் கூற்றைக் காண்க "Nature is the art of god (Browne)," கடவுளென்ற சிற்பியின் கலையே இயற்கை. அவ்வியற்கையை அழிக்கவும் மீண்டும் தோற்றுவிக்க வும் திறனுடையது திருவருளே.

அத் திருவருள், ஆதி இறை எத்தன்மை கொண்டவன் எனத் திருவண்டப் பகுதியில் திறம்படத் தீட்டுகின்றார் மணி வாசகப்பெருமான். நோக்குக :

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியில் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்."

இதற்கு விரிபொருள் யாம் வரைந்த 'திருவாசக விரிவுரை' யிற் காண்க. நம்மொழியாம் தாய்மொழிக்கண் இயற்கையென்ப தென்னை? அதனைப் படைத்தவனெவன்? அவன் தன்மையின் நியதியென்ன? என உரைக்கும் நூற்கள் நிரம்ப இருக்கின்றன. வாசகர்களே! ஒய்வு கிட்டும்போதெல்லாம் தம் சிந்தனையை ஏவி அறிதல் நன்றெனக் கருத்துட்கொண்டால் எப்பொருளுக்கும், எவருரைக்கும் எதிர்க் கூற்றுக்கும் சான்றுடன் பதிலிறுக்கலா மென்பதே யாம் கண்ட கருத்து.

மேலும், இயற்கையின் எழில்களைக் கண்டுகளிக்கும் தன்மையைப் பாரறியச் செய்தவன் கவிஞன்.

உவமைக் கொன்றினை உரைக்கின்றோம். "நான் மலையின் அடிவாரத்திற்குக் காலை வேளையில், கதிரவன் தன் கதிர்களைப்

பரப்பி வானளாவ வெளிப்படுந் தருணத்து, இளந்தென்றலின் இன்னமுதைப் பருக, என்னுள்ள வெழுச்சிகள் அமைதியுற, எவரும் என்னை நோக்கா திருக்க விருப்புடன் உலாவினேன். இவ்வுலவுதல் இடையறாது நடந்தது. இதற்கிடையிற்றான் கண்டேன் அங்கு ஓர் காட்சியினை. என் நெஞ்சத்தோருணர்வை எழுப்பியது. அஃதென்னை? புதர்நிறைந்த கானகத்து மட்குவியலினருகில் மலர்ச்செறிவுள்ள முட்கள் நிறைந்த ஞாயிற்றின் ஒளியால் அதனைப் பொன்வண்டுகள் மொய்த்ததோ ருறைவிடமோ, இல்லை; குறுஞ்செடிகளின் செழுமை மிகுந்த மலர்களே, மலர்க் குவியல்களைத் தன்னுட்கொண்ட தாவரமேயெனக் கண்டேன். தாவரமேயெனத் தம்முட்கொண்டாலும், அதனருகிருந்து பாடுங் குருவியொன்று தன் இன்னிசையை எழுப்பியது; அவ் இன்னிசை என் நெஞ்சினை ஈர்த்தது. யான் அருகிற் சென்றாலோ அது அங்கிருந்து விண்வெளிச் சென்றுவிடுமேயெனக் கண்டு, அதன் குரலினிசையில் என் மனதைப் பறிகொடுத்து, வாள்தடங்கண் வனிதையின் வாழ்த்தொலியோ, முத்தன்ன வெண்நகையின் வாய்மொழியோ, மையார் தடங்கண் மடந்தையின் தேன்மொழியோ, கொங்கைகள் பொங்கக் குழையும் செல்வியின் செம்மொழியோ, கொங்குண் கருங்குழலியின் குரலோ, இல்லை, இல்லை, இல்லை. அதனினும் மேம்பட்ட தொன்றாய்த் திகழ்கின்றதே! கிளி வந்த மென்மொழியாள் இன்குரலோ, இல்லை. மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண் வெண்நகைப் பண்அமர் மென்மொழியாள் மென்குரலோ, இல்லை. எல்லாவற்றினும் மேம்பட்டதாயமைந்து என் அகம் நெகப் புகுந்து அமுதூறச் செய்யும் ஆற்றல் மிக்குள்ளதாயிருக்கின்றதே. மானிடப் பிறவியெனப் பாரினில் தோற்றுவித்து, அப் பிறவியில் பெண்ணினத்திற்கே குரலினிமை தனியுரிமையென ஈந்தது இயற்கையெனப் பிறருரைக்குந் திறனு? இப் புள்ளினத்திற்கு அளித்தது, இல்லை. ஆறறிவு நமக்கேயெனவுரைக்கும் மானிட இனத்திற்கும், குறைந்த அறிவாகிய ஐயறிவுடைய இனத்தின்பால் தனியொரு விருப்புடன் இவ் இன்னிசை அமைத்தது எது? இயற்கையா? இல்லை. இயற்கையென்ற கலையினை உலகத்தோர் கண்டுகளிக்க ஈந்தது எம்மிறையின் அருளே. அதனை அறியவே இவ்வாறு படைத்தனன் என்ற முடிவிற்கே வருகின்றேன். அப்பாடுங் குருவியின் இன்னிசையை அழையா விருந்தாகப் பருகினேன். அதன்பா லெண்ணம் என்னையும் அறியாது ஈர்த்தது என்றுரைத்தல் வியப்பில்லை. அதன் செய்கைகளைக் கண்ணுற்றேன், உரைக்கின்றேன்.

அதன் செய்கைகளைக் காண முயன்றாலும், அஃதிசைத்த இன்குரலே என்னை, மயக்குகின்றது. மயக்கமெனிற் காதல்

மயக்கமா? இல்லை. "என்னைப் படைத்த எழிலார் இறையே உன்னையும் படைத்தனன். நீ அதனை யறியாது இயற்கையின் இனிய கீதமென்று உன்னுகின்றனையா? பேதையே! தவறு. உன் சிந்தனைக்கரிய செல்வனும் கடவுளே எனக்கிக்குரலை யளித்து உன்போன்றவரை அவன் திறனறியச் செய்ததே அறி; அவனையறி. 'அவனன்றி அணுவும் அசையா.' இதனை நீ உலகுக் கெடுத்துரை", என்றன்றே ஒலிக்கின்றது. என் நெஞ்சத்து நீங்காததொன்றாய் நின்றிலங்குகின்றதே. உரைக்கின்றேன், உலகுக்குப் பொறு. உன் செய்கையினை நாளும் நாளுங் கவனித்து ஒருங்கு சேர்த்து உலகுக்குரைப்பேன். நாளை மீண்டும் வருவேன்.

இன்றுமுதல் உன் தொழிலென்ன? நீ செய்யும் வகைகளென்ன? என்று கண்காணித்து அதனை உலகறியச் செய்வதே என் குறிக்கோள். பாடுங்குருவி காலையில் தன் இன்குரலால் ஞாயிற்றின் வரவை வாழ்த்தியது. பின் அருகிருந்த நீர் நிறைந்த கேணியிற் சென்று தன் உடலை அதில் ஆழ்த்தித் தன்னைத் தூய்மைப்படுத்தி இளஞாயிற்றின் வெண்கதிரொளியில் தன் சிறகடித்துத் தன் உடலினுள்ள ஈரத்தினைப் போக்கியது. பின் தன் கூரிய அலகினால் கேணியின் கரையில் ஒதுங்கியுள்ள பாசியைக் கொத்தி எடுத்துப் பன்முறை புதரின் நடுவிற் செடிகளினூடுகொண்டு சேர்த்தது. பின் பிறவியிலே தொழிலாளிபோல் தன்றொழிலைத் தொடங்கியது. கேணியினின்று கொண்டு சென்ற பாசியை ஒரு கூட்டின் வடிவுபோல உருப்பிடித்தது. பின் கானகத்தினூடு பறந்துசென்று சிறிது நேரத்திற் காய்ந்த சுள்ளிகளைக்கொண்டு அக் கூட்டினுள் உருப்பிடித்த கூடு உறுதி குலையாவண்ணம் நிற்பதற்கேற்பச் சுள்ளிகளை வரிசைப்படுத்தியது. இம்மட்டா? அருகினிலுள்ள கேணியின் கண்ணுள்ள இறுகிய தொளியைக்கொண்டு அக் கூட்டின் உட்புறமும் வெளிப்புறமும், கைதேர்ந்த தொழில் வல்லுநன்போல் தன் அலகாலும், காலாலும், பின் சிறகாலும் மெருகிட்டது. பின் அருகில் நிலப்பரப்பிலிருந்த புற்களின் பூக்களால் அக்கூட்டினை அழகுபடுத்தியது. அப்பாடுங் குருவி தன்னை மறந்தநிலையிற்றான் அதன் வினையினில் ஈடுபட்டது. இல்லையேல் என்போன்றவன் அதன் செயல்களைக் கண்ணுற்றதைக் கருத்துட்கொண்டதாயிருந்தால், என் கருவிழிகளினின்றும் எங்கோ சென்றிருக்கும். அச்செயல் முடிந்ததும் விண்வெளியில் விண்ணெனச் சென்றது; யானும் என்னுறைவிடம் நோக்கிச் சென்றேன். மறுநாள் எம் கால்கள் எம்மை அங்கிழுத்துச் சென்றன. செவிமடுத்தேன் இன்குரலை, அன்றைய இசைக்குரலில் ஏதோ துன்பத்தின் சாயல் ஒலிப்பதுபோல்

எனக்குரைத்தது. இன்று பாடுங் குருவியே உனக்குற்ற இன்னலென்னே? உன் குரலில் துயரமே தோன்றுகின்றதே! பொறு. அறிந்துரைக்கின்றேன். கண்டேன். சிறிதுநேரத்தில் தன் கூட்டை நோக்கி அதனுட் சென்று மறைந்தது. எத்தகைய ஒலியும் என் செவிகளில் விழவில்லை. அப்புதரின் அருகிருந்த மரத்தின் உச்சிக் கிளையொன்றில் ஏறி அங்கு நோக்கினேன். அழகான முட்டைகளை இட்டு, அதனையே நோக்கிக்கொண்டிருந்தது. அம் முட்டைகளின் அழகினை எடுத்துரைக்க இயலவில்லை. கதிரவனின் ஒளியில் துலக்கமுற்று அம் முட்டைகளின் வடிவு எடுத்துரைக்கவொன்ணுய் இலங்கவில்லை. கற்பனைக்கும் மேம்பட்டது. பின் நான் என் விடுதிநோக்கிச் சென்றேன். சில நாட்கள் சென்று திரும்பவும் சென்று மரத்தின் உச்சியிலேறி உற்றுநோக்கினேன். பாடுங் குருவி தன் குஞ்சுகள் புடைசூழ அவைகளின் கீச்சுக்குரலைக் கேட்டேன். என்னை மறந்த நிலையிலிருந்தேன். சிறிது நேரத்திற்குள் விண்வெளிச் சென்று, தன் அலகினல் கனியொன்றைக் கொத்தித் தன் கூடு நோக்கி வந்து, தன் குஞ்சுகளைத் தண்ணளியுடன் கண்காணித்து உணவை ஊட்டியது. அக் குஞ்சுகள் தாய்க் குருவியளித்த இரையை அன்புடன் ஏற்றுத் தத்தித்தத்திக் கிள்ளைமொழி பேசிப் பறக்க முயன்றது. சிந்தித்தேன். ஐயறிவு கொண்ட பாடுங் குருவியே! உன் நிலை கண்ணுற்றால் என்னவென எடுத்துரைக்க? இத்தகைய ஆற்றலை உனக்களித்தது யார்? இயற்கையென உரைக்கின்றனரே! இதனை ஒருசாரார். எங்ஙனே ஒப்புவேன்? இல்லை. இயற்கையை ஆட்டிப் படைக்கும் அரியதோர் ஆற்றலே இவ்வாறு உன்னைப் படைத்து, உன்னிடமிருந்து ஆறறிவுடைய மானிட இனம் அறிந்தொழுக ஆக்கியதேயென அறிகின்றேன். உன்னிடமிருந்து எனக்குக் கிடைத்தவை, கடமையைத் தவறாது செய்தல், சோம்பலகற்றல், எல்லாம் படைத்தவனும் இறையைப் போற்றல். இத்தகைய தன்மையை உனக்களித்தவன், எல்லாவுயிர்கட்கும் இத்தகைய திறனளித்திருந்தும் அதனைப் புரிந்துகொள்ளும் தன்மையிலராய், புரிந்தும் எதிர்த்துக் கூறினாலே, தமக்கும் ஒரு தனிஇடமுண்டென்பதைத் தம் கருத்துட்செலுத்திச் செயற்படுவதை எண்ணுங்கால் வள்ளுவருரைத்த வாய்மொழியாகிய,

> " நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும்."

என்ற திருக்குறளை ஆய்ந்து நோக்கினால், ஒருவன் நுட்பமான நூல்பல கற்றாலும், ஊழிற்கேற்றவாறே அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றுமென்ற உண்மையே

புலனாகின்றது. (இயற்கையென்பது, ஆண்டவனின் கலையே. இயற்கைக்குத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லை. அதனை இயக்கு பவனே கடவுள்) மேலும், இயற்கைக்கு மேற்பட்ட வொன்றும் இல்லை. மக்களைக் குழப்பத்திலாழ்த்தி அவரவர்கள் வயிறு வளர்க்கச் செய்த வழி. 'கடவுளில்லை, கற்பனையே' என்று கூறி வரும் என் உடன்பிறந்தோரின் கருத்துக்களைக் கருத்துட் கொண்டால், வள்ளுவரின் உரையே முன்வந்து நிற்கின்றது. அஃதென்னை? ஆய்மின்!

"நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு."

செல்வப் பொருளினை ஈட்டுதற்கு, அவ் ஈட்டு முயற்சிக்கு ஊழ்வகையால் நல்லவை எல்லாம் தீயவை ஆதலும், தீயவை யெல்லாம் நல்லவை ஆதலுமுண்டென்றே சிந்தையிற் றரித்தல் சாலச்சிறந்ததே. மேலும் இதற்குமுன் குறளையும் ஆய்ந்து கொளலறிவே.

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு."

திறம்படச் சிந்தித்தாய்வு காணல் நன்று. வாசகர்களே, கருத்தினை ஊன்றி நோக்குங்கள். பொருள் தெரியும். மேலும் தங்கள் கருத்திலோர் நினைவெழலாம். இவ்வாறு இயற்கையே தம்முட் கொண்டியக்கி வருகின்றதென்ற கருத்தை வலியுறுத்திக் கடவுளாரென்பது கற்பனையே என்றுரைப்பவருக்கு அக்கடவு ளார் உண்மையிலிருப்பரேல், அவரளித்த தண்டனை என்ன வென்று தருகின்றேம் நோக்குக.

"தெய்வமுள தென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க்கு இல்லைத்தம் இன்புதல்வர்க்கு அன்றே
பலகாலும் சொல்வார் பயன்?"

(நீதிநெறி விளக்கம்)

இதற்குப் பொருளைத் துரைமகனும் திரு. ஜி. யு. போப் (G. U. Pope) அழகுறச் சித்திரிக்கின்றார், காண்க. (God punishes those who acknowledge Him when they go astray—and not others. Men correct their own sons.)

"தீயசெயற் செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன ஆகாவாம் நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்."

(நீதிநெறி விளக்கம்)

இதற்குப் பொருளை எளிய நடையில் இயம்புகின்றார் திரு. ஜி யு. போப் (G. U. Pope) Evil is evil even when it prospers. Evil Can't become good) (கவயமா - காட்டுப்பசு).

உடன் பிறந்தோரே! உற்றுப்பொருள் கொள்க. இயற்கை என்பது வானுலகளவும் நிறைந்து மண்ணுலகளவும் நிறைந்து இவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்தவனாகிய, எண்ணிக்கையின் அளவினையும் கடந்து வாய்ப்பு இன்றி விரிந்தவனாகிய இயற்கையைத் தன்னுள் வைத்தியக்கி உலகறியச் செய்துவருபவனாகிய, எம்மை இவ்வாறு எடுத்துரைக்க அளித்தவனாகிய முழுமுதற் கடவுளின் கலையே. இயற்கையின் தலைவன் இறையே. இயற்கைக்குத் தனித்தியங்கும் வலி இல்லை. இதனையே ஒரு பெருமகன் ஆங்கிலத்தில் அழகுறச் சித்தரிக்கின்றான்.

"Nature is a source of great attraction to those whose souls are attuned with God. Artists and poets especially adore nature. It does not necessarily mean that they are all nature mystics. Nature is a nurse, an asylum, a soother to men like Byron, highly strung in nerves, with a mind vivid and active and heart throbbing to imbibe the Juice of Nature, to soothe, and curse the overwrought body, wounded by the tempests of passion. To poets like Wordsworth, nature is a teachar, a harmoniser, a beautifier and an inspirer. Nature is a grand mirror reflecting God's beauty to those who are in tune with God. The green trees and the chirping birds, the grey mountains with their snowy tops and the gliding rivers, the deep ravines and sunlit meadows, the flowers that throw their fragrance in the air and the bushes that shine with lustre of rising sun, are all God's massengers, embodiments of truths scattered all round, breathing an atmosphere of harmony and music and creating that resplendent Beauty, which is God. Nature creates a sense of joy and beauty and from one vision of beauty we pass on to another till we reach the vision of God Himself,—the flight of the Alone to the Alone."

(Joyous Mysticism, to lighten man-kind into the worship of God. Part II by Minocher K. Spencer.)

வாசகர்களே! உடன் பிறந்தோரே!! சிந்தித்தாய்வு காண்மின்! பிணைமின் கருத்தை எம் கருத்துடன்! காண்மின்!

நுவல்மின்! இயற்கையின் எழிலைக் கண்டு களித்து, அதனைப் படைத்தாட்டும் இறையை ஏத்துமின்! இதனை மனத்துட் கொண்டால் யாமுரைத்த கூற்றுச் சரியெனக் கொள்வீர்களென எண்ணுகின்றேன். எல்லாம் வல்ல இறைவனை ஏத்துமின்! மணிவாசகப்பெருமானின் மணிமொழியைக் கருத்துட்கொண்டு "எல்லாம்வல்ல இறைவனே தலைவன்," என்று வணங்குதல் நன்று. நோக்குமின், கீழ்தரும் பாவினை.

"போற்றி,இப் புவன நீர்தீக் காலொடு வானம் ஆனாய்
போற்றி,எவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய்
போற்றி,எல் லாவு யிர்க்கும் ஈறாய்ஈ றின்மை ஆனாய்
போற்றி,ஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கை யானே."

—திருவாசகம்.

இத் திருவாசக மணிமொழிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த தன்மையினைக் காண்க.

Hail! Thou who art earth, water, fire, wind, ether too!
Hail! Thou, all life's phenomena,—Thyself invisible
Hail, All living beings' End,—Thyself without an end!
Thyself reaching through all, by senses five unreached!

(G. U. Pope.)

இதனைச் சிந்தித்தாய்வுகாணல் நன்றென யாம் வேண்டி விரும்பி, எல்லாம் வல்ல இறைவனை வணங்குதல் நன்றென வேண்டுகோள் விடுத்து, இயற்கையை உலகுக்களித்தவன் கடவுளே என்ற கருத்தை வலியுறுத்தித் திருவருளைத் திறம்பட வணங்கி விடைகொள்கின்றனம். விருப்பிருப்பின் தொடரும்.

மறைமலை.

ஊதடா, சங்கு!

[திரு. ஆ. துரைக்கண்ணு]

சூதடா இந்தி நமையாளல்; இந்நிலையுந்
தீதடா நீடித்தல்; நீ, எனவே—ஊதடா
உந்தும் தமிழுணர்வா லூழியெனுங் காலக்கே(டு)
இந்திக்கிங் குற்றதெனச் சங்கு!

---

*திரு. வி. க. அவர்களின் கடிதம்

திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆணையர் திரு. சுப்பையாபிள்ளைக்குத் திரு. வி. கலியாணசுந்தரன் விரும்பி வரைய இயக்கி வரைவது.

செல்வரே! இன்று நம் தமிழ்மகன், தமிழன்னையின் அருந்தவப் புதல்வன், நாட்டினிலோர் நன்னயம் கொண்டு வாழ்ந்த நல்லோன், நாட்டினிலே அன்னையின் வளத்தை யள்ளி வழங்கிய வள்ளல், செந்தமிழ்க் காவலன், செவ்வேளினருள் கொண்டோன், தென்னகத்துத் திலகம், சிவநேசச் செல்வன், பல நூலும் கற்றோன், பாரிலே தனக்குநிகர் எவருமில்லையென வாழ்ந்தோன், தமிழாம் தாய்மொழிக்கு என்றுமே இனிமையுண்டென யெடுத்தறைந்த இளையோன், கற்றறிந்த நூற்களே இல்லையென வுரையாது, எக்கருத்திற்கும் நூற்சான் றெடுத்துரைக்கும் அறிஞன், திராவிடமே தூங்காதே, தமிழை நோக்கு, தமிழ் வளத்தை நோக்கு, இனிமையை யெண்ணு, எம்மொழியின் இனிமை எம்மொழிக்குமில்லை, தித்திக்கப் பேசிச் செந்தமிழின் சுவையையறி நாடே யென்றறைந்த தோழன், வேதத்தின் அசலமெனப் பேர்கொண்ட பேரறிஞன், வேதத்தின் பொருட்கள் என்னையெனத் தமிழிலே எடுத்துரைத்த மறையே! மக்கள் தம் மனத்து உணர்வினை யூட்டிய கோவே! மறைமலையே! உன்னைக் குறை கூறுதலென்றதோர் கொள்கை யுருவாவது, மறைமலையென்ற வொன்று மறையவில்லை, மறையாமலையாக வளர்கின்றதெனக் காட்டவே. மறைமலையே! நீ மண்ணுலகிலிருந்து போந்த நாளாம் இந்நாளில் நீ மறையாமலையாக இருக்கின்றனை யென்பதை எடுத்துரைக்கத்தான் இயக்குநர்வழி யுரையாடி வருகின்றாயென்பதனை உலகு உணர்ந்துதான் வருகிறது. இன்று நீ இப்பூவுலகினின்று மறைந்தனையே யல்லாது, காணுவுலகிலோர் சோதியாய் நீ வாழ்கின்றாய் என்பதனை யறியட்டும் திராவிடம்.

தமிழணங்கே! தமிழ் மகனே! மறைமலையை மறவாதே. தென்னகமே நீ உறங்காதே, கற்றறி, கருத்தாம் மறைமலை மொழியினை, நூற்களை. எம்முலகில் வாழ்கின்றான், இறக்கவில்லை; இருக்கின்றான். அறி, கற்றறி, ஆய்ந்தறி, சுவையறி, தெவிட்டா இன்பமாம் நூற்களாமவன் வரைந்ததை, தென்னகத்துத் திலகமவன் வரைந்ததை. செந்தமிழ்ச் செல்வியே! நீ அவன் திறனை நாடறிய வை, உறங்காதே, விழித்தெழு.

ஆங்கில நாள் 15-9-59

காணுவுலகவாசி
திரு. வி. க.

* இயக்குநர்வழி மறைமலையடிகளைப் பாராட்டி வரைந்தனுப்பியது.

*கலைமகள் வணக்கம்

தொழுவார்க்கிரங்கித் துணைபுரியும் அன்னையே! வாணியே! வீணையேந்திய வளைக்கை விளங்க வீறுகொண்டு அருளளிக்கும் தாயே! விதியென்ற ஒன்றைத் தடுத்தல் மதிகொண்டென உரைக்கும் மாண்பீந்த தலைவியே! மதிதனைத் தரத் தனியதோராற்றல் கொண்டிரங்குவார்க் கருளும் தலைவியே! தலைவா என அழைத்தாலும், தலைவியாம் நீயுமுடனிருந்தருள் செய்யுமன்னையே! மறையே யென விண்டாலும், மறையை யுணர அறிவளிக்கும் அன்னையே! விதிதான் வினைப்பயனாய் வந்துதித்ததோவென நினைந்தாலும், விதியல்ல, மதியே, வினைப்பயனாய் வந்துதித்ததென உணரும் ஆற்றலளிக்கவல்ல தலைவியே! உன் கலையாம், மொழியி னினிமை தன் செவி மடுத்து இனிது, இனிது, எதனினும் இனிது, அமிழ்தினும் இனிய தமிழ் மொழியெனத் தன்னுட்கொள்ளும் ஆற்றலும் உன் கருணை கொண்டல்லவோ? இறைவியே! கொத்திக்கொத்திக் குருக்கு முளைக்க வைத்தாலும், குருக்கே நீ ஏன் வளர்ந்தாய், கொள்ளன்றோ நாம் விதைத்தோமெனப் பகுத்தறியப் பண்பீந்த பாவையே! நாளெல்லாம் உனை நினைந்தே வரும் அன்பர்க்கும், வறுமையே நீயளிக்கும் அருளோவெனத் தமிழினம் நினைக்கவைக்கும் நீதிதான் கொடுத்தனையோவெனக் குறைபடும், தெரிவிக்கும் தோன்றுதலுக்கும் மதியெனப் பெயரிட்டு மானிடர் மகிழாது, தொல்லை கொடுக்க வந்ததே என நினைத்து ஒட்டத் தன்மையும் ஈந்த தாயே! தொழுதால் அருள் செய்வேன், தொல்லைவிட்டொழியென உரைக்கும் கருத்தீயும், கருமம் நீ கொண்ட வண்ணமென்னை? வாணியே! நாவாலுன்னைப் புகழ்ந்தாலும், நீள்நிலத்து எதிருரைக்க எவரெவருளர் என வாதிடத்து துணையளித்த தோகை வேலனே துணைக்கொண்டு செந்தமிழை எடுத்துரைக்கத் திறனளித்த தலைவியே! தோற்றத்தில் வாணியென அழைத்தாலும், அறிவுக்கோர் அருங்கடலா யமைந்து உன் அருளீந்து அவர்க்கெனத் தனியொரு கருத்தீந்து, கலக்கமென்னும் அலையினையும் இயைத்தளித்து, அறிவென்னும் கருவி கைக்கொடுத்து, அறியாமற் றிகைக்கவைக்கும் ஆற்றலும் அளித்து வரும் அன்னையே! வேற்றுமையென்ற ஒன்றையளித்து, விலங்கினம், புள்ளினம் என்பதைப் பகுத்தறிவென்ற ஒன்றினால் அறிய வைத்து, வேடுவனே யான், விலங்கினமே! புள்ளினமே! உன்னை வெருட்டுதலே என்திறனெனக் கருத்துட்கொள வைக்கும்

---

* இயக்குநர்வழிக் கலைமகள் விழாவன்று வரையப்பெற்றது.

அறிவினையுமீன்ற அன்னையே! பாரினிலே, நமக்கெதிரெவருளர், நாம் விடுக்கும் வினாவினுக்கு விடையளிக்க எவருளரென்ற இறுமாப்பும் அளித்த வாணியே! கலையென்ற ஒவியத்திலுன்னைத் தீட்டிக் கவினுறு கன்னியாம், கலைமகள், நாமகள், கல்வியினை அளிக்கவல்ல அரசியே! எனக் கருத்துட்டோன்றக் கருத் தளித்த கருணைபொழி வாரிதியே! தலைவியே! இறைவியே! வாணியே! கலைமகளே! நாமகளே! உனக்கெனக் கொண்டாடும் திருநாளாம் இந்நாளில் நீ செய்வதென்னையென, இனியென, எளியனும் மறைமலையின் கருத்துட் கொண்ட கருத்தினைக் கைகூப்பிச் செம்பொற் குதிதாளில் பொருத்திப் புகலுகின் றேன். வாணியே! உன் வளமெல்லாம் வையத்து வளங் கொழிக்க அருளளித்து, வேற்றுமையென்ற வேழத்தை, உன் கைக்கொண்ட வீணையென்ற அங்குசத்தால் அகற்றிவிடு. கலை மகளே! கருத்திலே, நற்கருத்தே எழவைத்து, நாமென்றகம் களையக் கருணைசெய். நாமகளே! கருத்துக்கள் தன்னகத்தே கொண்டு, எடுத்துரைக்கத் திறமற்ற எளியராம், எம்மனோரை, எடுத்தியம்பத் திறனளியே, தாயே என வணங்குகின்றேன். எக்கருத்து எங்கட்குதித்தாலும், நற்கருத்தாயுதித்து, நாவால் எடுத்துரைத்தாலும் நாட்டோர்க்கு நலனெனக் கொள்ளும் திறனுமீயே யெனப் போற்றுகின்றேன். குவலயத்துக்குற்ற கல்வி என்னும் தனித்திறனை எவருக்கும் அறிய ஆற்றலில்லை யெனக் கூறும் மொழியினைத் தகர்த்தெறிந்து, குவலயத்துக் கற்றாரேயுளரென்னக் கல்வியினை எவர்க்கும் கொடுத்தருளிக் கல்வியே எப்பொருளிலும் சிறந்ததென அறியவைக்கும் அறிவினை அளி, அன்னையே என மறைமலை வணங்குகின்றேன்.

நின் வளமில்லையெனில், நீள்நிலத்து நின்றெதிர்த்துரை யாடும் ஆற்றலே அற்றுவிடுமென அஞ்சுகின்றேன். அன்னையே! கல்விக்கடலே! கருணை பொழி வாரிதியே! நின்னருள் நீள் நிலத்தென்றுமே நின்றிலங்கத் துணைசெய், வணங்குகின்றேன்.

வாழி! அன்னையே! உன் கல்விவளம் சிறக்கக் கொழிக்க.
வாழி! வாணியே! உன் ஞானவளம் சிறக்கக் கொழிக்க.
வாழி! கலைமகளே! உன் கலைவளம் சிறக்கக் கொழிக்க.
வாழி! நாமகளே! உன் நாவளம் சிறக்கக் கொழிக்க.
வாழி! வையகஞ் சிறக்க வாழி! எவ்வுலகும் சிறக்கவாழி,
ஏந்திழையே!

காணாவுலகவாசி
நெல்லை, மறைமலை.

*பண்டிதமணியவர்கள் முடங்கல்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவமைச்சரே, சென்னையம்பதியுறை சீலரே, திரு. திருவரங்கத்தினிளையரே, சைவ சித்தாந்தத்தையே யென்னையென ஆராயப் புகுந்தோர் குழுவினை ஆட்டி வைக்கும் அண்ணலே, (ஆவியுலகை ஆட்டிப் படைக்க எண்ணினர் மறைமலையடிகளார், அவர்க்கென எங்கிருந்து கிடைத்தனனோ இவ்விளைஞன் ஆட்டி வைக்கின்றான், தாம் வரைந்திருக்கின்றீரென. எம்மை நேர் முகத்தான் அழைத்தால், நாம் என்ன முடியாதென உரைப் போமோ என்னவோ எனக் கருதி மறைமலையடிகளாரைக் கூப்பிட்டு, அண்ணா, திரு. சுப்பையா பிள்ளையவர்கள் வரைந் துள்ளபடி இன்று எவரை அழைப்பதெனக் கேட்டு, தம்பி பண்டிதமணி கதிரேசச் செட்டியாருக்கு இன்று முதலிடம் கொடுவென ஆணையிட, பண்டிதமணி கதிரேசச் செட்டியார் வரவேண்டும் என, இயக்குநர் விளிக்க, விரைந்தோடி வந்தேன். யாமே கதிரேசச் செட்டியார் என்று உரைக்கவும், இயக்குநர் நம்மிடமே வினாத்தொடுக்க விழைந்து, உம்பெயர் மு. கதிரேசச் செட்டியாரா? அல்லையேல் கதிரேசஞ்செட்டியாரா? பின்னும் கதிரேசன் செட்டியாரா? சொல்லும். திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் கதிரேசன் செட்டியாரென வரைந்துள்ளனரே கூறுக, நும் இயற்பெயரை யென வெருட்டத் தொடங்கிவிட்டான்.) எளியனும் எம்மை மறவாது எம்மிடமும் குற்றமில்லாத தனித் தமிழ் நடையிலே கட்டுரை வேண்டுமென விருப்புக் கொண் டோரே, திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்களே! அடியனும் நகரத்தார் குழுவினன், இன்று இயக்குநர் கையாட்டுப் பாவை, நும் அன்புத்தளைக்குக் கட்டுப்பட்டவன், இயல்பிலே எளிய நடையிற் சொற்பொழிவாற்றுபவனும், பண்டிதமணி, (இவ்விருது நாமாக வைத்துக்கொள்ளவில்லை ஐயா, நீங்களாகத் தந்ததே) மு. கதிரேசச் செட்டியார் திருவருளை வேண்டிச் செலுத்தும் சிரந்தாழ்த்தும் நும் கண்ணுக்குப் புலனாகா முறையில், வணக்கம், வணக்கம், வணக்கம்.

நல்லோய், இன்று நாமாகிய கதிரேசச் செட்டியார் என்ன தலைப்பில் கட்டுரை வரைதல் நன்றென நினைந்த காலை "தமிழன்னை" என்ற தலைப்பில் கட்டுரை வரைதல் நன்று. கதிரேசா! நீ அன்னையின் தன்மை, மொழி வளம் இயைத்து நீ எது விரும்புகின்றாயோ, அதை வரையென மறைமலையடி களார் மனமுவந்துரைக்கப் பெரு விருப்புடன் நாமும் அதைக் கருத்துட்கொண்டு வரைய விரும்பித் திருவருளே, செவ்வேளே

* நெல்லை இயக்குநர்வழி வரப்பெற்றது.

துணைபுரியென வணங்கித் தலைப்பட்டனம். நாம் வரையுங் கட்டுரையின்கண் பிழை, வடமொழி, சந்தி பிரிப்பு, குறியிடல் ஆகிய தவறிருப்பின் இவ்வினைஞனைக் குறைகூறாது, தாமாகிய, சழகவமைச்சரே அதற்குரியரென, நாமாகிய கதிரேசச் செட்டியார் வரைகின்றோம்.

திரு. சுப்பையாபிள்ளை திருவேளினருளால் பலகாலம் பாரினில் சிறக்க வாழ்ந்து கழகத்தை நன்முறையில் செயலணியின் துணைகொண்டு, சிறக்க நடாத்த சிவவேளே அருள் புரியென வணங்குகின்றேம்.

மு. கதிரேசச் செட்டியார்.
காணுவுலகவாசி,
நெல்லையப்பருறையும் நெல்லையம்பதி.

ஆங்கில நாள்,
16-10-59

தமிழன்னை

[பண்டிதமணி]

தமிழன்னை என்பவள் எவள்? நம் அன்னையும் தமிழன்னை தானே. தமிழ் மொழி பேசும் அன்னைகள் யாவருமே தமிழன்னைகள் தாமே! இதற்கெனத் தனித் தலைப்பிடுதல் ஏனோவென ஐயமெழுதல் இயற்கையே. இருப்பினும், வாசகர்களாகிய நீங்கள் காணுவுலகினுறைந்து வரும் பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார் உரைக்கும் முறையே வேறு. அஃதென்னை, நம் முலகத்து (நம் பூவுலகத்து) அன்னைகளுக்கெல்லாம் மொழி பயிற்றுவித்த தமிழ் என்னும் இனிமையைத் தன்னுட் கொண்டவளாம், அன்னையாம் தமிழன்னையே யாமெடுத்துக்கொண்ட பொருள். எம்மொழிக்கீடு எம்மொழியுமில்லையென எம்மொழி மொழிபவரும் உரைக்கலாம். ஆனல், எம் அன்னையாம், இயற்கை மொழியாம் தமிழுக்கீடு எம்மொழியுமில்லையென, யாமாகிய கதிரேசச் செட்டியார் உரைக்கின்றேம். ஏன்? செட்டியார் தமிழ் மகனகப் பிறந்து, தமிழிலோர் தனி விருப்புக் கொண்டு பயின்றதின் விழைவா? அல்ல தமிழ் மகனும் செட்டியார், தமிழன்னையாம் தமிழ்மொழிக்குச் செய்யும் தொண்டா? என்னையெனப் பிறமொழித் தொடர்பாளரும், ஏன், நம் தமிழன்னையின் தவப்புதல்வர்களென வாழுந் தன்மையாளர்களும், நம் தமிழன்னையின் சீரிளமைத் திறம் அறிய இயலாத் தன்மையாளர்களும், தம் முள்ளுமல்லாது, அரங்கிலேறி ஆரவாரத்துடன் பெருமுழக்கஞ் செய்வதுந் தமிழர்கள் கண்டு வருதலில்லையோ? இருப்பினும் தமிழன்னையின் தனித்திறன் என்ன? அவள் கோலமென்ன? அவளின் அற்றைய நிலை என்ன? இடைக்காலத்து நிலை என்ன?

இற்றைய நிலை என்ன? என்றுமே நம் தமிழன்னையின் தன்மை என்ன? அவள் தன்னிலை திரியும் இயல்புடையளா? இல்லையேல் தன்னிலை திரிய முயலும் தன் இனத்தின் தொழிலுக்கு இசைவுள்ளவளா? அவ்வாறு அன்னை இசைவுகொண்டவளாயின், நாமாகிய நம் தமிழினம், தமிழன்னை, எம் அன்னை என்றுமே தன்னிலை திரியாளென்று உரைக்கும் வழக்கென்ன? சிந்தியுங்கள்; சிறக்கச் சிந்தனையை ஆராய்தல் நன்று. எம் அறிவுக்கெட்டிய மட்டும் விரித்துரைக்க அஞ்சுகின்றேம். ஏன் நம் உடன் பிறந்தாராய தமிழினத்தின் இற்றைய நிலை கண்டே. இற்றைய நிலையில் வந்துற்ற கேடென்னை? உரையுஞ் செட்டியாரே என்றால் யாம் எம் மூலகுக்கேகுவோம். இருப்பினுஞ் சான்றுடன் பகர வரலாற்றின் வளத்தினை வாயுரையா யுரைக்கத் திறம் எமக்கில்லையே, என எண்ணினும், இயக்குநராம் இளைஞன்வழிச் சிறிது உரைக்கின்றேம். திருவருளை, செவ்வேளை உன்னி.

தமிழன்னை என்றுமே தன்னிலை திரிய விழைந்தவளல்லள். என்றுமே கன்னியாய்க் கவினுறு பொலிவுடன், கருத்திலே இனிமையும், மனத்திலே மணமும், தன்னதரத்துச் செந்தமிழின் சொற்சுவையும் நின்றிலங்க, இளையளாய், என்றுமே தன் கோலத்தைக் காண்போருக்குக் கவினுறு கன்னியாய்க், கருங் கூந்தலையுடையளாய்த், தன் நெடுங் கூந்தலிலே தனியதோர் கருமையே கொண்டவளாய்ப், பிறைநுதலிற் புருவ இடையில் வெண்ணீற்றுச் சிறுகோடிட்டு அதனருகில் செஞ்சாந்துப் பொட்டிட்டுப் பால்போன்ற வெண்மை கொண்ட முகத்தினளாய்க், குனித்த புருவமும், குழையுஞ்சுருள் தோடும் அணிந்து, அத் தோட்டின்கண் ஒன்பது மணிகளாம் சுவைகளைப் பொருத்தி வள்ளையின் தண்டென்னுஞ் செவிகளிலணிந்து, தன் திருமுகத்து முழுமதியோவென ஒளிமிளிரத், தன்னிதயத்துக் கருத்தெல்லாம் தன்னிதயத்துறும் தமிழ்மொழியின் வளமெல்லாம் தன் முகத்துத் தோன்றப் பொலிவுடன் விளங்கும், என்றுமே நின்றிலங்குந் தன்மையுடன், என்றுமே கன்னியாய், 'அகத்தினழகு முகத்திற்றெரியும்' என்ற மூதுரைப்படி, கவினுறு, மெல்லியளாய், மல்லிகைக்கொடிபோற்றுன் விளங்குகின்றுள். தன் சீரிளமைத்திறன் குறையாதென யாமாகிய கதிரேசச்செட்டியார் உரைக்கின்றேம். எம்மனத்து எழுந்து வரைந்த அன்னையின் கோலத்தில், தவறிருக்குமெனத் தாங்கள் குறைகூறினல், யாமுரைக்கின்றேம்: யாம் கம்பரல்லம், வில்லிபுத்தூரரல்லம், நக்கீரரல்லம், உணர்ச்சி வசப்பட்ட உம்போன்ற ஓர் உடல் நீத்த ஒருமகனேயென உரைக்கின்றேம். அவ்வாறு தாங்கள் எம் கருத்துச் சரியல்லவெனத், தெற்றெனப் பொருள் கொளின். யாமதற்குரியரல்லம், எம் உணர்வின் உந்தலே யெனக் கூறுவேம்,

மேலும் அன்னையின் முகத்தினை முழுமதியென மொழிந்தும், அம் முழுமதியிற் றோன்றும் களங்கம்போல், அன்னையின் பிறை நுதலிற் பொலியும் செஞ்சாந்துப் பொட்டெனப் பொருள் கொளினும், அன்னையின் தோற்றம் உலகுக்கு எடுத்துக்காட்டுந் திறனுடைத்தாய்க் கருணை பொழி கன்னியெனத் தோற்றுவிக்கும் கயல் விழிக் கண்களின் கலை என்ன? அக் கயற்கண்களிலே பரிவு, அன்பு, கருணை, ஈகையே மிகுந்து தோன்றும். அன்னையின் அணிகலனும் அவள் நெஞ்சத்தணிவதென்னை? முத்தமிழையே (இயல்இசைநாடகம்) அணிகலன்களென அணிந்திருக்கின்றனள். அதற்குமேல் வரைய, இயக்க எளியேமுக்குத் திறனில்லை. சிற்றறிவுக் கெட்டியவரை வரைந்தேம். தமிழன்னையின் தோற்றம் இவ்வாறு இருப்பதைக் கண்டுகொண்டான் பழந்தமிழன். அன்னையின் புதல்வரும் புதல்வியரும் இயற்கையில் தாய்மொழியாம் தமிழ்மொழியே தம் மொழியெனக் கருத்துட்கொண்டே வாழ்ந்தனர் அக் காலத்து. இதற்கிடையிற்றான் புற்றீசல்போற் புகுந்தனன் இனம்புரியா மொழிபுரியா இனத்தினன் நம் தமிழகத்து. நம் தமிழகமென்பது அக்காலை அகண்ட இந்திய நாடே. இங்ஙனம் இடைக்காலத்துக் குடிபுகுந்தோரினத்தின்பால், பண்டைத்தமிழ் மக்கள், தம் தமிழன்னையின்பாற் றோன்றும், பரிவு, அன்பு, கருணை, ஈகை என்ற தன்மைகளைத் தம்மகத்தே கொண்டவர்கள், வரும் விருந்தோம்புதலிற் றனித் திறம்கொண்டு வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் இடைப்புகுந்த இனத்திற் காதரவு அளித்த முறைதான் அன்னையாம், நம் தமிழன்னையின் தன்மைகளை மறக்கத் தொடங்கினர். அதன் விளைவே, நம் தமிழன்னையின் சீரிளமைத்திறத்தினை இயக்குந் திறனற்றுப் பிற இனத்தினரின் புரியா மொழியிலே தம் கருத்தைச் செலுத்தினர். அம்மட்டுமா, பெண்களின் தனிக்கவர்ச்சியாம் அழகினுக்கும் அழிவுறு வழியாம், அவ்வினத் தொடர்பினுல் விளைந்த நன்மையென்ன?

பழந்தமிழ்நாட்டு மங்கையரின் தன்மைகளை எடுத்துரைக்கப் புகுந்தால் அவ்வினத்தின் பெருமை வரைதலில் அடங்கா; வாயினுல் எடுத்துரைக்கவும் இயலா. கற்பென்பதே கன்னியர்க்கணிகலம், மங்கையர்க் கணிகலம்" என்பதை எடுத்துரைக்கத் தேவையில்லை. “கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை” என்ற மூதுரையை மெய்ப்பித்த பெருமை தமிழகத்திற்கேயென வீறுகொண்டிருக்குங்காலை இன்றல்ல, அன்றே. தமிழணங்கின் தனிக் கோலமென்ன? இளம்பருவங் கடந்து பூப்பெய்தும் பருவமடையுந் தறுவாயிலிருக்கும் கன்னியைக் கண்ணிமைபோற் காத்துக் கருவூலமெனக் கருத்துட்கொண்டு, காலையிற் குளிப்பித்து, முகத்திற்கு மஞ்சள் பூசி இறைவணக்கம், திருமகள் வணக்கம், கலைவாணி வணக்கம், திருவிளக்கு வணக்கம் பயிற்றுவித்து, வீடு

மெழுகுதல், கோலமிடல், உணவு சமைத்தல், இடைவேளையிற் கல்வியறிவூட்டல், பெரியோர்களிடம் எம்முறையிற் பழக லென்பன போன்ற அருங்கலைகளைப் பயிற்றுவித்துக், கட்டிளங்காளைகளின் கண்ணிற்படாது, கற்பென வொன்றை எடுத்தியம்பித் திருமகளாய் விளங்கவைக்குங் கலையினை அன்றே கண்டனர் தமிழ்ப் பெருமகளிர்; தமிழன்னை, தன் மொழியாம் தண் தமிழைப் புகட்டிய கன்னியர்கள். அக் கன்னியர்கள் முகப்பொலிவு முழுமதி நிகர்த்திருக்கும். செஞ்சாந்துப் பொட்டிட்டு, பூப்பெய்தியதும் நாணமென்ற ஒன்று இயல்பிலே அமைந்திருந்தும் மீக்கூரப்பட்டு இல்லத்துத் திருமகளாய் இலங்கிவந்தனர். அஞ்ஞான்று, அக் கன்னியர்கள் இல்லின்கண் அமர்ந்து குடும்பக்கலைகள் குவலயத்தோர் நாணப் பயின்று, இடைவேளைகளில் அவரவர் மனதுக்கியைந்தபடி இறைவணக்கமும், பழந்தமிழ்நாட்டுப் பெண் திலகங்கள் வரலாற்றினையும் கற்று அறிவிற்சிறந்தாராதற்குரிய பழம் பெருந் தமிழ்நூற்களையும் கற்று அறிவிற்சிறந்தவராயும், மொழிப் பற்றுடையராயும், இனப்பற்று உடையராயும், தமிழ் மொழியின் அன்னையாம், தமிழன்னைபாற் பெருவிருப்புக் கொண்டு கன்னிகையர் கன்னித் தமிழைக் கற்று, கற்பெனப் படுவது தனியதோரிலக்கணமாய்த் திகழ வாழ்ந்தனர். கற்பெனப் படுவது பண்டைக் காலத்திலிருந்தே, தமிழ்மொழி என்று தோன்றியதோ அன்றிருந்தே எந்நாட்டிலுமில்லாக் கற்பெனப் படுவதைத் தன் சிறந்த அணிகலனாய்க் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழன்னையின் தவப்புதல்வியராம், தலைசிறந்த பெண்ணினம். நாட்டின் பெருமைக்கும், தமிழன்னையின் பெருமைக்கும் சான்றாய்த் திகழ்ந்தனரென்பது மிகையாகாது. பெண்ணினத்தின் பெருமை இத்தகைத்தெனின், ஆணினத்தின் பெருமை அதற்குக் குறைந்ததோ என யாமாகிய கதிரேசச்செட்டியார் வினவுகின்றேம். அக்காலை பெண்ணினத்தின் பெருமையை எடுத்துவரைந்தகாலை, ஆணினம், எங்ஙனம் வாழ்ந்ததென விரித்தல் நலமெனக் கருத்துட்கொளினும் விரிவுரை, பெருவுரையாகப் பெருகிக் காண்போர்க்கு வெறுப்பினை யளிக்குமென நினைந்தே, என் சிற்றறிவுக்கெட்டியவரை, சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் சாலச் சிறந்ததென நினைந்து திருவருளை நினைந்தே வரைகின்றேம். ஆணினத்தின் தோற்றமெங்ஙனம்? காண்போர் குறைகூறாத் தோற்றமும், முகத்திலோர் தனிப்பொலிவும், கோழையல்லாத கோமகனுக்குரிய தோற்றமும், வீரப் பொலிவும், காண்போரைத் தன்பாலிழுக்கும் தனியதோர் கவர்ச்சியளிக்கும் கருவிழிகளும், பரந்த நெற்றியும் அந்நெற்றி நிறைய நீற்றுப் பொலிவும், பசுஞ்சாந்துப்பொட்டும், அழகென்ன அரும்பு மீசையும், தனித்ததோர் பொலிவுடன் ஆண்மகன், மள்ளனெனத்

தனிப்பண்புடன் அருளும், இரக்கமும், ஆண்மையுடன் இயைந்து பெண்ணினமே கண்டு பெருமை கொள்ளும் பொலிவுடன் கருமையோ, கருவண்டோவென உரைக்கும் கைக்கடங்காக் குடுமியுடன் கைவீரக் களிறுகளாய்க் காளைகளாய்க் கல்வி கேள்விகளிற் சிறந்தவராய்க் கற்பெனப்படுவது இருதிறத்தாருக்கும் இயைந்ததேயெனக் கருத்துட்பொருத்தித் தத்தமக்குத் தகுதியெனக் கண்ட வினையினுட் புகுந்து, கிட்டுமோர் இடைப்பொழுதிற் றமிழ் நூற்களைக் கூடி ஆய்ந்தும், நாட்டிற்கு நன்மை பயக்கும் வழிகள் எவையென ஆய்ந்து, நாட்டுத் தலைவனுக்கு எடுத்தறைந்தும், வரும் விருந்தோம்பியும், இறைவணக்கத்தினை அதனதன் காலத்து நெறிபிறழாத் தன்மையுடன் கடவுட் டன்மையின்கண் பெருவிருப்புச் செலுத்திப் பெருமையுடன் வாழ்ந்தனர். தமிழன்னையின் தவப்புதல்வர்கள், ஆண்மை நிறைந்த ஆணினம், கூட்டுறவே அவர்தம் தலையாயதோர் கடனெனக் கொண்டும், கலை வல்லுநர்களாயும், நாட்டுப் பற்று, மொழிப் பற்று மிகுந்தவராயும் வாழ்ந்து தமிழன்னையின் பெருமையைத் தம் பெருமையெனக்கொண்டு வையத்து வீறுடன் வாழ்ந்தனர்.

இவ்வாறு தமிழன்னையின் செல்வரும் செல்வியரும், தனித் தமிழிலோர் அவாக் கொண்டு வாழ்ந்த காலைதான் புற்றீசலெனப் புகுந்த பிற இனம், விருந்தோம்பலென்ற தன்மையுடன் தனித்ததோர் தலையாய கடனெனக் கொண்டு வாழ்ந்த தமிழன்னையின் தவப் புதல்வர் புதல்வியரைத் தம்நிலை திரியச் செய்து, தம் மனையுறை தமிழன்னைக் கோர் குறையினுக்கு, தாமே வழி வகுக்கின்றோம் என்ற தன்மையை உணராதவராய், விரித்த கண்ணியிற் கருத்திழந்த கருமத்தினும் வலிகுறைந்து வாழத் தொடங்கினரென்று வரலாற்றிலே வரையப் பட்டதெனப் பகர்ந்தாலும் இதை இயக்கும் காணுவுலகவாசி கதிரேசச் செட்டியார் கழறும் முறையே தனி, தமிழ் மக்கள், தமிழன்னையின் தவச்செல்வங்கள் கன்னித் தமிழின் பெண்மையைப் பேணுதொழிந்தனரே, இஃது அவர்தம் குறையல்ல, தமிழன்னையே! இஃது எம் தமிழினமாய், நின்ற உன் குழவிகளின் குறையல்ல, உன் குறையே; ஏன் அருள், பரிவு அவர்க்குப் பயிற்றுவித்தனை? உரை; உனக்கு உன்னினத்தாரால் ஏற்படு மிழுக்கையும் ஓர் அணிகலனென அணிய அருள்கொண்டனையோ? இக் குற்றத்திற்குரியர் யாமல்லம், தமிழன்னையே நீ தான்.

இவ்வாறு உன்னைக் குறை கூறினதற்காக நீ வருந்துவையோவெனில் வருந்தாய்! தெரியும் எனக்கு. உன் குழவிகள் இழைத்த குறையினைப் பொறுக்க, நீதான் பொறுமை யென்ற அணிகலனை இயற்கையிலே அணிந்திருக்கின்றனையே! தமிழன்

னையே, நீயே உன் தமிழ்ச் செல்வங்களை இத்தகைய தன்மையி லீடுபடுத்திய தன்மையே தவறு. அன்னையே உன் குழவிகளை உன்பாலாக்குந் திறனுனக்குண்டு. பெற்ற தாயே, பிள்ளைகளின் பிழை பொறுத்தற்குரியளென்பதுவும் எமக்குத் தெரியும். தாயே தயவிற்சிறந்தவளே தனக்கு நிகர், தன் மொழிக்கு நிகர் தானெனத் தனித்திறன் கொண்டு வாழ்பவளே உன்தாள் வணங்குதும் உன் மகன், கதிரேசன்.

அன்னையே! உன் திறன் எடுத்தியம்பல் எளிதன்று. உன் இனமாம் பெண்ணினத்தின் பெருமையே நின்றிலங்கல் என் றுமே நன்றெனக் கொண்டுதான் அவர்தம் குழவியருக்கு முதன் முதலில் உன் முதலெழுத்தாம் அகரமே அம்மா, அப்பா, அண்ணன், அக்காள் அவர்தம் வாய்வழிப் பயிற்றுவித்தனையோ? இவ்வாறு நீ அளித்த தாய் மொழியாம் தமிழ் மொழி தாய் வழித் தோன்றித் தன் புகழ்சிறக்க ஓங்கித் திகழ்ந்தகாலை வேற்று மொழியினரின் இடைச் சார்பால் உன் வளங் குறைந்து, உன்னை வேற்றணிகலன்களால் அணிவிக்கத் தொடங்கினர் உன் வழிச் செல்வங்கள். உன்னதரத்துத் தோன்றும் மொழிக்கு மட்டும் உன் வழித் தோன்றலார் ஊறு இழைக்கவில்லை, அவர் தம் பழமைக்கே வேற்றுருக்கொடுத்து, அவர்தம்மையே மாற் றுருவாக்கினர். இக்காலை, உன்பால் அன்பு கொண்ட உரிமை யாளர் பலர் தோன்றி, உன்னை ஓர் பழந்தமிழ், செந்தமிழ்ச் செல்வியாய் நோக்க விழைந்தனர். அவர்தம் மாண்பும், மறலி யென்ற மறுமொழியாற் சிதைவுறத் தொடங்கி, நாட்டுப் பற்று மிழந்து, பிறமொழிப் பற்றுவைத்துப் பாராளத் தலைப்படத் தொடங்கினரோ! அன்றே, தம் அன்னையாம் தமிழன்னையை நினைவு கூர்வதையே புறங்கொண்டனர். நாகரீக அரக்கவரக்கியர் தம் நடனமும் தமிழன்னைதன் தவப் புதல்வர் புதல்வியர் பாற் றன் கோலினை ஓச்சத் தொடங்கினர். அன்றே அன்னையே உன் இனம் உன்னை முற்றிலும் மறந்தது. அவ்வாறு அவர் தாயினை மறப்பினுந் தாய் தன் குழவிகளை மறப்பளோ? இவ்வாறு நீ உன் குழவிகள் நிலை குறித்து வருந்தி வாளா இருத்தல் நன்றல்ல என்று நினைந்தனையோ எனத்தா னெண்ணவேண்டும். அவ்வாறு நினைத்திலை யெனின், இஞ்ஞான்று உன் குழவிகள் உன்னை உணர்ந்து தமக்குத் தமிழன்னையின் தவமொழியே தேவை, நாடாள்வோர் எம்மொழி நாட்டுமொழியென உரைத்தாலும் உன் குழவிகள், தன்னையே தன்பரப்பையே தன்னினம் தன்மை யிழந்து குறைத்து, உன்னை ஓர் எல்லைக்குட் கொண்டு நிறுத்தி எம்மகத்து எம் மொழியாம் செந்தமிழ்த் தாய்மொழியே தனித் தமிழ் மொழியே, ஆளும் மொழியாக வேண்டுமென எண்ணுந் திறனும் அளித்தவள் அன்னையே! தமிழன்னையே! நீயெனவே

உரைக்கின்றோம். தமிழன்னையே! இன்னும் ஒன்றினை மட்டும் மொழிய விழைகின்றோம். அன்னையே எம்முலகல்ல, உன் தமிழ் மொழியே தேவையென உரைத்து வரும் தமிழகத்து, உன் இனத்தினரின் இற்றைய நிலை நீ கண்ணுற்றால் வாளாவிராயென எண்ணினும், இன்னுமுன் மனத்துள் ஓர் மறுமலர்ச்சி இல்லையோ மறை மலர்ச்சி தான் உறைகின்றதோவென எண்ணி வருந்துகின்றோம். அன்னையே உன் இனம் அவர்தம் உடன்பிறந்தாரையே, அரங்கேறி அவர்தம் இனத்தையே புன் சொலால் புடைக்கின்றன ரெனில் என்னவெனக் கூற? உரை. தமிழ்த்தாயே! உன்னை வணங்குகின்றேன்.

தமிழன்னையே! உன் இனம் உன் பெருமை அறிந்து செயல்படச் சிறந்தது ஒற்றுமையென ஒன்றே; எடுத்தறைந்து உன் இனத்தெழும் விழைவெல்லாம், அன்னையாம் உனக்கு அவராற்றுந் தொண்டெனவும், உன்னைக் கன்னித்தமிழை இன்றைய இனம் பலப்பல வகையில் மெருகிட்டு, அவரவருரைப்பதிலே எவர் கருத்தும் இயைய வேண்டுமென்ற பேரவாவினைக் களைந்து, அவர்தம்முள் ஒற்றுமை, உடன்பிறந்தாராம் அவர்தம் பிணைப்பிணை இறுக்கி எம் அன்னையாம் தனித்தமிழ் மொழிக்கு எம் மொழியும் ஈடில்லை என்ற உணர்வினையூட்டி, உன் எழிலை, உன் இனம், ஏன் உலகே அறியவைக்க அருள்புரிவாய் அன்னையே என வாழ்த்திக் கடையில் என் இனமாம், தமிழினமே! தமிழன்னையின் வளமே உன் வளம். ஒற்றுமை யென்ற ஒன்றினாற்றான் உன்னினம் உயரும், உன் புகழ் எங்கும் துலங்கும். என்ற எளியனும் காணாவுலகவாசி கதிரேசன் எடுத்துரைக்குந் தன்மை, நன்மையெனக் கண்டு, அதற்கு வழிவகுத்தால் உன் நிலை எந்நாட்டிலும், தனியதோரொன்றாய், நின்றிலங்கி, நின் பெருமை நிலை பெற்று வாழும். உன் விருப்பு எங்ஙனையோ அறியேன்! அன்னையே! தமிழன்னையே! தமிழ்த்தாயே! நீ என்றுமே தன்னிலை திரியாது, கன்னியாய்ச் சிறக்க வாழ்வாய்! வணங்குகின்றேன், உன் மகன். வாழ்த்து, உன்னினம் ஓரினமாய்த் திரண்டெழுந்து உன் பொலிவை மிளிரச்செய். அன்னையே! ஒற்றுமையென்ற ஒன்றினை எடுத்து உணர்விக்குந் திறன் உனக்கின்றி வேறெவர்க்குமில்லை.

வாழ்க சிறக்க வாழ்கசெந் தமிழே
வாழ்க சிறக்க வாழ்கஉன் இனமே
வாழ்க சிறக்க வாழ்கஉன் நலமே
வாழ்க சிறக்க வாழ்கஇன் தமிழே
வாழ்க சிறக்க வாழ்கவை யகமே!

பதவிப் பித்தர் !

[வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார்]
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்

பதவிஎன் பதுவோ பாரினிற் செய்திடும்
உதவிகள் பலப்பல ; உரைப்பக் கேண்மோ !
நெஞ்சிற் கபடம் நிலவிடச் செய்யும் ;
வஞ்ச மனத்தை வளர்த்திடல் புரியும் ;
உற்ற தோழரை உதறிடச் செய்து
முற்றவும் வேறாய்த் திரித்திடும் ; ஐயகோ !
விண்ணவர் போல வியந்து நோக்குவர் ;
கண்ணினிற் செருக்கு நண்ணியே நிற்கும் ;
பன்னாள் பழகிய நண்பரே யாயினும்
முன்னாய் வந்திடின் யார்நீ என்பர் ;
அறியேன் என்பர் ; அகற்றவும் செய்வர் ;
மற்றவர் தம்மை மனத்தினிற் பொருளாய்
உற்றிடல் தனையும் உலர்ந்து நீக்குவர் ;
ஒவ்வோர் செயலிலும் அவ்வியம் ஒளிரும் ;
கவ்விடும் நாய்போல் சீற்றம் கால்கொளும் ;
எதிர்ப்பவர் யாரும் இருத்த லாகாது ;
அதிர்ப்பர் ; விழியால் அகன்று நோக்குவர் ;
நிமிர்ந்து நடப்பர் ; நீட்டுவர் சொற்சுவை ;
அடங்கிக் கிடந்து ஆமையாய் அடிமையாய்
முடங்கிடல் வேண்டும், முடிவிது என்பர் ;
இரண்டொரு வார்த்தை இயம்புதல் கூட
முரண்என நினைக்கும் பேதைமை முகிழ்க்கும் ;
உருட்டுவர் ; மிரட்டுவர் ; ஓங்கி முழக்குவர் ;
சுருட்டுவர் பிறர்பொருள் சோர்வது மின்றி ;
இறுதியில் கவிழ்வர் ; உறுதி இழப்பர் ;
அறுதியும் எய்துவர் ; அந்தோ அளியர் !
பதவிப் பித்தினால் மதம்கொண் டோரின்
முதலும் இறுதியும் இவையென லாமே !

தொல்காப்பியத்தில் ஓரறிவுயிர்

[திரு. மு. அரங்கராமாநுசம்]

(செல்வி சிலம்பு ௩௪-பரல் ௩, ௧௧அ ஆம் பக்கத் தொடர்ச்சி).

'முள் அரை இலவத்து ஒள்இணர் வான்பூ' (ஐங்-௩௨0)

'முல்லை இல்லமொடு மலர' (அகம்-௩௩௪)

'இல்லமொடு மிடைந்த ஈர்ந்தார்க் கண்ணியன்' (நற்-௩௭௬)

"ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்"
(எழுத்-௩௬௪)

'பீரென்கிளவி அம்மொடு சிவணும்" (எழுத்-௩௬௬)

'நெடுந்தன் ஆரத்து அலங்குசினை பயந்த' (நற்-௨௬௨)

'எரிஉகு அகிலொடு ஆரமும் கமழும்' (பரி-௧அ)

'வேர்பிணி வெதிரத்துக் கல்பொரு நரல்இசை' (நற்-௬௨)

'சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்' (ஐங்-௨௭அ)

'நுண்கொடிப் பீரத்தின் ஊழ்உறு பூ என' (நற்-௩௨௬)

'ஊர் எழுந்து உலறிய பீர் எழு முதுபாழ்' (அகம்-௧௬௭)

'இவர் கொடிப் பீரம் இரும்புதல் மலரும்' (ஐங்-௪௬௪)

'இருவெதிர்ப் பைந்தூறு கூர்எரி நைப்ப' (மது-௩0௩)

இம்மரங்கள் இலக்கியத்தில் உள்ளன. இவைகளில் பீர் இன்றுள்ள பீர்க்கு அல்லது வேறு கொடி வகையாக இருக்கலாம். அகிலொடு ஆரமும் என்பதனால் மணம் தரும் மரவகையில் ஒன்றாகலாம். அத்தியாகவும் இருக்கக்கூடும்.

"பூல்வேலென்று ஆலென் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே" (எழுத்-௩௭௬

இம் மூன்று மரங்களில்,

'கடவுள் ஆலத்து தடவுசினைப் பல்பழம்' (புறம்-௧௯௯)

'புதுக் கலத்தன்ன கனிய ஆலம்' (ஐங்-௩0௩)

'பிணிவீழ் ஆலத்து அலங்குசினை எறி' (அகம்-௩௧௧)

'ஆலும் கடம்பும் அணிமார் இலங்கிட்ட
மாலைபோல் தூங்கும் சினை' (கலி-௧0௬)

ஆலமரம் அதிகமாக இலக்கியத்தில் எடுத்தாளப்படுகிறது. வேலமரம் அவ்வளவாக இல்லை. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பதும் அறியத் தக்கது.

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.'

இவைகள் மரங்களாலும் செடிகளாலும் பெயர் இடப்பட்டதாக இலக்கியச் சான்றுகள் ஆசிரியர்கள் தந்துள்ளனர். அவர்கள் எடுத்துக்காட்டும் மரங்கள் :

கொன்றை, குருந்து, புதல், வேங்கை, கோங்கு, பாலை, கள்ளி, இருப்பை, சூரை, மருது, காஞ்சி, புன்னை, கைதை, தெங்கு, வேய், தேக்கு, நெல்லி, விள, பலா மரங்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. ஒரு சிலவற்றிற்கு மட்டும் விதி கூறி இலக்கணம் தந்தார், தொல்காப்பியர். மற்றையன உரையாசிரியர்கள் கொண்டனர்.

'நாறு இணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்' (பதிற்-௬௭)

'சுடர்வீ வேங்கைப் - பூவுடைப் பெருஞ்சினை' (பதிற்-௪௧)

'கருங்கால் வேங்கை மலரின் நாளும்' (புறம்-௧௩௭)

'புன்னை - இணர்ப்படு சினைக் குருகு இறைகொள்ளும்' (பதிற்-௩0)

'குருந்து அவிழ்குறும் பொறை பயிற்று' (நற்-௩௨௧)

'பல்பூங் கோங்கம் அணிந்த காடே' (நற்-௨0௨)

'இருப்பைத் - தேம்பால் செற்ற தீம்பழம் நசைஇ'

'வாங்குசினை மருதத் தூங்கு துணர் உதிரும்' (நற்-௩௯0)

'முறுவல் கொள்பவை போலமுகை அவிழ் புதல்நந்த' (கலி-௧௧௧)

'மருதமரநிழல் எருதொடு வதியும்' (அகம்-௩௭)

'செவி அமைதீரத் தேக்கிலை பகுக்கும்' (அகம்-௩௧௧)

'நெடுவரை அடுக்கத்து வேய் போன்றனவே' (பரி-௧௪)

'பைதுஅற வெந்த பாலை வெங்காட்டு' (ஐங்-௩௧௬)

'பைங்காய் நெல்லி பல உடன் மிடைந்து' (ஐங்-௩௧௮)

'வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த' (பெரும்-௩௫௧)

'கள்ளியம் பறந்தலை ஒருசிறை அல்கி' (புறம்-௨௪0)

'தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி' (குறிஞ்-௬௩)

'குறுங்காற் காஞ்சி சுற்றிய பூங்கொடி' (பெரும்-௩௭௯)

இம் மரங்களில் சில தவிர மற்றவைகள் இப் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. இவைகள் ஐவகை நிலங்களிலும் ஆங்காங்கு உள்ளவையாம்.

'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' (தொல் பொருள்-ருக)

ஒரு நாட்டில் உள்ள போரெனில் புகலும் புனைகழல் மறவர்கள் இப் பூவணிந்து பகை வேந்தர் நாட்டிற் சென்று ஆனிரைகளைக் கவர்ந்து வருவது வழக்கம். அகத்திணையியல் புறத்திணையியல் என்று வகுத்த தொல்காப்பியர் புறத்திணையின் கண் போர் செய்யும் முறை, அறம் திறம்பாப் போர் செய்து ஆட்சி செய்த அன்னைத் தமிழ்நாட்டரசர்கள் கொண்ட போர் முறையில் முதலாவதாகப் பகை வேந்தர் ஆனிரை கவர்வது வழக்கம். ஆண்டு வெட்சிப்பூச் சூடி வீரர்கள் செல்லும் முறை கூறப்பட்டுள்ளது.

'தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி' (குறி-சுந)

'இதல்முள் ஒப்பின் முகைமுதிர்வெட்சி' (அகம்-கநந)

'புல்இலை வெட்சியும் பிடவுந் தளவும்' (கலி-க0ந)

இவ்வாறு இலக்கியங்களில் காணப்படுகின்றன.

'போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெரும் தானையர் மலைந்த பூவும்'' (பொரு-சுந)

போந்தை என்பது பனை, பெண்ணை மரத்தைக் குறிக்கும் ஒரு பொருள் பல சொல். வேம்பு இன்று வேப்பமரம் என்றும் ஆர் ஆத்தி என்றும் அகத்தி என்றும் வழக்கில் உள்ளது. இம் மரங்களின் பூக்கள் மும்மன்னர்கள், (சேர, சோழ, பாண்டியர்) தங்கள் குலமுறை வழாது வழிவழி கொண்ட பூவாகும். போர்க்கு மன்னர்கள் செல்லுங்கால் சூடிச் செல்வது வழக்கம்.

'சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல' (கலி-ககஉ)

'வேம்பின் - வெறிகொள் மாசிலை நீலமொடுசூடி' (அகம்-ககஅ)

'குறுஞ்சினை வேம்பின் நறும்பழம் உணீஇ' (ஐங்-நநக)

'குடுமிகளைந்த நுதல், வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மலைந்து' (புறம்,-எஎ)

'வெண்மணற் பொதுளிய பைங்கால் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்தோட்டு
அத்த வேம்பின் அமலை வான்பூச்
சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி' (குறுந்-உஅக

இவ்வாறு இலக்கியங்களில் பயின்று வருதலும் காணலாம்

'உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்' (பொருள்-சுரு)

உன்னமரம் என்பது மரவகைகளில் ஒன்றென்பது இலக்கியத்தால் அறியலாம். இது நாட்டிற்குக் கேடு வருங்கால் வாடியும் நன்மை வருங்கால் தளிர்த்தும் காணப்படும் என்று கூறப்படுகிறது இது காவல் மரமாகவும் மன்னர்கள் கொண்டதாகவும் அறியலாம். அதனல் ஒரு நாட்டைப் பிடிக்க அந்நாட்டின் காவல் மரத்தை வெட்டினல் அந்நாட்டைப் பிடித்தது போலாகும், ஆகையினல் மன்னர்கள் மரத்தைக் காவல் புரிந்து கண்ணெனக் காப்பாற்றினர்கள்.

'அலந்தலை உன்னத்து அம்கவடு பொருந்திச்
சிதடி கரைய' (பதி-உரு)

'புன்கால் உன்னம் சாய' (பதி-சு0)

'புன்கால் உன்னத்துப் பகைவன் எங்கோ' (பதி-சுக)

இலக்கியங்களினுலும் நாம் மேற்கண்டவற்றை அறியலாம்.

'வஞ்சிதானே முல்லையது புறனே' (சுசு-பொருள்)

பிறமன்னரின் நாடு கைக்கொள்ள நாட்டம் கொண்ட அரசனும் படைவீரர்களும் வஞ்சிப்பூச் சூடிச் செல்வது வழக்கம். வஞ்சிக்கொடி யென்றும் சொல்லப்படுகிறது.

'நெடுவெண் மருதொரு வஞ்சி சாஅய்'
விடியல் வந்த பெருநீர்க் காவிரி' (அகம்-உஉசு)

'வஞ்சி பித்திகம் சிந்து வாரம்' (குறு-கு0)

'உழிஞைதானே மருதத்துப் புறனே' (பொருள்)

தன்னை எதிர்த்து வருகின்ற வீரர்களுடன் பொருகின்ற வீரர்கள் 'எயில் காத்தல் நொச்சி அது வளைத்தல் உழிஞை' (புறப்-வெண்) எதிர்த்து போரிடுவார்கள் இவர்கள் உழிஞைப் பூச்சூடிப் போரிடுவர்.

'பூ அல்ல பூளை உழிஞையொடு யாத்த
புனவரை இட்ட வயங்குதார்ப்பீலி' (கலி-கச0)

'சிறியிலை உழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்து' (பதி-சுரு)

'குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து' (புறம்-எஎ)

'தும்பை தானே நெய்தலது புறனே' (பொருள்-எ0)

இருபெரு வேந்தரும் தும்பை மலைந்து ஒரு களத்துபொருதல் ஆகும். இது தும்பைச் செடி எனப்படும். வெண்ணிற மலர் ஆகும்.

'வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை ஒண்தொழிற் கழற்கால்
செவ்வரை நாடன்'' (பெரும்பாண்-௧௦௩)

'வாகை தானே பாலையது புறனே'

வெற்றிக்கு அறிகுறியாக, வாகை சூடிய மன்னர்கள் வீரர்கள், வென்ற நிலை அறியச் சூடுவது வகைப்பூ ஆகும். இன்றும் வழக்கில் வாகை என்று உள்ளது. மஞ்சள் நிற மலர் இதன் சினைகளில் மலரும்.

'குமரி வாகைக் கோலுடை நறுவீ' (குறு-௩௪௭)

'வாகை ஒண்பூ புரையும் உச்சிய' (பதி-௧௪)

'கடவுள் வாகைத் தூவீய் எய்ப்ப' (பதி-௬௬)

'மென்பூ வாகை மென்புறக் கவட்டிலை' (அகம்-௧௩௬)

என்றவை பதிற்றுப்பத்து அகநானூறு இலக்கியங்களில் காணலாம்.

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'

'வட்கார் மேல் செல்வது வஞ்சி உட்கார் எதிரூன்றல் காஞ்சி' என்பதனுன் வஞ்சியாரை எதிர்த்துப் போர்புரியும் மறவர்கள் மன்னர்கள் சூடும் பூ காஞ்சிப் பூ ஆகும். இத்திணை பொதுவாகப் புறத்திணையியல் யாவற்றிற்கும் பொருந்துவது. இது நிலையாமையை அறிவுறுத்துவதும் ஆகும். இது தொல்காப்பியம் நன்கு எடுத்தியம்பும்.

'கழனியம் படப்பைக் காஞ்சி ஊர' (குறுந்)

'கொய்குழை அகை காஞ்சித் துறை அணிநல் ஊர' (கலி,-௭௪)

'புல்அறைக் காஞ்சிப்புனல்பொரு புதவின்' (மலைபடு-௪௪௧)

'காஞ்சிப் - போது அவிழ் நறுந்தாது அளிந்த கூந்தல்'
(அகம், ௨௧௬)

இவ்வாறு எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட சூத்திரங்களாலும், பொருளதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளவைகளை ஆராய்ந்து பல அரியதொரு மணிகளைப் பெறலாம். இதுவரை அதில் பொதிந்த சில முத்துக்கள் இவைகள் ஆம் பொதுவாக 'புல்லும் மரனும் ஓரறிவினவே' என்ற ஓரறிவுயிர்களை ஓராற்றுன் அறிய

முடிந்தது. இம் மரங்களாலேயே இன்றும் அன்றும் ஊரின் பெயர்கள் வழங்கி அழைக்கப்பபட்டன. அன்று திருமறைக் காடு என்பது வேதாரணியம் என்பதுபோல் திரிந்து, மக்கள் வழக்கில், நாகரிகத்திற்கு ஒப்பச் செந்தமிழ் மொழி திரிந்ததும் சான்று காட்டலாம். இன்றும் ஒடுங்காடு, வெண்காடு, மறைக் காடு, சாய்க்காடு, காஞ்சிபுரம், மதுரை (மருதை) குருக்கத்தி, முதலிய ஊர்கள் இருப்பன நாம் அறியலாம். தமிழகத்தில் பல மரங்கள் இருந்தன, இருக்கின்றன. அது இன்று வழக்கில் மாறியது அறிஞர்கள் கூற்றால் அறியலாம். தொல்காப்பியத்தில் கூறப்படும் மரவகைகள் பத்துப்பாட்டுள் குறிஞ்சிப்பாட்டில் பூக்களைப் பறித்துப் பாறையில் குவிக்கின்றபோது, கூறப்படு கின்ற மரங்கள் நாம் அப் பாடலால் அறியலாம்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அறநிலையங்களின் தேர்வுகளின் அறிக்கை

I. தென்னிந்திய தமிழ்ச்சங்கம்

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

இது சென்னைமாநிலத்திலுள்ள புலவர் கல்லூரிகளிலும், குறிப் பிட்ட சில நகர்களிலும் 1960 சனவரித் திங்கள் 22உ முதல் 30உ வரை நடைபெறும். தேர்வுகட்குரிய விண்ணப்பங்கள் யாவும் குறித்த கட்டணங்களுடன் 1959 திசம்பர் 15உக்குள் அடியிற்கண்ட முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

II. தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்

சித்தாந்த சைவத் தேர்வு

இது செல்வியில் முன் குறித்த பாட அட்டவணைப்படி 1960 அக்டோபர் திங்களில் நடைபெறும். விண்ணப்பங்கள் 1960 சூலை இறுதிக்குள் அனுப்பப்படவேண்டும்.

அன்புள்ள.

பு. சி. புன்னைவனநாதன்
புலவர் குழுத்தலைவர்.

---

*தமிழர் நாகரிகம்

[திரு. ஹுமாயூன் கபிர்.]

அறிவிலும் சிந்தனையிலும் நாம் எப்பொழுதெல்லாம் குறைந்திருந்தோமோ அப்பொழுதெல்லாம் நம்முடைய முன்னேற்றத்திலும் வளத்திலும் பின்தங்கிவிட்டோம் என்பதை நம்முடைய வரலாறே நமக்குக் கற்பிக்கின்றது. இவ்வுலகறிந்த மிகப்பழைய நாகரிகங்களுள் ஒன்று மலர்வதை இந்தியாவே கண்டிருக்கின்றது. இன்னும் குறிப்பிடத்தக்கது யாதெனில் இந்திய நாகரிகம் பல சூழ்நிலைகளிலும் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வருகின்றது. இந்திய நாகரிகத்துக்குச் சம காலத்தில் பல நாகரிகங்கள் இருந்துள்ளன. அவை மனித இனத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும்பணி புரிந்துள்ளன. ஆனால் இந்த நாகரிகங்கள் பரவிய நாடுகளில் இன்று புதிய வாழ்க்கை தொடங்கிவிட்டது. இந்தியாவில் மட்டும் வேறு எந்த நாடுகளிலும் காணாதவகையில் அதனுடைய பழம்பெரும் நாகரிகம் தொடர்ந்து வருகின்றது.

நாகரிகத்தின் உச்சநிலையை இந்தியா 6000 ஆண்டுகட்கு முன்னரே அடைந்துவிட்டது. அதன் முதற்குறி மொகஞ்சோதாரோவிலும் ஹரப்பாவிலும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அந்த நாகரிகம் இந்தியா முழுமையும் பரவியிருந்தது என்பதை நாம் அறிவோம. அதன் மேல்பக்க எல்லை இன்னும் குறிக்கப் படாவிட்டாலும் அது தெற்கே தபதி வரையிலும் கிழக்கில் கங்கை வரையிலும் அன்றைய உலகின் போட்டியிடக்கூடிய ஒருசில நாகரிகங்களுக்கு எதிராக ஒரு பண்பாட்டைப் பரப்பி வந்தது. மொகஞ்சோதாரோவிலும் ஹரப்பாவிலும் வாழ்ந்து வந்த மக்கள் யாவர் என்பதை நாம் அறியோம். அவர்கள் மத்தியதரை வகுப்பினர் என்றும், மேலை ஆசிய நாடுகளிடையும் சுமேரியா விடமும் தொடர்பு கொண்டவர்கள் என்றும் ஒரு சிலர் கருதுகின்றனர். பிறர் அவர்கள் முற்கால எகிப்தில் வாழ்ந்த மக்களுடன் தொடர்புகொண்டவர் என்று கருதுகின்றனர். இன்னும் பிறர் அவர்கள் இந்தியாவின் உட்பகுதியிலேயே தோன்றிய திராவிட நாகரிகத்தின் முன்னோடிகள் என்று

---

* இக் கட்டுரை திரு. ஹுமாயூன் கபீர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா (21-10-59)வில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவில் சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு.

எண்ணுகின்றனர். உண்மையில் அவர்கள் பேசிய மொழி இன்று பேசப்படும் தமிழோடு உறவுடையது என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பெரும்பகுதி அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கியிருந்தபோதே இந்தியா நாகரிகத்தின் உச்சியை அடைந்துவிட்டது. அறிவுத் துறைகளையும் தொழில் துறைகளையும் இந்தியா மற்றையோரைவிட முதலிலேயே தொடங்கி விட்டது. எனினும் வாழ்க்கைப் போட்டியில் நாம் இன்று பின்தங்கிவிட்டோம். இதற்குரிய காரணத்தை நாம் இந்திய வரலாற்றின் துணைகொண்டு ஆராய்ந்து நோக்கின் நம்மிடை உள்ள இருபெருங் குறைகள் புலப்படும். அறிவின் பயனை உணராததொன்று. ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இல்லாதது மற்றொன்று. இக் குறைகளை இந்தியா உணராத நேரங்களிலெல்லாம் அதன் மதிப்பிற்குரிய இருப்பிடத்தினின்றும் விழுந்து விட்டது. பொது, பொருளாதார அரசியல் வாழ்க்கைகளில் பெரும் இடர் உற்றிருக்கின்றது.

தமிழ்நாட்டில் தோன்றிய தலைசிறந்த நாகரிகம் தமிழருடன் தொடர்பு கொண்ட முதல் ஆரியர்களைத் திகைக்கச் செய்தது என்ற குறிப்பை இந்தியப் பழங்காலக் காப்பியங்கள் உணர்த்துகின்றன. வரலாற்றில் பலகாலங்களில் கடல் தாண்டி வந்த பல நாகரிகங்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது. கிறித்துவ ஊழி தொடங்குவதற்கு முன்னரே மேற்கில் கிரேக்க ரோம நாடுகளுக்கிடையும் கிழக்கில் சீன ஜப்பான் நாடுகளுக்கிடையும் கடல் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. இந்தியாவில் தெற்கில்தான் முதன்முதல் உலகின் முப்பெரு மதங்களான யூதமதம், கிறித்துவம், இஸ்லாமியமதம் ஆகியவை ஆதரவும் மதிப்பும் பெற்றன. நாராயணர்-வாசுதேவர்-கிருஷ்ணர் மூவரும் ஒருவரே என்ற சமய வழக்கு வேறு எந்த நூல்களைவிடத் தமிழ்த் தொகை நூற்களில் மிக விரிந்த முறையில் விளக்கப்பட்டுள்ளது. பாகவதத்தில் காணப்படும் ராதை பெரும்பாலும் சங்க நூற்களில் காணப்படும் நப்பின்னையைப் பின்பற்றிய ஒரு படைப்பேயாம். புதிய வைணவம் தெற்கிலிருந்து வடக்கிற்குப் பரவியது என்பது உறுதி. தமிழ்நாட்டில் தோன்றிய சைவசித்தாந்தக் கொள்கை வெகு விரைவில் இந்தியாவின் மற்றப் பகுதிகளில் பரவிப் பெரும்பணி செய்ததை யாரும் மறக்கமுடியாது. மதுரையிலும் காஞ்சியிலும் திகம்பர சமணம் பெருமளவில் பரவியது. வடஇந்தியாவில் புத்தமதம் செல்வாக்கை இழந்த நிலையில் தமிழ்நாட்டில் தேரவாட புத்த மதம் பெருகியது.

இந்திய இலக்கிய மரபிற்குத் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி குறிப்பிடற்குரிய தொன்றும். இடைவிடாது தொடர்ந்த இலக்கியப்பணி தமிழில் உள்ளதுபோல் இவ்வுலகில் வேறெந்தமொழியிலும் கிடையாது. வடக்கிருந்து தெற்கும், தெற்கிலிருந்து வடக்கும் மக்கள் அடிக்கடி சென்றதைக் குறிப்பிடும் பாடல்களும், சைவ, வைணவ பக்திப்பாடல்களும், திருக்குறளும், கம்பன் காப்பியமும் இந்திய இலக்கியச் செல்வத்தின் பகுதியாகும். அவை உலகின் பொதுச் சொத்தாக மாறல்வேண்டும். சிறப்பாகக் குறிக்கப்படவேண்டிய ஒன்று யாதெனில் கிறித்துவ, இஸ்லாமிய மதங்களையொட்டி எழுந்த பாடல்களும் காப்பியங்களுமே. இவ்வளவு உண்மைகளை இந்த அளவு சிறந்த நடையில் காண்பதுபோல் வேறு எந்த இந்திய மொழியிலும் நாம் காண முடியாது.

மெய்யறிவுத் துறையில் இந்திய மெய்யறிவில் குறிப்பிடத்தக்க இருபெரும் முறைகளான அத்வைதமும் விசிஷ்டாத்வைதமும் தமிழ்நாட்டில்தான் முறையே சங்கராச்சாரியாராலும் இராமானுசராலும் நிறுவப்பட்டன. இந்த இலக்கிய, மெய்யறிவுப் பெருமரபுகள் இன்னும் அழியாது வாழ்வது மகிழ்தற்குரியது. இத் துறைகளில் வல்லவர்களும் மதிப்பிற்குரியவர்களும் பலர் தென்னகத்தில் உள்ளனர்.

சமயம், மெய்யறிவு, இலக்கியம் ஆகிய துறைகளில் மட்டும் தெற்கு வடக்கைத் தூண்டியது என்பதில்லை. தென்னிந்தியக் கோயில் இவ்வுலகு கண்டு வியந்த சிற்ப வேலைப்பாடுடையது. தென்னிந்திய நடனக்கலையும் இசைக்கலையும் பல நூற்றாண்டுகளாக வடக்கின் ஒப்புதலையும் மதிப்பையும் பெற்றிருக்கின்றன. அலாவுதீன் கில்ஜியின் அரசவைக்குக் கோபால் நாயகா வந்தபொழுது தென்னிந்திய இசை, நாட்டியக் கலைஞர்களின் வல்லமையை உலகின் ஒவ்வொரு மூலைக்கும் பரப்பினான். ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இந்திய மெய்யறிவு சங்கரரின் புலனுணுக்க ஆராய்ச்சியால் வெளிப்பட்டதுபோல் இன்று மேலை நாடுகளில் இந்திய நடனம் பரதநாட்டியத்தையும் இணைத்துக் கொண்டது.

தமிழ்நாடு தன் நீர்வளத்தை இந்தியாவின் வேறெப்பகுதியிலும் காணாத முறையில் பயன்படுத்தி வருகிறது. காவேரியின் துளி நீர்கூட வீணாவதில்லை என்று பெருமையுடன் கூறப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம். இந்தியாவின் மற்ற நதிகளைப் பற்றியும் இவ்வாறு கூறப்படவேண்டும் என்பது நம் அவா. இந்தியக் கூட்டுறவு இயக்கத்திலும் தமிழ்நாடு ஒரு முக்கியப் பகுதியை நிரப்பியிருக்கின்றது. ஆயிரம் ஆண்டுகட்கு மேற்

பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களில் உள்ளூர் அவைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதைப்பற்றிய விளக்கம் காணப்படுகின்றது. தன்னாட்சி உடைய பல உள்ளூர் அவைகளைத் தென்னிந்தியா இந்தியாவின் வேறெந்தப் பகுதியைவிடச் சிறந்த முறையில் நடத்தியது என்பது வியக்கத்தக்கதொன்று. சோழர் கல்வெட்டுக்களில் சிற்றூர், பேரூர், கோட்டம் போன்றவை எவ்வாறு ஆளப்பட்டன என்பது விளக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் மக்கள் ஆட்சியை எவ்வாறு அடிப்படையிலிருந்து நிறுவுவது என்பதை அவற்றின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இம்முறையில் தெற்கு இந்திய வரலாற்றில் மிக முக்கியப் பகுதியைச் சிறந்த முறையில் நிரப்பியுள்ளது.

சிற்றுயிர்க்குற்ற அன்னையாய்ப் பலியினை நீக்கித்
துணைபுரிந்த பற்றற்ற பண்பர்

அண்மையில் மணிவிழாக்கொண்ட மாண்பினர்

திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள்

இவர்தம் வரலாற்றுக் குறிப்பும், பிறவும் செல்வி சிலம்பு ௩௪, பரல் ௩, பக்கம் ௧0௧ இல் வெளிவந்துள்ளன.

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி சிலம்பு, ௩-௪, பரல் ௩, ௧௪௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரியன் : என் தங்கையின் கணவன்தானே நீ?

ஒதிபன் : ஆம்.

கிரியன் : அவள் உன்னுடனிருந்து ஆட்சிபுரிபவளல்லளோ?

ஒதிபன் : அவள் விரும்பியதெல்லாம் உரிமையால் பெறுதற்குரியவளாவள்.

கிரியன் : எனக்கு அடுத்தபடியாகப் பெருமை உண்டன்றோ?

ஒதிபன் : உனக்கு அவ்வுரிமையுண்டு. உன் குற்றத்திற்கு அது பன்மடங்கு பெரிதுதான்.

கிரியன் : அவ்வாறு குற்றஞ்சாட்டாதே! உனக்குள்ளே எண்ணிப்பார்! நிம்மதியான வாழ்க்கை, அரசபெருமை, இவற்றையெல்லாம் விட்டு நின் அரசுக்கு ஆசைப்படுவது யார் செய்வது? பெயரளவில் அரசனாகவிருப்பது எனக்கு என்றும் வேண்டுவதில்லை. அரச வாழ்வு ஒன்றேபோதும் என்பவன் நான். என்னைப்போன்றவன் வேறு என்னதான் எண்ணக்கூடும். நான் கேட்டவற்றையெல்லாம் நன்கு செய்துதர நீயுள்ளாய். உன் இடத்தை யான் ஏற்றுக் கொண்டால் நாட்டுக்குரிய பெரியபெரிய கடமைகளைச் செய்தாகவேண்டும். துன்பமின்றி அரசை நடத்த இயலுமா? எனக்கு இருக்கவேண்டியதற்கு மேலாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படமாட்டேன். எனக்கு எல்லோருடைய உறவும் வேண்டும். அனைவரும் என் நண்பர்களே! உன்னைப் பார்க்கவேண்டும் என்போர் என்னை முதலில் பார்க்க விரும்புவது உன்னிடமிருந்து நன்மை பெறுவதில் வெற்றியுறுவார்கள் என்ற எண்ணத்திலேதான். இத்தகைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ள விழைவேனா? மூடனே! அவ்வாறு நன்றியற்றவனா நான்? நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கவேண்டும் என்ற கருத்து எனக்கு என்றும் இருந்ததில்லை. என்னை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டுமாயின், பிதியன் கோவிலுக்கு முதலில் செல். சென்று நான் வேண்டிய வரம் உண்மையா

என்று தெரிந்துகொள். பின் அப்புலவனுடன் உறவு வைத்துக்கொண்டேனு என்று ஆய்ந்து பார். பின் என்னைக் கொன்றுவிடு. நீ செய்யும் தீர்ப்பு நேர்மை யானது என்று ஏற்றுக்கொள்கிறேன். அவ்வாறன்றி, என் பின்னுல் என்னைப்பற்றிக் குறை கூறுவது தவறுகும். நல்லவன் ஒருவன் பெயரைக் கெடுப்பதும், கெட்டவர் களை நல்லவர்கள் என்று கொள்வதும் பெருங்குற்றங்க ளாம். நல்ல நண்பனைத் தள்ளிவிடுவது உன் உயிரையே போக்கிக்கொள்வதாகும். உன் செல்வத்தைப் பறிகொடுத்த தாகும். காலம் என்பது உண்மை என்பதை உணர்த்தும். காலம் என்பதே நல்லவனை உணர்த்தும். அதுவே ஒரு நாள் யார் பழிகாரன் என்பதை வெளிப்படுத்தும்.

கோரஸ்: நல்ல சொற்கள் நல்லவன் கேட்டு அதன்படி நடக்கத் தக்கன. விரைவில் எண்ணிமுடிப்பது தீங்கற்றதல்ல.

ஒதிபன்: சூழ்ச்சியாளன் மிக விரைவில் முன்சென்று செய லாற்றும்போது, நண்பனே எதிர் நின்று செயலாற்றுவதே நல்லதாம். அன்றி, அவன் செய்யும் சூழ்ச்சியைத் தெரிந் தும் உட்கார்ந்து தீது வருமளவும் பார்த்திருப்பதா ?

கிரியன்: என்ன செய்ய விரும்புகிறுய்? என்னை நாடு கடத் தப் போகிறுயா ?

ஒதிபன்: உன்னை நாடு கடத்தப்போவதில்லை. கொலைத்தண்டம் விதிக்கப்போகிறேன்.

கிரியன்: எவ்வழியில் உனக்குத் தீமை செய்தேன் என்று உணர்த்திய பின்பே அவ்வாறு செய்யக்கடவாய்.

ஒதிபன்: இன்னும் உன் முரட்டுப் பேச்சைப் பற்றிக்கொண் டிருக்கிறுயா ?

கிரியன்: நீ தீய வழியில் செல்கிறுய் என்பது அறிந்துதான்.

ஒதிபன்: நான் நல்ல வழிதான் செல்கிறேன் என்பது அறிவேன்.

கிரியன்: உன் கண்ணுக்கு அவ்வாறு படலாம்; எனக்குப் படவில்லை.

ஒதிபன்: நீ கோழை.

கிரியன்: நீ எண்ணுவது தவறு என்று தெரிந்தால்,

ஒதிபன்: அரசர்கள் ஆளவேண்டியவர்கள்.

கிரீயன் : அறநெறியிலிருந்து பிறழ்ந்து ஆள்வது கூடாது.

ஒதிபன் : தீபநாட்டு என்மக்களே, கேளுங்கள்.

கிரியன் : உன் மக்கள் மட்டுமா, என் மக்களுந்தான்.

கோரஸ் : ஐயன்மீர் மேலே ஒன்றும் பேசிக்கொள்ளாதீர்கள். அரசி, யோகத்தாள் வருகிறுள். உங்கள் கலக்கத்தைப் போக்குவாள்.

[யோகத்தாள் அரண்மனையிலிருந்து வருகிறுள்.]

யோகத்தாள் : ஏன் இவ்வளவு உரத்த குரலில் பேசிச் சண்டையிட்டுக் கொள்கிறீர்கள் உங்களுக்குள்ளே தனிப்பட்ட முறையில் இருக்கும் சிக்கல்களைப்பற்றிப் பேசித் தீர்க்க இதுவோ தக்க சமயம்? நாட்டில் தாண்டவமாடும் துன்பத்தைப் போக்க முற்பட வேண்டிய உங்களுக்கு இப்படிப் பேசிக்கொள்ள வெட்கமில்லையா? கணவரே! உள்ளே வாருங்கள். கிரியே! வீட்டுக்குப்போ ஏதோ முக்கிய மற்ற ஒன்றைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறுய்!

கிரியன் : அப்படியன்றி உன் கணவர் என்னை நாடு கடத்தவோ அன்றிக் கொலை செய்யவோ உறுதி கொண்டுள்ளார்.

ஒதிபன் : ஆம்; என் உயிருக்குத் தீங்கு செய்யும் முறையில் சூழ்ச்சி செய்துள்ளான்.

கிரியன் : தெய்வங்களின் சாபம் என்மீது விழுக, அப்படி நான் அவ்வாறு ஏதும் தீங்கு நினைத்திருந்தால்.

யோகத்தாள் : ஒதிபரே, கடவுளின் பேரால் அவன் சொல்லும் சூளுரையை நம்புங்கள். எனக்காகவும் இங்குள்ளாருக்காகவும் இது செய்யுங்கள்.

கோரஸ் : ஆம், அரசே! கருணை காட்டுங்கள்; விட்டுக்கொடுக்க விரும்புங்கள்.

ஒதிபன் : ஏனே!

கோரஸ் : இதற்குமுன் தங்களுக்குத் தீமை செய்யாதவர், தங்கள் முன்னிலையில் ஆணையிட்டுச் சொல்லியதே அவருக்குத் தற்காப்பாகும்.

ஒதிபன் : உங்களுக்கு இதன் விளைவு தெரியுமா?

கோரஸ் : நாங்கள் அறிவோம்.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) படிக்கும் பழக்கம்பற்றிப் பண்டித நேருவின் கருத்துரை

"கடந்த சில ஆண்டுகளாக நம்முடைய தாய்மொழியில் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்களை வெளியிடும் முயற்சியில் நாம் ஓரளவு முன்னேறியிருக்கிறோம். எனினும் குழந்தைகள் விரும்பத்தக்க சிறந்த புத்தகங்களையும் இதழ்களையும் மற்ற நாடுகள் வெளியிடுவது போல் வெளியிடாமல் மிக்மிகப் பின் தங்கியிருக்கிறோம். விளக்கமாகச் சொல்லப்போனால், நம் மக்களுக்குப் படிக்கும் பழக்கம் இல்லையென்றே சொல்லவேண்டும். நம்நாட்டில் புத்தகங்களையும் இதழ்களையும் படிப்போர் தொகை மிகக் குறைவு. இதற்குக் காரணம் படிப்பின்மையல்ல. இங்குக் கோடிக் கணக்கில் படித்தவர்கள் இருக்கின்றனர். ஆனால் படிக்கும் பழக்கமுடைய பொதுமக்களின் தொகை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருக்கிறது. இந்தத் தொகை நாளும் வளரும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இது, நயமானதும், தகுதியுள்ளதுமான புத்தகங்கள் வெளிவருவதைப் பொறுத்திருக்கிறது.

படிக்கும் பழக்கம் வளருதற்கு ஏற்ற பருவம் குழந்தைப் பருவமே. எனவே, குழந்தைகளைப் படிக்கும்படி ஊக்குவித்தலே சாலச் சிறந்தது. அவர்களுக்குப் பிடித்தமானதும், சுவையானதுமான புத்தகங்கள் இருக்குமாயின் அவர்களெல்லோரும் படிப்பார்கள். குழந்தையின் உள்ளம் விரிவடையக் கூடியதும், அறியும் அவா உடையதுமாகும். இத்தகைய உள்ளத்தில் பொருந்தும் ஆற்றல் வாய்ந்த புத்தகங்கள் கிடைக்குமானால், அவற்றைக் குழந்தைகள் படிப்பர். ஆனால் குழந்தைகள் எதை விரும்பும் என்பதை அறிந்து புத்தகம் எழுதுவோர்தாம் நம் நாட்டில் அரிதாக இருக்கின்றனர்"—என்று, நவம்பர் 14 முதல் 21 வரை நடைபெற்ற 'குழந்தைகள் புத்தக வார' விழாவையொட்டி அனைத்திந்திய இந்தி நூல் வெளியீட்டாளர் கழகத்திற்குப் பண்டித நேரு அவர்கள் தாம் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிப்பு : பண்டித நேரு அவர்களின் கருத்துரை படித்தவர்கள் எனப்படுவோர் அனைவரும் கருத்தில் கொள்ளவேண்டிய சிறந்த உரை. அதிலும் குழந்தைகளைப் படிக்கச் செய்தலில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கருத்தைச் செலுத்தி ஆயிரக்கணக்கில் குழந்தை இலக்கியங்களும், இதழ்களும் வெளிவர வழிவகை காண்பார்களாக.

(உ) குழந்தை இலக்கியங்களுக்கு ஆதரவு தருக!

கடந்த 14-11-59 இல் குழந்தைகள் வாரத்தை முன்னிட்டு மயிலை சீனிவாசசாத்திரியார் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் குழந்தைகட்கான நூல்கள் வெளியிடப்பட்டன. அந் நூல்களை வெளியிட்டுப் பேசிய உள்நாட்டு அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் குழந்தைகள் மனத்தில் சீரிய எண்ணங்கள் தோன்றப் புத்தகங்கள் சிறந்த வழியாகும் என்று கூறினர். அடுத்துப் பல பெருமக்கள் பேசினர். அவருள் திரு. சந்தானம் என்பார் பேசுகையில், "குழந்தைகட்கான நூல்களை வெளியிட அரசினர் போதுமான பொருள் உதவி அளித்தல் வேண்டும்." என்று கூறியுள்ளார்.

குறிப்பு : திரு. சந்தானம் அவர்களின் கருத்து மிகமிக வரவேற்கத் தக்கது. நூல்கள் இப்படித்தான் அமையவேண்டும் என அறிவுரை கூறும் அரசியலார் அதற்கேற்ப வெளியீட்டாளர்கட்குப் போதிய பொருளுதவி அளித்தல் வேண்டுமன்றோ? எனவே இக் கருத்தினை அரசினரும் கருத்தில் கொள்வார்களாக.

(ரு) **பாராட்டுகிறோம்**

கடந்த 21-11-59 இல் சென்னை இராசாசி மண்டபத்தில் முதலாவது குழந்தைகள் மாநாட்டைச் சென்னை ஆளுநர் மாண்புறு விட்ணுராம் மேதியவர்கள் துவக்கிவைத்தார்கள். அது காலை சிறந்த குழந்தை இலக்கியத்தை ஆக்கித்தந்த பேராசிரியர், மயிலை சிவமுத்து அவர் கட்கும் திரு. தி. ஜ. ரங்கநாதன் அவர்கட்கும் கேடயங்கள் வழங்கினர். கேடயம் பெற்ற ஆசிரியர்களைப் பாராட்டி டாக்டர். மு. வரதராசனார், அவர்களும், புலவர் கி. வா. ஜகந்நாதன் அவர்களும் பேசினர்.

குறிப்பு : பரிசுபெற்ற ஆசிரியர்கட்கு நமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களின் பணி மேலும் சிறப்பதாக.

(சு) **ஒரு கையெழுத்துப் படிக்கு $8\frac{1}{2}$ லட்ச ரூபாய் விலை மதிப்பு!**

ஏசுநாதரின் சீடரான ஜான் என்பவரின் கையெழுத்துப்படி நூலொன்றை லண்டனில் எச். பி. கிராஸ் என்னும் நியூயார்க் வணிகர் ஒருவர் 65 ஆயிரம் ஸ்டர்லிங் (அஃதாவது ரூ. 8,67,000) விலை கொடுத்து வாங்கினர். இதுவரையில் எந்தப் புத்தகத்திற்கும் இவ்வளவு விலை கொடுக்கப்பட்டதில்லை. சென்ற ஆண்டு 39 ஆயிரம் ஸ்டர்லிங் (ரூ. 5,20,000) விலை கொடுத்து ஒரு புத்தகம் வாங்கப்பட்டது. அதை யும் இதே வணிகர் எச். பி. கிராஸ்தான் வாங்கினர்.

குறிப்பு : மேனாட்டார் வரலாற்று நூல்களை வெளியிடுதலில் எத்துணை அக்கறை காட்டுகின்றனர் என்பதற்கு இஃதொரு நல்ல எடுத்துக்காட்டு. ஏட்டின் சிறப்பே நாட்டின் சிறப்பு என்பதை அவர்கள் அறிந்துள்ளனர் போலும்.

‘செல்வி’ கட்டுரையாளர்கட்கு

‘செந்தமிழ்ச் செல்வி’ திங்கள் வெளியீடாகையால் மிக நீண்ட கட்டுரைகளையும் கவிதைகளையும் வெளியிடுதற்கில்லை. அங்ஙனம் வெளியிடின் வேறு பல இன்றியமையாக் கட்டுரைகட்கு இடமளிக்க முடியாமற் போகிறது. இதனால் பல கட்டுரைகள், வெளிவராமலேயே தேங்கிக் கிடக்கின்றன. எனவே இனி, செல்விக்குக் கட்டுரை கவிதை முதலியன அனுப்பும் அன்பர்கள் செல்வியில் நான்கு பக்கங் கட்கு மேற்படாத அளவில் கட்டுரைகளையும், ஒரு பக்கத்திற்கு மேற்படாத அளவில் கவிதைகளையும் எழுதி அனுப்பி இந்த இடர்ப் பாட்டினைத் தவிர்க்குமாறு வேண்டுகின்றோம்.

ஆசிரியர்

டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன்

சொற்பொழிவுகள்

மறைமலையடிகள் நூல் நிலையத்தில் 15-11-59 ஞாயிறன்று மாலை டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள், "நூல்களுக்கும் படிப்போர்க்கும் திருமணம்" என்ற பொருள்பற்றிச் சுவையான சொற்பொழிவொன்றை ஆற்றினர்.

9-12-59 புதனன்று மாலை சென்னை அமெரிக்க அறிவிப்பு அலுவலக நூலக இயக்குநர் திருமதி சி. எப். ஜான்சன் தலைமையில் டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள், "பொது நூலகப் பணியில் மனிதப் பங்கு" என்னும் தலைப்பில் பயன் தரும் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர்.

டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் சென்னைக்கு வரும் சமயம் அனைத்திலும் முன்னதாகவே கடிதம் எழுதி சொற்பொழிவுக்கு இணங்குவதற்கும், சென்னைக்கு ஒவ்வொரு முறை வரும்பொழுதும் இந்நூலகத்தில் முதல் சொற்பொழிவை ஆற்ற இணங்குவதற்கும் நூலகம் தன் நன்றியை அறிவித்துக் கொள்கிறது.

மதிப்புரை

"சிதம்பரம் தில்லைக் காளியம்மன் திருப்பதிகம்"

[இதன் ஆசிரியர் திருவாசகமணி, கே. எம் பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., கிடைக்குமிடங்கள்: தில்லையம்மன் தேவத்தானம், சிதம்பரம்; மார்டன் ரேடியோ கீழவீதி, சிதம்பரம்,]

செந்தமிழ்த் திருமாமறை முடிபாம் 'திருவாசகத்தை'ச் செவ்விய முறையில் ஆங்கிலயாப்பான் மொழி பெயர்த்து உரைசால் ஓங்கு புகழெய்திய ஒண்மையர் இவ்வாசிரியர். நீங்கில் செந்தமிழால் தெய்வத்தைப் பராவுதல் சீரியோர் தலைக்கடன் என்பதைத் தேயமெலாங் கண்டுய்ய இப் புகழ்ப்பாமாலையை யாத்துள்ளார். செய்யுட்கள் எளிய இனிய நடையும் ஆற்றொழுக்கும் அமைந்துள்ளன. முத்தமிழ்ச் சிறப்பினை மூன்றிடங்களிற் சுட்டியுள்ளார். இப் பாமாலையினை அன்புடன் எலலாரும் அம்மை திருமுன் ஓதி வழிபட்டுய்வார்களாக. ஆசிரியரவர்கள் இதுபோல் தமிழ்த் தெய்வப்பாமாலை யாத்துத் தமிழ் வழிபாடு தழைத்தோங்கச் செய்வார்களாக. இந்நூல் 'தில்லையம்மன் தேவத்தான' வெளியீடு.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



நாவலர், கணக்காயர்,
டாக்டர், ச. சோமசுந்தர பாரதியார்

தோற்றம்: 1879 *மறைவு: 1959*

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௦, மார்கழி	பரல்
௩௪	சனவரி, 1960	௫

கடவுட் கழலிணை எய்திய நாவலர்

ச. சோமசுந்தர பாரதியார்

"எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பது பண்டைச் சான்றோர் ஒப்பாரும் மிக்காருமின்றித் தாமே தனிமாண்பினராய் வாழ்ந்து கண்ட வாய்மொழியாகும். அம் முதுமொழி நாட்டுக்கு மட்டுமன்று, விழியெனக்கொள்ளும் மொழிக்கும், வழியெனப் பற்றும் விழுத்துணை நெறிக்கும் ஏற்புடைத்தேயாம். அகவிழியாம் மொழியின் தகவுகொண்டே ஒரு நாட்டின் நலத்தினை நல்லோர் நாளும் நவில்வர். மொழியின் வளமனைத்தும் கணக்காயர், பாவலர், நாவலர், புலவோர், ஆசிரியர் முதலியோர் நுண்மாண் நுழைபுல வளத்தாலாவன. இத்தகைய மூதறிஞர்களை வள்ளுவப் பெருந்தகையார் 'தக்கார்' என்னும் ஒரு சொல்லான் மொழிந்து அவரே 'மிக்கார்' என்னும் மெய்ம்மையினைக் குறிப்பிற் புலப்படுத்துவார் நடுவணதாகப் பெய்து நாட்டினர். அத் திருக்குறள் வருமாறு :

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு" —௭௩௧.

அம்முறையில் நம் நாவலர் எல்லாமாய்த் திகழ்ந்து பொன்றுப் புகழெய்திய வல்லார். செந்தமிழன்னை அவ்வப்போது வந்துறும் இடையூறுகளை மடிதற்றுத் தாமுந்துறும் ஆண்மை மிக்க மைந்தர்களைக்கொண்டு நீக்கிக்கொள்ளும் நீர்மையளாய்த் திகழ்கின்றனள். இந்நிலைமை கடைச்சங்கப்புலவர் தலைமணி நக்கீரனார் காலந்தொட்டு நிகழ்ந்து வருகின்றது. அந் நக்கீரனார் போன்று ஆக்கவும் அழிக்கவும் வல்ல நோக்கமும், நொடிப்பும், நூன்

முறைச் செயலும் ஊக்கமும் உழைப்பு மிக்காராய் நம்நாவலர் ஒருவரே இந்நாள் திகழ்ந்தனர்.

அவர்தம் உருவும் திருவும், நடையும் கொடையும், மொழியும் எழுத்தும், வழிகள் வகுக்கும் வண்மை விழியும், பழியொடு படாப் பண்பமை உரனும், அடையலரடங்க ஆற்றும் மறனும், நடையவர் விளங்க நாட்டும் அறனும், செந்தமிழன்னையின் சீர்மை காக்க முந்துறநிற்கும் முதன்மையும், உலகத்துயர்மொழி பலவற்றுள்ளும் தொன்மையும் நன்மையும். தூய்மையும் தனித்தியங்குந் தன்மையும், குறையாநிறைவும், இனிமையும் எளிமையும், இறையுணர்வுடைமையும், இலக்கண வரம்பும், நிரம்பும் இலக்கிய வளமும், அவ்வப்போது வேண்டும் சொற்களை ஆக்கிக் கொள் மாண்பும் ஒருங்கமைந்த தாய்மொழியாம் தமிழ்மொழியின் தனிப்பெரும் சீர் சிறப்பு அமிழ்திலுமினிய தமிழகமட்டுமன்றி இமிழ்திரையுலகம் எங்கணும் திகழத் தம் பெரும் புலமையால் பழம்பெருநூல் ஆய்வும், புதுப் பலநூல் யாப்பும் தமிழில் செய்தமைபோன்று ஆங்கிலத்திலும் செய்தமைத்த செயற்பேராண்மையும் கண்டார் உள்ளங் கவர்வனவாய்க் கேட்டாருள்ளம் நாட்டங்கொள்வனவாயுள்ளன.

இப் பெருந்தகையார் வரலாறு யாவரும் படித்துணர்வது அவர்தம் முன்னேற்ற வாழ்விற்குப் பெருந்துணைப் பெருவிளக்கமாக நிற்கும் பெற்றி வாய்ந்தது. அத்தகைய விரிந்த வரலாறு நம் கழகப்பதிப்பாக வெளிவந்துள்ளது. முழுவதும் அதன்கண் காணவிடுத்து ஒரு சிறிதுமட்டும் ஈண்டு வரையுதும்

செல்வர்தாம் உறையும் திருநெல்வேலி மாவட்டத்து எட்டையபுரம் என்று ஓர் ஊர் உளது. அவ்வூர் அறிவும் ஆற்றலும். மாற்றொணு ஆண்மையுப், உருவும் திருவும், உரனும் உண்மையும், அருளும் பொருளும் ஒருங்கு அமைந்த குறுநிலமன்னரால் ஆளப்பட்ட திருவூர். அவருள் பல்லாற்றானும் சிறந்த நல்லார் முத்துசாமி எட்டப்ப நாயக்க ஐயன் ஆவர். இவர் சென்னைக்கு வருங்கால் அறிமுகமாகி இவர்தம் நட்பைப்பெற்றவர் சுப்பிரமணிய நாயகராவர். இவர்கள் அந்நாளில் செந்தமிழ்ச் சித்தாந்தச் சைவச் சண்டமாருதமாகத் திகழ்ந்த சோமசுந்தர நாயகரின் உறவினராவர்.

சுப்பிரமணிய நாயகர் எட்டையபுரம் வந்து சார்ந்தார். மன்னரின் உள்படுகருமத் தலைவராகப் பணிபுரிந்தனர். இப்பணியின் பின் மன்னரின் ஒப்புதலின்மேல் தம்பெயரை எட்டப்ப பிள்ளை என வைத்துக்கொண்டனர். இவர்க்குப் பேராதரவுபுரிந்த மன்னரின் வளர்ப்புப் பெண்மகவொன்று அரண்மனையில் வளர்ந்து

வந்தது. அம்மகவின் பெயர் முத்தம்மை எட்டப்பபிள்ளைக்கு முன்னமே திருமணம் முடிந்திருந்தது. எனினும் மகப்பேறில்லாக் குறையொன்றிருந்தது. அதனை நீக்குதற்பொருட்டு அரண்மனை முத்தம்மையை மணந்துகொண்டனர். அந்நங்கை அரண்மனையில் வளர்ந்தமையால் மன்னற்குரிய உருவுந் திருவும், ஊக்கமும் உரனும், வளனும் வண்மையும் வாய்க்கப்பெற்றிருந்தனள். மனை வாழ்க்கையும் அத்தகு சிறப்புடன் நிகழ்ந்து வந்தது. அந்நங்கை கருவுற்றுக் கி. பி. 1879 ஜூலை 27 ஆம் நாள் நல்லதோர் ஆண் மகவை ஈன்றனள். அம்மகவே நம் பாரதியாராவர். அவருக்குத் தந்தையார் தம் அருமை மகனார்க்குத் தம் நெருங்கிய உறவினரும் ஒருங்கியவுள்ளஞ்சேர் சித்தாந்தச் செல்வருமாகிய 'சோமசுந்தர நாயகரின்' திருப்பெயரையே சூட்டினர். அத்துடன் 'சச்சிதானந்தன்' என்னும் அடைமொழியும் சேர்ந்து 'சச்சிதானந்த சோமசுந்தரன்' என வழங்குவதாயிற்று. பின்பு சுருக்கத்தின் பொருட்டு 'ச. சோ பாரதியார்' என வழங்கலாயினர்.

நாவலர் முப்பதுநாள் குழந்தையாக விருக்கும்போது அரசியார் 'இலக்குமி அம்மையாரின்' விழைவின்படி அவ்வம்மையார்பால் ஒப்புவிக்கப்பட்டனர். அவ்வம்மையாரால் சீர் சிறப்புடன் வளர்க்கப்பட்டனர். நாவலர் அரசர் திருவுடன் வளர்ந்து வந்தனர். அதனால் அவர் பிற்காலத்து அனைத்துத் துறையிலும் அரியேறெனத் திகழ்வாராயினர். ஐந்தாம் அகவையில் பள்ளிக்கு வைத்தனர். அரண்மனை ஆசிரியர் சங்கர சாத்திரியாரைக்கொண்டு எழுத்தறிவித்தனர். எழுத்தறிவிக்குங்கால் தமிழ்மொழி வடமொழி இரண்டினையும் அறிவித்தனர். தெய்வ சிகாமணி ஐயங்கார் பள்ளியில் சேர்த்தனர். நாவலர் பள்ளியிற் சேர்ந்தவன்று அவ்வாசிரியர் வேறொரு மாணவனைக் குருதி சொட்ட அடித்தனர். அது கண்டஞ்சிய நாவலர் அப்பள்ளிக்குப் போக மறுத்துவிட்டனர். அரசியாரும் அதற்கிணங்கி அரண்மனையிலேயே நிறுத்திக்கொண்டனர். பின் அவ்வரசியார் இறையடி எய்தினர். நாவலர் பெற்றோரில்லம் புகுந்து வளர்வாராயினர். அப்பொழுது நாவலருக்கு அகவை பதினொன்று. பெற்றோரின் பெருவிருப்புக்கு ஏற்பப் பள்ளி செல்வாராயினர். தந்தையாரின் தனிப்பெருஞ் சைவப்பற்று மைந்தனார்பாலும் விளங்குவதாயிற்று. நாவலர்பால் திருவெண்ணீற்றுப் பொலிவும் சிவமணிப்பொற்பும் என்றும் விளங்கின.

எட்டையபுரத்தில் நம் நாவலர் எட்டாம் வகுப்புவரை கற்றனர். கற்றுவருங்கால் அரண்மனைக்கு வந்து மீளும் புலவர் பலரின் சார்பால் தமிழின்மாட்டுத் தண்டாக்காதல் கொண்டு தனித்துக் கற்று வல்லராய்ப் பாடவும் திறம்பெற்றனர். இங்

னங் கற்ற தமிழ்க் கல்விக்குத் துணையாக உடன் பயின்றவர் நாட்டுக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாராவர். அகவை பதினைந் துக்குள் எட்டையபுரப் படிப்பு நிறைவுற்றது. பெற்றோர் பெரு விருப்பத்தின்படி திருமணமும் நிகழ்ந்தது. திருமண நிகழ்ச்சி யில், தெய்வத் தமிழ்மண மாட்சியும் கால்கொண்டது. அஃதா வது திருமுறைவல்ல ஓதுவாரடிகள் ஆசிரியராய்த் திகழ்ந்து திரு முறையோதிச் சடங்கினையியற்றத் திருமணம் நிகழ்ந்தது.

நாவலர் திருநெல்வேலிக்கு உயர்தரக் கல்வியின் பொருட்டு வந்தனர். சர்ச் மிசன் உயர்நிலைப் பள்ளியில் ஊக்கமுடன் படித்தனர். இப் பள்ளியோடு கல்லூரியும் இணைந்திருந்தமை யால் இடைக் கலை வகுப்பு (F. A.) முடியப் பயின்றனர். கல்லூரி யில் அறிவியற் பேராசிரியர் ஒருவர் சமயச் செருக்குக் கொண்டு இலக்கலத்துண்ணும் ஏற்றமுடைய ஒழுக்கத்தை இழித்துரைத் தனர். இதனை நாவலர் அஞ்சாது மறுத்து இலக்கலத்தாலேற் படும் மேலாம் நன்மையினை எடுத்து மொழிந்தனர். இதனை உணர்ந்த கல்லூரி முதல்வர் நாவலரை வியந்து பாராட்டினர். இங்ஙனம் பிற்காலத்து அரசியல் அலுவலகத்தும், முறை மன்றத்து விளங்கும் நடுவரகத்தும், முறைமன்றுக்கு வரும் அரசியல் முதன்மையரகத்தும் காணப்படும் நேர்மைக் குறை களையும் முறைகேடுகளையும் அவ்வவர் உணர்ந்து திருந்துமாறு தம் ஆற்றல்மிக்க சொல்லாலும், செயலாலும் அஞ்சாது வெளிப் படுத்துக் காட்டிய நிகழ்ச்சிகளும் பலவாகும்.

இடைக்கலைத் தேர்வை இனிதுறத் தேறிய நம் நாவலர் சென்னைக் கோநகரில் வந்து மேற்கலை பயில விழைந்தனர். நெல்லைக் கல்லூரி முதல்வர் சாஃப்டரின் பரிவுரைக் கடிதத் துடன் சென்னை வந்தனர். வந்து கிறித்துவக் கல்லூரி முதல்வர் மறைத்திரு. வில்லியம் மில்லர் துரைமகனாரைக் கண்டு கடிதத்தை நல்கி விழைவை மொழிந்தனர். அந்நாளில் மில்லர் துரைமகனார் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவுமிருந்தனர். அவர் இவரை அன்புடன் ஏற்றுக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டனர். அவர்க்கு நெல்லையில் நிகழ்ந்ததுபோல் கல்லூரிப்படி வசதி முதலியனவும் செய்தளித்தனர். ஆங்கு இவர்க்குத் தமிழ்ப் பேராசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள் பரிதிமாற் கலைஞரும் மறைமலையடிகளாருமாவர். இவர்தம் சார்பால் நம் நாவலருக்குத் தனித்தமிழ்ப் பற்றும் நாவீறுகொண்டு முழக்கும் முழக்கமும் நன்கு வளர்வவாயின. கிறித்துவக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் (B. A.) பெற்றனர். பின் சட்டக் கல்லூரியில் பயின்ற னர். படிப்பிற்கிடையில் தந்தையார் மறைந்தனர். இளமையில் மணம் செய்துகொண்டனர். மக்களும் மூவர் பிறந்தனர்.

பணமுட்டும் நேர்ந்தது. உலக மாதாவாகிய இலக்குமி அம்மை யாரால் அளிக்கப்பட்டிருந்த பன்னிரண்டு ஏக்கர் நிலத்தையும் விற்றுப் படித்தனர்.

1905 இல் சட்டக் கலையில் தேறினர். சின்னாள் அரசியலில் ஓர் எழுத்தராக அலுவல் பார்த்தனர். பின்னர்த் தூத்துக்குடி வந்து வழக்கறிஞர்த் தொழிலையேற்று வளமுற வாழ்ந்தனர். இவர் செய்யும் வழக்காய்வும், வழக்காடுதலும் நேரிய முறையும் சீரிய பாங்குமாகவிருந்தன. நகரத்தார் வழக்குகள் மிகுதியாக வந்தன. பெரும்பாலும் இவர் மேற்கொள்ளும் வழக்குகள் அனைத்தும் வெற்றியேயாம். 1913 இல் முதுகலை (M. A.)ப் பட்டம் பெற்றனர்.

அந்நாளில் அஞ்சாநெஞ்சுடன் நாட்டுப் பணிபுரிந்து, கப்பலோட்டிப் பெருந்தலைமை எய்திய வீரர் வ. உ. சி. அவர்களுடன் நாட்டுப் பணிபுரிந்து பெரும்புகழ் பெற்றனர். 1919 இல் மாநிலக் காங்கிரசு மாநாடொன்றினை நம் நாவலர் நெல்லையில் கூட்டினர். அக்காலத்துப் பெருந்தலைவர்களாகத் திகழ்ந்த சீனிவாச சாத்திரியார், சத்தியமூர்த்தி, எஃச். சீனிவாசய்யங்கார், அன்னிபெசண்டு அம்மையார் முதலியோரும் கலந்துகொண்டனர்.

காந்தியடிகள் 'ரௌலட் சட்டம்' என்னும் கொடுங்கோன்மையை அகற்றச் சுற்றுப்புறப்பாடு புரிந்தனர். அப்பொழுது தமிழ்நாட்டில் சென்னைக்கு வந்தனர். தமிழ்நாட்டில் வேறு எங்கும் காந்தியடிகள் போகும் திட்டம் ஏற்படுத்தவில்லை. அப்படிக்கிருந்தும் நாவலருடைய பேரன்பிற்கும் பெருவிருப்பிற்கும் வற்புறுத்தலுக்கும் இணங்கி அடிகள் தூத்துக்குடிக்கு வந்து சொற்பொழிவாற்றினர்.

1920 ஆம் ஆண்டில் வழக்காளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மதுரைக்கு வந்து வழக்கறிஞர்த் தொழிலை நடத்தி வந்தனர். சுயராச்சியக் கட்சியில் சேர்ந்த சி. ஆர். தாசை 1926 இல் மதுரைக்கு வரவழைத்து மாபெருங் கூட்டம் கூட்டிப் பேசுவித்தனர். அப் பேச்சினைத் தாமே மொழிபெயர்த்துரைத்தனர். 1930 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சட்ட எதிர்ப்புக்கு நம் நாவலர் பணந்திரட்டித் தாமும் பெரும்பொருள் வழங்கிப் பணி புரிந்தனர். கற்பும் பொற்பும் ஒருங்கமைந்த நாவலரின் மனைவியார் மீனாட்சியம்மையாரும் நாட்டுப்பணி பல புரிந்ததுடன் சிறப்பாகத் தாழ்த்தப்பட்டவர்க்குச் செய்த நலத்தொண்டுகள் அளப்பில. 1937 இலும், 1948 இலும் நடந்த மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் பலவற்றிலும் பேச்சாளராகவும் தலைவரா

கவும் விளங்கிப் புரிந்த ஆண்மைச் செயல்கள் அளப்பில. அந்நாள் முதலமைச்சராகவிருந்த ராசாசியார்க்கு விடுத்த ஆங்கிலத் திறவுக் கடிதம் ஓர் ஒப்பற்ற அறவுரைக் கடிதமாய் அனைத்துலகும் போற்றும் சிறப்பினதாய்த் திகழ்கின்றது. 1933 முதல் 1938 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராக வீற்றிருந்து எல்லையில் தமிழ்ப் பணிகள் வல்லவாறு புரிந்தனர். தமிழகம், கடல் கடந்த நிலங்களில் தமிழர்கள் வாழும் தமிழகம் முதலிய எல்லா இடங்களிலும் தலைவராய் நம் நாவலர் புரிந்த தமிழ்த் தொண்டு எண்ணில. பெற்ற பட்டங்களும் அளப்பில. அவற்றுள் ஒன்று யாழ்ப்பா ணத்துப் பெருமக்கள் 1944 இல் வழங்கிய 'நாவலர்' என்னும் பட்டம். 1954 இல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் 'கணக்காயர்' என்னும் பட்டம் வழங்கினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் 'டாக்டர்' பட்டம் வழங்கப்பட்டது.

1958 இல் நாவலர் இல்லத்துத் துவங்கிய 'தமிழகப்புலவர் குழுவுக்கு' நாவலரே நிலைமுதல்வராய்ப் பணிபுரிந்தனர். 1959–ஜூலை-27 இல் நாவலர்க்கு எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இயற்றிய நூல் களுட் சில, "திருவள்ளுவர், பண்டைச் சேரர், தமிழிலக்கிய மும் தமிழகமும், தொல்காப்பியத்தைப் பற்றிய கட்டுரைகள்" ஆங்கிலத்தில் வெளிவந்தன. "திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் பேரூர், சேரர் தாயமுறை, மாரிவாயில், மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி, தொல்காப்பியப் பொருட் படலப் புத்துரை" முதலியன தமிழில் வெளிவந்தன.

நம் பெருந்தலைவராய் வழிகாட்டியாய் நம்மிடையே வாழ்ந்து உறுதுணையாய்த் திகழ்ந்த டாக்டர் பாரதியார் பத்து நாட் களுக்கு முன் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். அந்நாளிலிருந்து பேச்சு நின்றுவிட்டது. உயர்ந்த மருத்துவங்கள் புரிந்தனர். புரிந்தும் 14-12-1959 இரவு 8-45 மணிக்கு மூச்சு நின்று முன்னோன் திருவடி சேர்ந்தனர். அவர் தமக்குத் திருவடி சேர்ந்தார்க்குச் செய்யும் சிறப்பனைத்தும் வேந்தரும் விழையும் வியப்புடன் நிகழ்ந்தன. அவற்றின் விரி வனைத்தும் இச்செல்வியின் மற்றொரு பகுதியில் காண்க. பாங்கார் பாரதியாரின் பண்பமையாவி கடவுள் திருவடியிற் கலந்தின்புறுக. கழகத்தாரின் ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் அவர்தம் குடும்பத் தார்க்குச் சேர்வதாக. ஈடு செய்யவொண்ணாப் பேரிழப்பெனி னும் நாடுமவர் தொண்டை நயந்து மேற்கொண்டு புரிதலே நம் பெருங்கடனாம்.

---

*நாவலர் பாரதியார் மறைவுக்கு இரங்கல்

இரங்கற்பாக்கள்

பிணக்காய வல்ல பேரறிஞர் டாக்டர்
கணக்காயர் நாவலர் காணின்—வணக்கமிலாத்
தூய தமிழ்த்தலைவர் சோமசுந்த ரப்பேரால்
மேயார் மறைந்தடைந்தார் விண்.

பாரதியா ரோமறைந்தார் பண்பார் தமிழினத்துள்
யாரவர்தம் நற்புலமைக் கீடாவர்—சீர்மிக்க
ஆய்வால் அறிவினால் அஞ்சா வுரைநலத்தால்
தேயா மனத்தால் சிறந்து.

—பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

இந்திமொழி வந்துபுக எண்ணியவர் இடிந்திடவே
முந்திவந்து தமிழ்காத்த மூதறிஞ! பாரதியே!
சிந்தனையின் சிகரமெனத் திகழ்ந்திருந்த பாரதியே
அந்தகனும் நினதுயிரை அஞ்சாது கவர்ந்தனனே!

கடமைசெயா மடமையர்கள் காசினியில் மிகவிருக்கத்
திடமிகுந்த பாரதியே! நீதானே செயற்குரிய
கடமைகளைத் தவறாது கண்டறிந்து முடித்துவிட்டாய்
உடலின்று மறைந்திடினும் உனதுபுகழ் மறைவரிதே!

—பேராசிரியர், அ. கி. பரந்தாமனார், மதுரை.

நாவலாரேத்துஞ் சிங்கம்! நயனுளார் போற்றுந் தந்தை!
பாவலார் பரவும் வேந்து! பண்புளார் கருதும் அண்ணல்
மேவலார் தமிழ்ப்ப கைஞர் விதிர்ப்புற்று வீழச் சாடுங்
காவலார் டாக்டர் சோம சுந்தரா! காண்ப தென்றோ?

'வாழ்வாங்கு வாழ்ந்தார் தம்மை வானுறை தெய்வ' மென்ற
வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல் வாழ்க்கையை வடித்துத் தந்தாய்
வாழ்வாங்கு வாழ்ந்த சோம சுந்தரா! மறைந்த மாயம்
வாழ்வாங்கு வாழும் தெய்வத் தமிழ்மொழி எனத்து ணிந்தோ?

—வித்துவான், அ. இராசகோட்டியப்பன், விருதை

---

*நாவலர் பாரதியார் மறைவு குறித்துத் தமிழகப்பெருமக்கள், புலவர்கள், அன்பர்கள் ஆகியோரிடமிருந்து வந்துள்ள இரங்கற்செய்திகள் பல. இடமின்மை கருதி அவற்றின் சுருக்கமே ஈண்டுத் தரப்பட்டுள்ளன.

நாவலவா! நற்சோம சுந்தரனே! நாடிமிக
ஆவலாய் உன்னை அழைத்ததெவன்—ஏவல்
விதியென்று சொல்லி வீண்மறலி கொள்ளச்
சதிதவறு செய்தானோ தான்.

பாவலனே! ஈண்டு பரிவுட னின்றேங்கக்
காவலற னின்றிக் கடந்தனையே—மேவிநீ
எங்குற்றாய் ஐயா! இனிவரவும் உண்டாமோ?
இங்குற்ற கோதென் இயம்பு.

செந்தமிழின் செங்கோல்நற் சீர்செறிந்தே
இவ்வுலகிற் சிறக்க வேண்டிச்
சுந்தரனே நீயடைந்த தொல்லைபல
ஆனாலுந் துளிபோல் எண்ணிச்
சிந்தைமிக நீயிருக்கும் இக்காலை
அக்காலன் சீர்த்தி நோக்கி
வந்தபெரு மடமைதனை மறப்பாரோ
இவ்வுலகில் மாண்புள் ளாரே.

—பலவான்குடி, திரு. மெ. வெ. வேலப்ப செட்டியார்.

தமிழருக்கு வீரமுண்டு என்றுபல
தமிழ்ப்புலவர் அவையிற் சொல்வார்
தமிழ்மொழிக்கு இடையூறு செய்வாரைத்
தாமென்றும் சார்ந்தே வாழ்வார்
தமிழருக்கு உரியதொரு தனிப்பண்பு
வீரமெனச் சாற்றல் அன்றித்
தமிழ்மொழியைக் குறைகூறும் தகவிலரைத்
தானடக்கும் தகைவு எங்கே!
தொல்காப்பியத்திலுள தூயபொருள்
அறியாமல் தோன்றி யாங்கே
அல்லபொருள் உரைத்திட்டார் அதைமறுத்து
நல்லுரையை அளித்தாய் அந்தோ!
பல்லோரும் துயர்க்கடலுள் மூழ்கிடவே
விண்ணுலகு பறந்தா யேனும்
எல்லோரும் தொழுஞ்சோம சுந்தரனே!
நின்புகழ்தான் என்றும் வாழி!

—தலைவர், மயிலம் தமிழ்க் கல்லூரி சி. துரைசாமி.

தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்தம்
பொய்மைக் கதையைப் பொசுக்கிய—ஐயனே !
நெஞ்சாலிவ் வாய்மை நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ ஏனை யவர்.

இற்றைநாள் யாமறிந்த புலவர் தம்முள்
இவரொப்பார் இந்நிலத்தில் இல்லையென்றும்
அற்றைநக் கீரனார் வந்து தித்த
அறிவுமுதிர் ஆசிரியர் ஆவரென்றும்
பிற்றைநாட் பெரும்புலவர் பேசு மாறு
பெருநிலத்தில் வாழ்ந்திட்ட பெருமை சான்றோய் !
கற்றவர்யாம் கனிந்துருகக் காலன் உன்னைக்
கவர்ந்திட்டான் கடுந்துயரம் எய்தி னேமே !
—பண்டித, ச. சாம்பசிவம், பசுமலை.

கட்டாயம் நுழைந்திடுவேன் எனவந்த
இந்தியினைக் கண்டு சீறி
'விட்டேனா பார் !' எனவே விரட்டியடித்
திடமுனைந்த வீரன் எங்கே?
தொட்டாலே மணக்குந்தொல் காப்பியம்வள்
ளுவர்கம்பர் துருவித் தேர்ந்து
தட்டாமல் பெரும்புலவோர் தாம்போற்று
முரைநூல்கள் சமைத்தோன் எங்கே?
இருந்தமிழே யுனக்காக இருக்கின்றேன்
எனக்கிந்நாள் எண்பத் தொன்று
பொருந்துவய தாயிடினும் உணர்வினிலே
இளமைநலம் பொதியச் செய்யும்
மருந்தெனநீ வயங்குகிறாய்' எனவுரைக்கும்
வகையிலுயர் வாழ்வு சூழ்ந்த
பெருந்தகையோன் தமிழகத்துப் புலவர்குழுத்
தலைவனவன் பிரிந்தா னந்தோ !
—சி. இராமசாமி, வத்தலக்குண்டு.

பாரதியா ரென்றால் பயனார் பசுமலைப்
பாரதியா ரென்றே பகர்வேமால்—பாரதியார்
ஏற்ற உடல்மறைந்த தேனும் தமிழ்வடிவுத்
தோற்றம் நமக்குத் துணை. —ஆ. சிவலிங்கனார், மயிலம்.

ஆய்வறிவின் கனிபழுத்த அரசே! நல்
லமுதளித்த முகிலே கல்வித்
தாய்மகிழ்ந்த மகவே! செந் தமிழ்வளர்த்த
பேராறே! தருக்கி வந்தோர்
வாய்மடக்கிச் செந்தமிழ்த்தாய் வாகைகொளப்
பணிபுரிந்த வாள்வீ ரா நீ
போய்மறைந்தாய் அந்தோ உன் பொன்னுளம்போல்
தமிழ்ப்பணியே புரிவோம் ஐயா!

—ச. பாலசுந்தரம், கரந்தைப்புலவர் கல்லூரி.

மாமதுரைச் சங்கமது மனங்குமுறி நின்றழூஉம்
ஏமமிகு புலவர்குழு ஏங்கிநின்று நின்றழூஉம்
சூழ்மதுரைச் சொக்கனழும் சுந்தரனே நின்பிரிவால்
தேமதுரத் தமிழழூஉம் தென்னாடு தானழூஉம்!

—நல்லிசைக்கவி, அ. இளங்கோவன், சீராவிகரிசல்குளம்.

ஆணழகன் சிங்கமென அறைதற்கேற்ற
அன்புதவழ் முகப்பொலிவும் அருளும் உண்டே
மாணெழிலாள் தமிழன்னை வளர்த்த மன்னர்
வையகத்தில் புகழ்நாட்டி மறைந்தா ரந்தோ!
தமிழகத்தில் இவரறியாத் தமிழர் உண்டோ?
தன்னிகரில் புலவரிவர் தமிழே வாழ்வு
தமிழ்மொழியும் ஆங்கிலமும் அறிந்த அன்பர்
தமிழகத்தே இவரிடத்தைப் பெறுவாருண்டோ!

—வித்துவான், வி. ப. நடராசன், பசுமலை.

அஞ்சாத நெஞ்சுரமும் ஆழ்ந்த நோக்கும்
அரியதமிழ்ப் பற்றுளமும் இன்ப அன்பும்
எஞ்சாத தமிழ்நடையும் ஏய்ந்த பண்பும்
எத்திசையும் தமிழ்வீரம் ஏத்தும் வாயும்
நெஞ்சாரத் தமிழ்ப்பகையை நீக்கும் சால்பும்
நிகரிலாத் தமிழ்வாழ்வு நீடுவாழச்
செஞ்சொல்உரை பாரதியார் மறைந்தா ரிந்நாட்
செந்தமிழ்நா டினிஎன்ன செய்யும் ஐயோ!

—வித்துவான், தி. கி. சுந்தரமூர்த்தி, மதுரை.

ஆங்கில மாரியம் பாங்கொடு பயின்றே
எம்ஏ பீஎல் என்னும் பட்டம்
பெற்ற நற்றவ! பெருமிதத் தோடும்
தண்டமிழ்க் குழைத்த ஒண்டிறற் பாரதி!
ரு. பாவலர் போற்று நாவல ரேறே!
சோம சுந்தர நரிசிலாத் திருப்பெயர்
பூண்ட பெரிய! புவிபுகழ் பாப்பி
எண்பதின் மேலும் இயலுற வாழ்ந்தனை!
பசுமலை யகத்தே பரிவொடு முற்றனை!
க0. நற்றிருப் புதல்வரைப் பெற்று முகந்தனை
தொல்காப் பியவுரை தோமறக் கண்டனை
மாரி வாயில் வளமொடு மியாத்தனை!
செந்தமிழ்ச் சங்கம் செழிப்புற வளர்த்தனை
தமிழுக் கிழுக்குச் சாற்றிடுங் கயவரை
கரு. முகத்து மீசையை முறுக்கி வீறுடும்
மருட்டி வெருட்டி மாழ்குறச் செய்தனை!
பாரதி பேச்சினைப் பரிவுறக் கேட்டோர்
வேறோ ருரையினை விரும்பிக் கேட்பரோ!
அத்திரு வுடைய ஐயரீ பூத
உ0. உடம்பினை யொருவி உமையொரு கூறன்
திருவடி சேர்ந்தனை மருவுறு சுற்றம்
நட்பினர் நற்றமிழ் வாணர் கலங்குறப்
பிரிந்தனை யந்தோபெரிது மாற்றேம்
எங்ஙன மாற்றுவம் எந்தா யந்தோ!
உரு. விகாரி யாண்டு விருச்சிகத் திங்கள்
நாலேழ் திகதி நவிலருஞ் சோம
வாரந் தன்னில் மருவினை கயிலை
என்பதைக் கேட்டே யிரங்கின மந்தோ!

—பண்டித, வித்துவான், இராம. கோவிந்தசாமிப்பிள்ளை, தஞ்சை.

செஞ்சொற் புலவ! செழுந்தமிழின் காவல!
துஞ்சினையோ தூய தமிழ்ப்பகையை—எஞ்சாது
வெல்லும் துணிவோடு வேறுலகம் சென்றனையோ?
அல்லல் எமக்கே அளித்து.

—பேராசிரியர், சி. இலக்குவனர், மதுரை.

கமழ்துறை தோறும் எங்கள் கனிதமிழ் ஆட்சி யோங்கத்
தமிழகப் புலவர் கூட்டத் தனிப்பெருந் தலைவ னாகி
இமிழ்கடல் வரைப்பில் எந்தாய் மொழிக்கிலை ஈடென் றூர்வம்
முகிழ்தரக் கூறிநின்ற மொய்ம்பனே! அந்தோ அந்தோ!

வஞ்சனை வழக்குப் பொய்ம்மை வன்செயல் சூழ்ச்சி யாவும்
அஞ்சிமுன் னழிய நல்ல ஆய்வுரை தமிழிற் கீந்து
நெஞ்சினி லுறையும் சான்றோய்! நிறைதமிழ் அறிஞ ரேறே!
துஞ்சுதல் முறையோ எங்கள் துயர்களைந் தருள்வார் யாரே?

பகுத்தறிந் தாய்ந்து சொல்லும் பண்புடைப் புலவ! உன்போல்
மிகத்தெளி வாய்விளங்க மெய்த்தொல்காப் பியத்தி னுக்குத்
தொகுத்துரை செய்வார் யார்? நீ தோற்றுவாய் செய்தாய்; அந்தோ!
அகத்தொளிர் விளக்கே எந்தம் அண்ணலே ஐயா அந்தோ!

முத்தமிழ்ச் சங்கம் போற்ற முதுதமிழ் ஆசா னாகி
நித்திலப் பவழக் கோவை நிகர்எழுத் தாள னாகி
புத்தமு தளித்த மேலோய் புலவர்தம் புலனே அந்தோ!
இத்தரை புலம்பச் சென்றாய் என்றினிக் காண்போம் ஐயா!

—தமிழகப் புலவர் குழுவினர்.

வள்ளுவர்யார் எனவினவி, வழங்கி வந்த
வாயல்லா வறுமொழியாம் கதைகள் யாவும்
வெள்ளமுறு துரும்பாகி விரைந்து மாய
விரித்துரைசெய் தறிஞரெலாம் வியக்கச் செய்தாய்!
உள்ளபடி தமிழ்உயர்வை உணரார் ஒப்பார்
உரைத்ததமிழ் நூலுரைகள் ஒவ்வா என்றே
ஒள்ளியதொல் காப்பியனூற் குரைவ ரைந்த
ஓங்குபுகழ் நாவலனே! ஒளிந்தாய் அந்தோ!
தருமனிடம் தருமமிலை என்றுகண் டாய்
தயரதனின் குறைகண்டாய் தகுதி யின்றி
அருமையுறும் அகத்தியனே இல்லை என்றாய்
அகலிகைபாற் குறைசிறிதும் காணேன் என்றாய்
இருமையினும் ஈடுதமிழ்க் கில்லை மேலாம்
இயல்நெறியில் முதிர்ந்துநறுஞ் செய்யுள் சான்ற
பெருமைநம தன்னைமொழிக் குரிமை என்னப்
பேசியபேரா சிரிய! மறைந்தாய் அந்தோ!

—இலக்கியக் கழகம், தஞ்சை.

சொன்மறவர் நற்சோம சுந்தரனர் பாரதியார்
இந்நிலத்தோர் போற்ற இனிதுறைந்தே—மென்மைமிகு
நற்றமிழைப் பேணி நயமாய்ப் பலநூல்கள்
கற்றெழுதி யாத்தார் கனிந்து.

அத்தகைய மேலோர் அருமைத் தமிழகத்தின்
வித்தகர்கள் யாரும் விதிர்விதிர்த்துச்—சித்தம்
கலங்கிடவே விண்ணடைந்தார் கன்னித் தமிழை
இலங்கிடயார் செய்வார் இனி.

—வித்துவான், நா. சிவராம முத்துக்குமாரவேல், தேனி.

செந்தமிழ்த் தலைவ னாகித் திறம்பொலி சிந்தையோடு
சிந்தனைச் செம்ம லாகத் திகழ்ந்துயர்ந் திலகு சோம
சுந்தர பார திப்பேர் தூயவ தமிழ்த்தாய் வாட
எந்தமைப் பிரிந்தாய் எந்தாய் இனியெவர் தலைமை ஏற்பார்!

திறங்கொண்ட தமிழர் பண்பும் சிந்தனை வளமும் மாண்பு
பிறங்கிடும் ஒழுக்க வாழ்வும் பீடுறக் கொண்டே நாளும்
அறங்கரை நாவின் ஓங்கி அவிர்தரு நாவ லரின்
நிறங்கிளர் வடிவு காணேம் நிலையுயர்ந் துயிர்தான் வாழி!

—பேராசிரியர், இராமசாமியடிகள், பேரூர்.

சிங்கத் தமிழர் திறமெல்லாம் சேர்ந்தோர் உருவாய்த் திகழ்ந்தோனே!
சங்கத் தமிழின் தகவெல்லாம் சலியா துரைத்துத் தகவாகத்
துங்கத் தொண்டு செய்திடவே சுரர்தம் நாடு சென்றனையோ!
எங்குற் றாய்என் றறியாமல் ஏக்கங் கொண்டோம் பாரதியே!

இந்தியை முந்தி எதிர்த்தாயே! எந்தாய் மானம் காத்தாயே!
அந்திய காலம் வரைவீணாய் அயரா துழைத்து அலுத்தாயே!
செந்தமிழ் மொழியின் காவலனே! சீர்மிக வுற்ற நாவலனே!
சுந்தர சச்சி தானந்த சோம சுந்தர பாரதியே!

—கோம்பை, சுருளியாண்டிப் பாவலர்.

காமு றத்தமிழ் காத்தபண் டாரகன்
சோம சுந்தர பாரதி சூருடல்
ஈம மெய்தினும் இந்நிலம் நிற்பனே
ஏம நல்லுரை ஏறென வென்றுமே.

—புலவர், ஞா. தேவநேயப் பாவாணர், அண்ணாமலைநகர்,

என்செய்வோம் அந்தோ! எமது குழுத்தலைவர்
முன்செய்த நல்வினையை முற்றுணர்வான்—பொன்செய்த
மேலுலகம் சென்றனரோ? வீரத் தமிழ்உலகம்
சாலத் தயங்கத் தளர்ந்து

—கவிஞர், எம். பி. மசூகரேனசு, தூத்துக்குடி.

தாரணி மொழிகள் தம்முள் தமிழ்மொழி சிறந்த தென்பர்
பார்தனில் கொடையோர் தம்முள் பாரியே பெரியோ னென்பர்
சாரதி தம்முள் மேலோன் சுமந்திர னென்று சொல்வர்
பாரதி பலருள் ச. சோ. பாரதி பெரியோ னென்பார்.

புலவராற் பாடப் பெற்றாய் புலவனு நீயே யானாய்
கலைவலார் தங்கட் கெல்லாங் காட்டெனத் திகழு கின்றாய்
நலமலி தமிழ்நாட் டார்தம் நன்றியை நவிலு கின்றார்
அலகில்சீர் நின்னுன் மாவும் அமைதிபெற் றுய்க மாதோ.

—திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தார்.

கீரனரின் வழித்தோன்றல் கேடயமாம் தமிழ்மொழிக்கு
தீரமுடன் வாதாடித் திறமையுடன் வெற்றிகாணும்
வீரமுள்ள நெஞ்சினராம் மிகநல்ல பண்பாளர்
பாரதியார் உருவையினிப் பார்ப்போமோ பாரினிலே!

பொன்னுடை கழகமதிற் போர்த்தியுமே கணக்காயர்
என்றழைத்தும் மகிழ்ந்தோமே: இன்றிலையே அப்பெரியார்;
"என்செய்வோம் பாரதிக்கே" என்றுநமை எங்கவிட்டுத்
தென்னகத்தின் தமிழ்த்தலைவர் சென்றனரே அமைதியுற!

—கி. பழநியப்பன் மதுரை.

தனித்தமிழை இழித்துப்பலர் பேசியதைத்
தன்மான உணர்ச்சியினால் திருத்திவந்த
கனித்தமிழைப் பரப்பிவந்த கணக்காயர்
காலத்தின் கோலத்தால் மறைந்தாரே!
இனியிந்தத் தமிழகத்தில் இவர்போன்ற
இனியதமிழ்ச் சொல்லறிஞர் பிறப்பதென்றோ?
கனியுறுக திருவடியின் நிழலினிலே
நல்லார்தம் ஆவிமிக இன்புறவே!

—வெண்பாவூர் பொ. திருஞானம்.

செந்தமிழே மூச்சென்று சீர்பலவும்
 மிகக்கொண்டு சிறந்த தான
முந்தையர்தம் வழிநின்று அறிவுரைகள்
 மக்களுய முயன்று தேடி
எந்தவிடத் தும்தமிழ்நா டினிதேறப்
 பாடுபடும் எங்கள் சோம
சுந்தரனே! நின்பிரிவு எந்தமக்கோர்
 ஆற்றவொண்ணுத் துயர மன்றே?
வீரமிகு பேச்செங்கே? வியன்தமிழ்ச்சொல்
 வாயெங்கே? மீசை எங்கே?
ஈரமிகு மனமெங்கே? மெய்ப்பொருள்காண்
 அறிவெங்கே? இனிமை தோய்ந்த
வாரமிகு கனிவெங்கே? வண்டமிழைக்
 காக்கவரும் வளமார் பெங்கே?
கோரமிகு கூற்றுவன்றன் பசிக்குணவாச்
 சென்றனவே! குணமிக் கோனே!
மண்ணுலகிற் கற்றுணர்ந்து மக்களுளம்
 மகிழவுரை வழங்கி, இந்நாள்
விண்ணுலகம் சென்றுதமிழ் விரிவுரைகள்
 ஆற்றுதற்கு விரைவுற் ருயோ?
பண்ணுடன்சேர் தமிழ்ஆய்வோர் குழுத்தலைவ!
 பாரினுனைப் பார்ப்ப துண்டோ?
கண்ணுளவிர் மணிஒளிபோல் தமிழ்த்தாயின்
 மலரடியிற் கலந்து வாழி!

—வித்துவான், தி. மு. சங்கரலிங்கம், திருவாமாத்தூர்.

உலகமெலாம் புகழ்சோம சுந்தரபா
 ரதியேநின் னுரையைக் கேட்க
வலவரிலர் புவிக்கணென மதித்தனையோ
 புலவர்குழு வானி னுண்டே
நிலமுழுசெங் தமிழையினி யவண்பரப்பு
 வாமென்ன நினைந்தாய் கொல்லோ
புலவர்குழுத் தலைமையண்மை பூண்டநீ
 யெமைப் பிரிந்த பொருளென்னேயோ.

பண்டித வித்துவான், தி. சங்குப்புலவர், சென்னை.

எட்டைய புரம்தந்த இளஞ்சிங்கப் பாரதியே!
சொட்டுதமிழ் ஈழத்தார் தொடுத்தசீர் நாவலனே!
கட்டுபுகழ் மாமதுரைக் கணக்காய! மூதறிஞ!
விட்டெமைநீ பிரிந்துவிட்டாய்; வேந்தவனைக் காண்பதெங்கே?
இந்திவெறி அரசுக்கோர் இருப்பாணி வைத்தடித்துப்
புந்தியறும் இச்செயலில் போகாதீர் போவீரேல்
நொந்தழிவீர் திண்ணமென நுவன்றவனும் சீர்ச்சோம
சுந்தரனைக் காண்பதெங்கே? சொன்மழையைக் காண்பதெங்கே?
மேவுபெரும் நிறையுடையாள் கைகேயி மிகுகுறையன்
காவலருள் காவலனும் தயரதனே எனக்காட்டி
ஏவுகணை விடுவோர் போற்சொற் போரினெதிர்வென்ற
நாவலனைக் காண்பதெங்கே? நனியாய்வைக் காண்பதெங்கே?
தண்டேந்து காமெங்கே? தமிழ்காக்கும் உரமெங்கே!
விண்டேந்து மொழியெங்கே? விறல்மீசைத் துடிப்பெங்கே?
கண்டேந்தும் அழகெங்கே? கழியிளமை வளமெங்கே?
கொண்டேந்து சிறப்பெங்கே? குறிப்பெங்கே? குணமெங்கே!

—தமிழாசிரியர், வித்துவான், இரா. இளங்குமரன், பரங்குன்றம்.

மலைபோலும் நிலையான கொள்கை வீரா!
மண்டிவிட்ட கொடுமைக்கு நீயே கூற்றம்,
அலைகாற்றில் பறக்கின்ற இலவம் பஞ்சாய்,
ஆற்றிடையே அகப்பட்ட நாணற் புல்லாய்
அலைகின்றோம்! தமிழ்ச்சுடரே! உயிரே!! உள்ளே
அமைந்திட்ட இதயத்தை உனக்கே தந்தோம்!
விளைகின்ற தமிழ்ப்பயிர்க்குச் செம்மை யூட்ட
வியன்சொல்லே ருழவரினி எவரே உள்ளார்?
நிலவிழந்த வானம்போல் நிலைகுலைந்து,
நீரற்ற கானலாய்ப் பொலிவிழந்து,
கலமிழந்த வீரன்போல் கைகள் சோர்ந்து,
நிலமிழந்த உழவன்போல் நெஞ்சம் வெந்து,
வளமிழந்த "கோவை"போல் வனப்பிழந்து,
குளம்பிரிந்த மீனைப்போல் உயிர்துடித்தோம்!
உலவிவந்த பேரேடே! தமிழின் பேறே!
உமக்குற்ற மறைவினிலே நொந்தோம்! நொந்தோம்!!

—வெ. வேதாசலம், மயிலம்.

வீரத் தமிழினத்தின் மேன்மைக் குழைத்ததமிழ்ச்
சூரப் புலிசோம சுந்தர—பாரதியின்
மீசைக்கஞ் சாதே விரைந்துயிர்கொள் கூற்றுவநின்
ஆசைக் களவில்லை யா?

—பண்டித, அ. முத்துசாமிப் புலவர், மதுரை.

நாடு துணையிழக்க நாந்தள் வலியிழக்கப்
பீடு பெறுதமிழும் பேச்சிழக்க—நீடுநின்
சால்பு நிறைமக்கள் தந்தை யிழக்கயாம்
மால்புகவே நின்னிழந்தோ மால்.

—பண்டித, மி. கந்தசாமிப்புலவர், மதுரை.

அமிழ்தாம் தமிழ்மொழி யள்ளி மாந்தி
தமிழ்மொழி யிலக்கணம் தன்னுட் சிறந்த
தொல்காப் பியரெனும் தூயோர் இயற்றிய
நல்காப் பியத்தை நானிலம் போற்ற
உரையொரு மூன்றே யியலுக் கெழுதித்
தரையினில் தந்த தக்கோர் பாரதி
நாவலர் என்றே நானிலம் புகழ்ந்தது
பாவலர் என்றே பாரோர் ஏத்தினர்
கணக்காயர் என்றே கற்றோர் புகன்றனர்
பிணக்கறுத் தாய்ந்த பெரியார் என்றே
டாக்டர் பட்டம் தானே வந்ததே
எல்லாம் வந்தபின் எம்மைத் துறப்பதோ?
மெய்யாய் வானவர் விரும்பினர் போலும்!
ஆவன செய்ய ஆங்கே சென்ற
செய்தி யெமக்கே உய்தியாய் இல்லை
கையா றெய்திக் கலங்கித் தவித்துச்
சுழலும் எமக்குத் துணிவுரை யாதோ?
முதுமையிற் பிறந்த குழந்தையைத் தந்தையர்
அன்பாய்ச் செல்வமாய் அணைத்து வளர்ப்பர்
அதுபோல் என்னையும் கற்பித்த அந்நாள்
என்று காண்பேன் இனியந் நிலையை
நன்றியும் வணக்கமும் நவிலுவன் இன்றே.

—தமிழாசிரியர், வித்துவான் நா. இராமையாபிள்ளை, எம். ஏ., மதுரை.

நாவலர் பாரதியார் மறைவுக்கு

இரங்கல் உரைகள்

பல்புகழ் நிறைந்த பாரதியார் தொல்காப்பிய உரையாலும் மாரிவாயிலாலும், மங்கல வாழ்த்தாலும், திருவள்ளுவராலும், கைகேயி நிறையாலும், நற்றமிழாலும் வாழ்வார். டாக்டரின் அரிய நூல்கள் என்றும் கிடைத்து வருமாறு நூற்பணி செய்தல் மக்களின் கடமை.

—டாக்டர், வ. சுப. மாணிக்கம், காரைக்குடி.

தமிழன்னை, தன் தனிப்பெரும் புதல்வனை யிழந்தாள் தமிழ் நாடு ஈடுசெய்ய முடியாத நட்டத்திற்குள்ளாகியது. அப்பெரியாரின் பூதவுடல் அழியினும் புகழுடல் என்லும் நிலைபெற்றிருக்கும்.

—பேராசிரியை ஆர். இராசாமணி அம்மையார், சென்னை.

டாக்டர். சோமசுந்தர பாரதியார், கற்றுத்துறைபோய பெரிய அறிஞர். தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்க்கலைக்கும், தமிழ் இசைக்கும் அவர் செய்த செயல்களும், தமிழக நன்மைக்கு அவர் ஆற்றிய பணிகளும் என்றும் மனத்தில் நிறுத்தத் தக்கன. தமிழ்த்துறையிலும், தமிழிசைத்துறையிலும், அவரது வழிகாட்டியைப் பெற்றது உண்மையிலேயே அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்கு நல்வாய்ப்புக்கிட்டியது எனலாம்.

—டாக்டர். இராசா. சர். எம். ஏ. முத்தையாச் செட்டியார், சென்னை

இறுதி மூச்சுவரை, தமிழ்—தமிழ்—தமிழ் என முழக்கிய அஞ்சா நெஞ்சர், தீரர், வீரர்—சோமசுந்தரபாரதியாரவர்கள் நக்கீரரின் மறுபதிப்பு. அவர்கள் வீரர் மட்டுமன்று, எத்தனை எத்தனையோ வீர உள்ளங்களையும் படைத்துவிட்டார்கள்.

—விரசிவம், திருவாவடுதுறை ஆதீன வித்துவான்.

திரு. சோ, அவர்கள் மறைந்துவிட்ட செய்தியைப் படித்ததும் சில நாட்களுக்குமுன் நான் அவர்களைச் சந்தித்தது—பல நாட்களுக்குப்பின் சந்தித்தது—நினைவுக்கு வந்து மனத்தை வருத்திற்று. 'ஆறுதல்' எழுத்துக்களில் ஒன்றும் பொருளில்லை. என் வயதுக்குக் கிட்டத்தட்ட இருப்பவர்கள் ஒருவர்பின் ஒருவர் மறைந்து போவதைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். எனக்கு ஒரு மாதிரியான வெட்கம் ஏற்படுகிறது.

—இந்திய முன்னாள் ஆளுநர், சக்கரவர்த்தி
இராசகோபாலாச்சாரியார், சென்னை.

திரு. சோமசுந்தர பாரதியாரவர்கள் மறைந்தமையறிந்து மிக வருந்துகிறேன். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு எத்துணை யளவு அவர் பணிபுரிந்துள்ளாரென்பதை நான் அறிவேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியப் பணி ஏற்பதற்காக, மிக வருவாயையுடைய தமது வழக்கறிஞர் தொழிலையும் விட்டார்; தமிழ்வளர்ச்சிக்கு நிறையப் பாடுபட்டார்; அதேபோன்று தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டார். சென்னையில் ஒரு வரவேற்பின்போது அவரைச் சந்தித்தேன். அவரது இழப்பிற்கு எனது உண்மையான வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

—டாக்டர். பி. சுப்பராயன், புதுதில்லி.

உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்ற உறுதிகொண்டு, கற்ற தொழிலைவிடக் கவின்மிகும் கன்னித் தமிழுக்கே என் பணி என்ற சூளுரையுடன் தன் வாழ்நாள் முழுமையும் தமிழ்ப் பணிக்கே செலவிட்ட திரு. சோமசுந்தர பாரதியார் அவர்களின் மறைவு தமிழகத்திற்கே ஏற்பட்ட பேரிழப்பு.

—இராசேந்திரன் நாடக மன்றம், சென்னை.

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் 20-12-59 ஞாயிறு காலை 10 மணிக்குச் சென்னை பச்சையப்பன் உயர்பள்ளி மண்டபத்தில் பேராசிரிய நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் மறைவு குறித்த இரங்கற் கூட்டம் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் M.A., M.L.C., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, அன்பு கணபதி, சிறுவை மோகனசுந்தரம், P. குருசாமி கோவை, C. தனக்கோடி, நாரா. நாச்சியப்பன், M. சண்முகம், புலவர் தனபாலன், அம்பை சங்கரன், புலவர் குருசாமி ஆகியோர்கள் திரு. பாரதியார் அவர்களின் தொண்டுகளையும், எழுத்தாற்றல், உண்மையை உரைப்பதில் அஞ்சாமை முதலிய பண்புகளையும்கூறி இரங்கினர். பின்னர்க் கீழ்க்காணும் முடிவுகள் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டன.

1. திரு. பாரதியார் அவர்களுக்குத் தக்க நினைவுச் சின்னங்கள் சென்னையிலும் மதுரையிலும் அண்ணாமலைநகரிலும் எழுப்பப்படுதற்கு அரசாங்கமும் செல்வர்களும் அறிஞர்களும் பல்கலைக் கழகங்களும் தமிழாசிரியர்களும் மாணவர்களும் முன் வரவேண்டும் என இக்கழகத்தார் கேட்டுக்கொள்கின்றனர்.

2. திரு. பாரதியார் ஆன்மா அமைதியுறும் வகையில் தமிழ்மக்கள் தொடர்ந்து பணிபுரிதல் வேண்டும் என இக் கழகத்தார் கேட்டுக்கொள்கின்றனர்.

—சென்னை மாநிலத் தமிழாசிரியர்கள் கழகம்.

நிலத்தில் யார்க்கும் அஞ்சாப் பெருநெறியும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டொளிர்ந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் தம் அருங்குணமும் பேரறி வாற்றலும் அமைந்த உயர்திரு. இராசாராம் பாரதி அவர்களே! உயர்திரு. இலக்குமிரதன் பாரதி அவர்களே! நாவலரின் பேரன்புக்குரிய அருமைச் செல்வியரே!

தமிழ்ப் பெருங்குடிமக்களின் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்த தங்கள் அரும்பெறல் தந்தையார் மறைந்தார் என்ற பேரவலச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டுத் துன்பக் கடலில் ஆழ்ந்துவிட்டோம். தமிழ் மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்து பங்குகொண்ட மன்றத்தின் வெள்ளிவிழாவிற்குத், தன்னிகரற்ற தமிழ்ப்பெருந் தலைவராய்த் திகழ்ந்த தங்கள் தந்தையார் சென்னை நகர வீதிகளில் அடலேறென வலம்வந்து விழாத் தலைவராய் அமர்ந்து பெருமுழக்கம் செய்து பேருரை யாற்றிய காட்சி எங்கள் உள்ளத்தில் தோன்றவும் செயலிழந்து, நிலைமறந்து கண்ணீர் உகுக்கின்றோம்.

"தொல்காப்பியப் புத்துரை, திருவள்ளுவர்" என்னும் நூல்களால் தம் நுண்ணிய ஆய்வினையும், 'மாரி வாயில்' 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்ற நூலால் பாநலனையும் வெளிப்படுத்திச் சிறந்த தமிழ்ப்பணி புரிந்த டாக்டர் பாரதியார் அவர்கள் புகழ் தமிழ்மொழி வளருந்தோறும் பரவிவிரவி நிற்றல் உறுதி.

அன்புக்கு உரியவர்களே! தங்கள் வாழ்வில் ஏற்பட்ட இப் பெருந் துன்பத்தில் நாங்களும் பங்குகொண்டு எங்கள் உளங் கனிந்த வருத்தத்தினையும், பரிவுமிக்க ஆறுதலையும் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் திருப் பெயர் வாழ்க!

—சென்னை மாணவர் மன்றத்தினர்.

மற்றும் கீழ்க்கண்ட பெருமக்களிடமிருந்தும் இரங்கலுரைகள் வந்துள்ளன :

ஆட்சிச்சொல்காவலர், கீ. இராமலிங்கனார், பேராசிரியர், ச. ஆறுமுக முதலியார், வித்துவான், மு. அருணாசலம் பிள்ளை, பேராசிரியை, ஆர். இராசரத்தினம் அம்மையார், டி. ஏ. வி. நாதன், பேராசிரியர், ரா. விசுவநாதன், புலவர், கி. வா. சகந்நாதன், பேராசிரியர், பூ ஆலாலசுந்தரஞ்செட்டியார், பரலி. சு. நெல்லையப்பர், ந. பார்த்தசாரதி, புலவர், முத்து. சு மாணிக்கவாசக முதலியார், முகவை இராசமாணிக்கம், கவிஞர், பெ. தூரன். நக்கீரர் கழகத்தார், டாக்டர். தருமாம்பாள் நினைவுப் படிப்பகத்தார்.

ஓம்

*வேலிக்கு வெளியே

(Life beyond death)

திரு. வ. சுப்பையா, (ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வி, சென்னை) அவர்கட்கு, ஆங்கில நாள் 7-10-59 இல் எம்முலக வாசியும், முன்னால் இராமகிருட்டிண மடத்துத் தொடர்பாளரும், வெளிநாடு சென்று இந்து சமயம், கீதை முதலானவைகளைப்பற்றி அரும்பெருஞ் சொற்பொழிவாற்றியவரும், மேலை நாட்டினில் "Life beyond death" (மரணத்தின்பின் வாழ்க்கை) யென்ற நூல் தொகுப்பாளரும், எம்முலகில் பெரும் பேறுடன் மகிழ்ந்து விருப்புடன் எம் போன்றவர்கட்கு, வேண்டுமுதவியளித்து வருபவருமாய சுவாமி அபேதானந்தா அவர்கள் திருவருள் துணைகொண்டு எம் இளையனும் இயக்குநர் திருவளர் இரா. ந. குற்றாலலிங்கம்வழி நாட்டிற்கோர் நல்லுரை வழங்க விழைந்ததை, இளைஞனின் அறிவுத்திறன் ஆங்கிலத்தில் அன்னவரைப் பின்பற்ற இயலவுள்ளதாக எமக்குத் தோன்றவில்லையாதலாலும், அன்னவர் இளைஞனின் அறிவு போதுமெனவும், தாம் வேண்டுவன செய்துகொள்வதாயு முரைத்தும், யாமாகிய தம்மன்பர் தமிழ்மொழியிலே "செந்தமிழ்ச் செல்வி"யிலே வெளியிடல் முதன்மையெனத் திருவருளை வேண்டி அவரையும் வேண்டி அன்னவரும் இயைந்து அருள் கொண்டதினால் யாமாகிய மறைமலை, அன்னவருரைப்பதை மொழிபெயர்த்தியக்கி வரைவது.

உடன்பிறந்தார்களே!

நாமாகிய இராமகிருட்டிண பரம அம்சரின் மாணாக்கராம் சுவாமி அபேதானந்தாவென உங்களால் அழைக்கப்பட்டவரும் அபேதானந்தராகிய யாம் இன்று உலகத்து மக்களுக்கு ஒரு செய்தியினை யளிக்க விருப்புக்கொண்டு, எம்முலகத்தாரோடு சிலநாட்களாகத் தொடர்புகொண்டும், மேலும் எம்முலகு நண்பராகிய வேதாசலமென்ற மறைமலையடிகளின் இளையனும் திரு. குற்றாலலிங்கம் எமது Life beyond death (Abhedanda Memorial Series No 1.) என்ற நூலைப் (All rights reserved, Published by Bramachari Amar Chaitanya, Ramakrishna Vedanta Math, 19-B. Raja Rajakrishna St. and Printed by Paramananda Sinha Roy, Sreekali Press, 65, 67 Sitaram Ghose St, Calcutta-9.) படித்துக்கொள்ள விரும்பிப் படிக்கும்போது, இதை நல்ல

* மறைமலையடிகளாரால் மொழிபெயர்க்கப்பட்டு இயக்குநர் வழி வந்ததிது.

முறையில் தமிழில் வெளியிட்டிருந்தால், மக்களுக்குப் பயன் படுமே என்று எண்ணி, இந்த அபேதானந்தா இருக்கிறாரோ வென, தலைவர் வழியும் அவர் குருவழியும் வேண்டி அழைத் ததில் யாம் இருக்கின்றோமெனக் குறிப்புடன் காட்டியும், ஆங்கி லத்தில் அன்னவனுக்கு அறிவு போதுமளவிலிருப்பதால் அன்ன வனை ஆங்கிலத்திலே இயக்கிச் செய்திவிடுக்க முயன்றபோது, தோழர் மறைமலையென்ற வேதாசலம் தமிழ்மொழியில், தாம் மொழிபெயர்ப்பதாயும் விரும்பிய வண்ணம், யாமாகிய அபேதா னந்தா உடன்பட்டு ஆங்கிலத்தில் மொழிந்தும், தோழர் வேதா சலமென்ற மறைமலை எமது மொழிபெயர்ப்பாளராக இருந்து மொழிபெயர்த்து இளைஞனை இயக்குகின்றார்.

உலகத்தின்கண் நாம் வாழ்ந்தபோது, மரணத்திற்குப்பின் மனிதர்களுக்குப் பிறவி உண்டா? மனிதன் மரணம் அடைந்த வுடன் அவன் உயிரென்ற ஆன்மாவும் அவனுடன் அழிந்து விடுகின்றதாவெனவுள கருத்துக்களைப் பிறநாட்டு மேதைகளுடன் விவாதித்து அவர்களுக்கு வேண்டும் ஆதாரங்களுடன் சொற் பொழிவுகளும் ஆற்றியிருக்கின்றோம். இதை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்த வல்லுநர்களும் இதற்கு ஓர் எல்லையென வகுக்க இயலாது, நமது சிந்தனைத்திறனற்று விடுகிறதே என எவ்வித முடிவிற்கும் வராது விட்டு விட்டனரென்ற கருத்தை எடுத் துரைக்க விரும்புகின்றோம். யாம் எமது தூல உடலைவிட்டு இங்கு வந்தபோது தெரிந்து கொண்டவையென்ன என்பது குறித்துச் சொற்பொழிவாற்றவே விரும்பி அதற்கு ஆங்கிலத்தில் "Life limit beyond death" என்ற தலைப்புக் கொடுத்ததைத் தோழர் மறைமலை "வேலிக்கு வெளியே" (Velikku Veliyae) என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

நான் எனது தூல உடலைவிட்டு இங்கு வருவதற்கு முன்னால் நான் இறக்குந்தறுவாயில் இருந்தபோது எனக்குத் தோன்றிய உருவம் சோதியினடுவில் தெளிவாகத் தோன்றிய என் குரு இராமகிருட்டிணப் பரமாம்சப் பொலிவே. என்னை அவர் இன்முகத்துடன் தம் இரு பொன்னொளி வாய்ந்த கரங் களை நீட்டி மகனே வாவென அழைத்தார். நான் இறப்பின் இறுதியிற்றான் அறிவைத் தன்வயமிழந்து சிறிது நேரமிருந் தேன். எனது மனதினுள் நான் அன்னவரையே நினைந்து கொண்டிருந்தேன். ஈற்றிலே, என்னுடைய விருப்பு நெடுநாளைய விருப்பு ஈடேற அவர் அருள்செய்தார். என்றுமே, மனிதர் களுக்குப் புரியாதவொன்றினை யடைய அதற்குகந்த ஆசிரியன் தேவை. நாம் பிற்காலத்தில் நம் ஆசிரியனைப் பாராது, அவன் வகுத்த வழிவகைகளைப் பின்பற்ற விரும்பும்போது, அவனை

உள் கருத்துள் ஆசிரியனாக நினைந்து, அவன் வழிகளைப் பின்பற்றுவோமானால் மட்டிலுமே, எதனையும் கடைவரை கொண்டு செலுத்த முடியுமென, நானாகிய அபேதானந்தா எச்சரிக்கிறேன். அவ்விதமில்லாது, ஒவ்வொரு தத்துவங்களிலும் மனிதன் தனது மூளையைத் தவறான கருத்துக்களிற் செலுத்தி எதையும் முடிவு காணாத நிலையையே அடைகின்றான். மேலும், ஒவ்வொரு மதத்தின் தத்துவங்களையும், ஆராய்தல் அவசியமே. ஆராய்ந்தறிந்தாலே என்னவெனப் புரிய இயலும். அவ்விதமாராய்தலின்றி ஒருவர்க்கொருவர் அவரவர்தம் மதமே பெரிதென நினைந்தும் அதன் விளைவாக ஒருவர்க்கொருவர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, இழிதொழிலாம் கொலையிற் கொண்டு விடுதலை நோக்கி வருந்துகின்றேன். நம் குரு இராம கிருட்டிணரின் அறிவுரைகளை நன்றாகக் கவனித்துக் கருத்துக்குள் செலுத்தி ஆய்ந்தால், இவ்விதப் பூசல்கள் எழுவதற்கிடமேயில்லை. பகவான் இராமகிருட்டிணருரைத்ததென்ன? மக்களே! வீணாக நீங்கள் உங்களை, நீங்களாகவே குழப்பத்திற் கொண்டு செல்கின்றீர்கள். ஆண்டவன் எச் சமயத்திற்கும் பொதுவானவனே, அவனை ஒவ்வொரு வகுப்பினரும் ஒவ்வொரு முறையில் வணங்குகிறார்கள். உவமைக்காக ஒன்றைக் குறிப்பிடுகின்றேன். நமது தாய் நாட்டிலே அகண்ட இந்தியாவிலே, எத்தனை மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர்? தண்ணீரை எடுத்துக்கொள்வோம். ஆங்கிலேயன் அவன் மொழியில் "வாட்டர்" என்றுரைக்கின்றான். தமிழன் "தண்ணீர்" என்றுரைக்கின்றான். ஒருமகன் "ஜல்" என்றுரைக்கின்றான். ஒருமகன் "பாணி" என்றுரைக்கின்றான். ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் அவரவர் மொழியிலே தண்ணீர் என்ற பெயரை மாற்றுவகையில் உரைக்கின்றார்கள். அதுபோல் கடவுளை எந்த முறையில் வணங்கினாலும், அது அவனையே சாரும். இதற்காக, எமது மதம்தான் பெரியதென்ற வீணுரைகள் தேவையில்லை.

நான் (அபேதானந்தா) முதலிலுரைத்தபடி என் குருதேவர் என்னை வாவென்றழைத்துத் தம்முடன் ஒரு வெண்மை நிறமே விளங்கி நின்ற உலகிற்கழைத்துச் சென்றார். நான், எனது உடலில் - தூல உடலில் கொண்ட ஆசை குறையாது, அன்னவரிடம் எனதுடல் இருக்கும் இடத்திற்கு என்னைக் கூட்டிக் கொண்டு போக விரும்பி வேண்டினேன். அதற்கு அவர் 'மகனே! நீ எவ்வளவு கற்றறிந்திருந்தும் இன்னும் மாயை என்றவொன்று உன்னை விடவில்லையே' என்று கூறி, எனது தலையைத் தன் பொன்னிறக் கரத்தால் தடவினார். எனக்கு அப்போதுதான் உண்மை புலப்பட்டது. என்னை அறிய முடிந்தது. எனக்கு வேண்டுவன செய்தார். நான் இருப்பது இருளல்ல,

சைதன்ய வலிபெற்ற வெண்மைகொண்ட உலகு. எம்முடன் அநேகர் இருக்கின்றனர். உண்மைகொண்டு வாழ்பவன் எவனுக்கும் இங்கு இடமுண்டு. எம்முலகில் இருளே கிடையாது; ஒளிதான். வெண்மையொளிதான்; எங்களுடலும் வெண்மைதான். எங்களுக்குப் பசி கிடையாது; உறக்கமே கிடையாது. ஆண்டவன் அருள் ஒளியில் ஆழ்ந்திருக்கின்றோம். இதற்குமேல் விவரித்துச்சொல்ல இன்று ஆணையில்லை. இன்னொருமுறை ஆணைபெற் றுரைப்பேன். இச் செய்தியை எங்கள் இராமகிருட்டிண மடத்துத் தலைவர்களுக்கு அனுப்பவேண்டி, (I request the editor of Sentamil-Selvi to send my message to our Swamiji's Mutt, Bless the editor.) இந்தச் செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரை வேண்டுகின்றேன். அவர்களுக்குத் தெரியும், என்னைக் கூப்பிட்டுப் பேச விரும்புவார்களானால் என் குருவினருளுடன் பேசுவேன் குருவும் பேசுவார். நாங்கள் சூக்குமஉடலுடன் இருக்கின்றோம்.

ஓம் தத் சத். (Om Thath Sath)

குறிப்பு: "வேலிக்கு வெளியே" என்பதின் பொருள் உலகத்து மாந்தர்களாகிய நீங்கள் உங்கள் காணுடல்கள் நான்கினை, தூல உடலென்ற வேலியினால் காத்து வருவதாக எண்ணுவதொன்றையே யாமாகிய மறைமலை வேலி என்று குறிப்பிட்டேம். அந்நான்கு உடல்களும் வேலி என்ற தூல உடலைவிட்டு உங்களை யறியாதே சென்றுவிடுகின்றன. ஆகவே, "வேலிக்கு வெளியே", யென மொழிபெயர்த்தேம்.

மறைமலை
மொழிபெயர்ப்பாளர், நெல்லை.

ஆவியுலகத் தொடர்பாளர்
நெல்லை, இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை

இவர் முதன் முதலில் ஆவிகளுடன் எழுத்துப் பலகை (Ouija board) வழிப் பேசும் வாய்ப்பைப் பெற்றனர். பின்னர் ஆவிகள் இவர்க்குணர்த்த உணர்ந்தெழுதும் வாய்ப்பும், ஆவிகளே இவர் கை பிடித்து எழுதும் வாய்ப்பும் பெற்றனர். இதனை மேலை நாட்டினர் ஆட்டோ ரைட்டிங் ((Auto-writing) என்று கூறுவர். இப்போது இரண்டு திங்களாக இவர்தம் சொந்தக் குரலை அடைத்து ஆவிகள் தம் இயற்குரலில் இவர்வழிப் பாடுகின்றனர், பேசுகின்றனர். இதனை மேலை நாட்டினர் எக்டோபிளாசம் (Ecto-plasam) என்பர்.

கழக ஆட்சியாளர் நெல்லைக்குச் சென்றிருந்தபோது 20, 22-12-59 ஞாயிறு, செவ்வாய் இரவுகளில் மறைத்திரு மறை

மலையடிகளார், ஜி யு. போப் துரைமகனார், திரு.வி.க., திருவரங்க நீலாம்பிகையார், காந்தியடிகள், செல்வன் கா. சு. வள்ளுவன் ஆகியோர் தத்தம் இயற்குரலில் பேசிய பேச்சுக்கள் இயக்குநர் நாடா வழிப் பதிவுப் பொறி (Tape Recorder)யில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இவர் இந்தியாவிலே தனித்திறமை கொண்ட ஆவியுலகத் தொடர்பாளர் (Medium) எனப் போற்றப்பெறுகின்றனர். இவருக்கு ஆவியுலகில் வாழும் மறைத்திரு மறைமலையடிகளார் காப்பாளராகவும் வழிகாட்டுபவராகவும் (Guardian and guiding spirit) அமைந்திருக்கின்றனர்.

சிவமே துணை

*திரு. பா. வே. மாணிக்க நாயகர் கடிதம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகப் பொறுப்பாளரும், சென்னைக் கிளை நிலையத்தைத் தன் இருப்பிடமாய்க் கொண்டுழைப்பவரும், திருவரங்கத்தினிளையரும் செவ்வேளருளாளருமாகிய திரு. சுப்பையாவிற்கு, என்னை எவரெனப் புரிந்திருப்பீரென எண்ணியும் எம்முலகென்றதோர் (நும்போன்றோர் காண்டற்கும், எண்ணுதற்கு முடியாததும், கற்பனையெனக் காணுதல், உரைத்தல், செவிவழி செய்தியுரைத்தல், வெளியிலுரைத்துப் பிறரை மயக்கலென்றதோர் பொருளேயன்றி வேறில்லையென வெண்ணும் தரத்திலேயுளது) தாம் காணுவுலகின்கண் வாழும் ஆவிக்கூட்டங்களில் சில பிரிவுகளிலொரு பிரிவில் வாழ்ந்து வருபவனும் தம்முலகின்கண் P. V. Manicka Naicker B. E., M. C. I. ஆக வாழ்ந்து ஊனுடல் கழித்துப் போந்தபின் வேறு பிறவி இல்லையென எண்ணி எள்ளி நகையாடியவனுமாகிய நான் இன்று ஆங்கில நாள் 23-9-59 இல் திருநெல்வேலியின்கண் உறைகின்ற ஓர் எம்முலகத்தொடர்பாளனும் இளைஞன்வழி, இன்றே எம்மை அழைக்க ஆவல் கொண்டு விளித்தல் செய்தவன் விருப்பிற் கிணங்கித் தமிழகத் தலைவன் "திரு. மறைமலையடிகளின் திறன்" என்ற கட்டுரை வரைய யாமே பணித்தியக்கி வரைவது. விருப்பிருப்பின் கொளல் நலம். இல்லையேல் எம்மியக்குநர்க்கனுப்புதல் நலம் என்ற வேண்டுதலுடன் மறு தாளில் முனைந்தனமென்பதை அறிவிக்கின்றேன்.

மாணிக்க நாயகர்

---

* இயக்குநர்வழி எழுதியது.

*திரு. மறைமலையடிகளின் திறன்

[திரு. பா. வே. மாணிக்க நாயகர்]

திரு. மறைமலையடிகளென்று வாழ்ந்தவர், தம் வழி தனியென வாழ்ந்தா ரென்பதே எம் கொள்கை. யாம் அவணிருக்குங் காலை, பின்னாட்களில் அவருடன் நெருங்கித் தொடர்பு கொண்டு அவரை, அவர் திறனை ஆய்ந்தவன். ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் தனியாற்றல் கொண்டவராயிருத்தலை, எவருமறியக் கூடியதே. ஆனால் நானாகிய மாணிக்க நாயகர் அன்னவரைத் துருவி ஆய்ந்ததின் பயனைக் கண்டதென்னை? அஃதென்னையென இவண் விரித்துரைக்கக் கருத்துட் கொண்டாலும், விரிவுரை சொற்சுவை, ஒலிச்சுவை யுடையதாய் நிகழ்தலே நலமெனக்கொண்டு ஒரு சிறுவுரையாகக் கூறுகின்றோம்.

தமிழிலே தனித்ததோர் ஆர்வம் கொண்டோன். தமிழ் மொழியே எம்மொழியினும் இனிமை மிக்குள்ளது, தமிழ் மொழியே தனித்ததொரு மொழி, எம்மொழிச்சார்பும் அதற்குடன் வேண்டா, செந்தமிழ் மொழியே தித்திக்கும் தீஞ்சுவை மிக்குள்ளது, அம்மொழியின் அழகை, ஒலியைப் பிறமொழிகளாலியைத்துரைத்துக் கன்னித் தமிழின் கற்பைச் சீர்குலையச் செய்துவிட்டனரேயென வுரைத்து உருகும் மாண்பினன். எம்மொழியும், நம்மொழியாம் தமிழ்மொழிக் கீடில்லை, இன்பத்திலே எடுத்துரைத்தால் இன்பமே தோற்றுவாய்; துன்பத்திலேயெடுத்தியம்பினால் சோகமே தோற்றுவாய்; ஆண்மையுடனெடுத்தறைந்தால் ஆணவமே தோற்றுவாய்; தாழ்மையிலேயெடுத்துரைத்தால் பணிவே தோற்றுவாய்; எக் கொள்கையினைக் கருத்துக் கொண்டுரைக்க விழைந்தால் அக்கொள்கையே தோற்றுவிக்கு மென்பதில் அசையா நன்னம்பிக்கை கொண்டவன். இஃதேயோவெனில் இஃதல்ல. மதமென்றால் மன்பதைக்கொரு மணம். மதமென்ற ஒன்றினால்தான் மக்கள் தம் மனத்துச் சிவமென்ற ஒன்றே, தனிப் பெருங்கருணையளிக்க வல்லதென நூற்சான்றுடன் எடுத்துரைக்கத் தயங்காத உறுதிகொண்டவுள்ளத்தினன். இயற்கையென்று உன்னுதல் திறனெனில், அவ்வியற்கையை இயக்கத் தனிய தோராற்றல் கொண்ட சத்தியே சிவம், சிவமே அன்பு, அன்பே கடவுளென உரைக்கத் தயங்காதோர் உள்ளத்தினன். தாம்கொண்ட கொள்கையினை வலியுறுத்திச் சான்றுடனுரைக்கத் தயங்கா

---

* இயக்குநர்வழி வரைந்தனுப்பியது.

நன் மனத்தினன். தனியொரு தலைவன் எவனெனல் சிவமே, அம்பலவாணனே யென்றும், எவரெதிருரைத்தாலும் இழித்துரைத்தாலும், மனம் மருளா மாண்பினன். மண்ணிலுதித்த காலை தொட்டு மதியினையொரு பொறியெனக்கொண்டு அதனை அறிவெனும் ஒரு கருவியாலியக்கி மாண்புற மகிழ்ந்து வாழ்ந்தனன்.

பொறிஇயலுக்கு மேற்பட்டதொரு காண இயலென்றவொன்றே உலகை இயக்குகின்றது. அக் காண இயலே, பொறியியலை, அறிவென்னும் ஆணையால் இயக்கத் தலைப்பட்டதெனச் சான்றுடன் எடுத்துரைப்பதில் தனியாற்றல் கொண்டோன். செல்வத்துளெல்லாம் சிறந்தது கல்விச் செல்வமே. அதனையறிய முயல்க வென வுரைப்பன். தாம் பெற்ற பேற்றினை இவ் வையகம் பெறுகவென எண்ணியே வாழ்ந்தனன். தான் ஆய்ந்த நூற்களின் கருத்தைத் தாய்மொழியாம் தமிழ்மொழியில், தனித்ததொரு நடையில் அழகுறச் சித்திரிக்கும் இயல்பினன். எழுத்து வல்லுநன், உரை வல்லுநன். அழகிலும் மிகுந்தவன். எக் கருத்தை எவர் வாய்க் கேட்பினும் அதனைச் சிந்தித்தாய்வு காணலில் தனித்ததோர் ஆர்வமிக்குள்ளான். யாமறிந்த மட்டிலே, தமிழகத்திலே, பலமொழி பயின்று, அம் மொழியினுள்ளுறைந்த பொருட்களை யுன்னி ஆய்தலில் அவர்க்கு நிகரவரேயென வாழ்ந்தவன். எத் துறையினுள் புகுந்தாலும், அத்துறையினைக்கண்டறியத் தனியதோராற்றல்மிக்குள்ளான். அவன் கொள்கைகளில் திறனுடைத்தாயது எதுவென வாய்ந்தால், "அவனன்றி எதுவுமசையா, நம்மாலாவதொன்றில்லை, இருப்பினும் முயற்சி திருவினை யாக்குமென்றே இதயத்துட்கொண்டு வாழ்தலே". மேலுமொன்றினை அறைகின்றேன். அழகிலே ஏன்? எத் திறத்தாரும் கண்டு வியக்குமோருருக்கொண்டு வாழ்ந்தனன். குரலிலோ குவலயத்தோர் நாண, நோக்க, மங்கை தன்னின் சொல்லோவென எவரையும் ஈர்க்கும் ஒலிகொண்டனன்.

இஃதோ இவணிருந்திதை எடுத்தியம்பல்தானே யென்றெண்ணலாம். மறைமலையடிகளென மாற்றுப் பெயர் தனித்தமிழிலே புனைந்து வாழ்ந்த தலைவன், எம்முலகிலுமோர் தனிப்பெருந் தலைவனாகத் திகழ்கின்றான். மேலுரைக்க ஆணைவரை செய்யப்பட்டு விட்டதே. இயற்கைக்கு மேற்பட்ட ஒன்றிருப்பதாலே, இவ்வாறு தொடர்பு கொண்டுரைக்க முடிந்ததென்பதனை மட்டும் மொழிந்துவிட்டுச் செல்கின்றோம்.

---

*திருவாட்டி ஈ. த. இராசேசுவரி அம்மையார்

கடிதம்

பேரன்புடைய பெருமகனும், போற்றுதற் குரியராம், சென்னையம்பதியுறை சீர்பெருகும் திருவருளைச் சிந்திக்கத் தொடங்கி அவனருளடைந்து வருபவராம், தமிழியக்கத் தந்தையாய்த் தரணிதன்னில் வாழ்ந்த மறைத்திரு மறைமலையடிகளாரின் செல்வியின் சிந்தைக்கினிய கணவராம் திருவரங்கம்பிள்ளையினிளையவராம், திருவருள் என்றுமே துணைசெய்யத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கண்காணிப்பாளராய்க் கருத்துடனுழைத்து அக்கழகத்தின் பெயரை அவனியில் அறியச் செய்துவரும் அன்பராம், செந்தமிழ்ச்செல்வியின் ஆசிரியர், திரு. சுப்பையா பிள்ளை அவர்களே, வணக்கம். என் மறைவு குறித்துச் செந்தமிழ்ச்செல்வியில் "விஞ்ஞானச் செல்வியென"வோர் கட்டுரையை வெளியிட்டு என் வாழ்க்கையைச் சித்திரித்த செந்தமிழ் வள்ளலே வணக்கம்.

சில நாட்களாக மறைமலையடிகளார் இந்த உடன் பிறந்தோன் வழித் தங்களுக்கு முடங்கல் வரைவதும் கட்டுரைகள் வரைந்து வருவதும் எனக்குத் தெரியும். எனக்கும் ஏதாவது ஒரு கட்டுரை வரைய விரும்பிய விருப்பு இன்றுதான் ஈடேறியது. அம்பை வழக்கறிஞர் திரு. சிவஞானம் பிள்ளை அவர்களின் புகைப்படத்தையடுத்துச் செந்தமிழ்ச்செல்வியில் என் படமும் வெளிவந்திருக்கிறது. அடிகளாரிடம் கூறி நானும் ஒரு கட்டுரை வரையவேண்டுமென்று விரும்பியதற்கு, அவர் எனக்கு வரைய இடமளித்தும், இந்தத் தம்பிக்கு (இயக்குநருக்கு) எனது நடை ஏதோ பிடித்தமில்லாத வகையில் தோன்றுவதாக எனக்கு ஓர் உணர்ச்சி தோன்றுகின்றது. அடிகள் போன்ற நடை இல்லையே என்ற எண்ணமே காரணம். நானும் எனது அறிவுக் கெட்டியவரை "பெண்ணின் கடமை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்து இத்துடனனுப்பியிருக்கின்றேன். தாங்கள் செல்வியில் வெளியிடத் தயங்கீர்களென்பது எனக்குத் தெரியும். நல்லமுறையில் கட்டுரைகள் வரையக் காத்திருக்கின்றேன்.

"தாங்கள் நீடிய ஆயுளுடன் நீள்நிலத்தில் வாழச் செந்துவர் வாயுமைபங்கன் அருள்புரிய அவனை வணக்கம் செலுத்தி விடை பெறுகின்றேன். வணக்கம்!

ஆங்கிலநாள்
20—11—59

அன்புள்ள,
இராசேசுவரி

---

* இயக்குநர் வழி வரைந்தனுப்பியது.

பெண்ணின் கடமை

[திருவாட்டி. இராசேசுவரி அம்மையார்]

தமிழகத்துத் தனித்திறன்கொண்டு தனியாட்சி புரிந்தவர்களில் பெரும் பங்கெடுத்துப் பெருமைப்படுத்திய பெருமை, பெண்ணினத்திற்கே எவ்வாறெனில் பண்டைத் தமிழகத்து அரசு செலுத்திய அரசர்களுக்கு அவர்தம் பட்டத்துத் தலைவியர்கள் அமைச்சராயிருந்து, அவரை ஊக்கிக் காலமறிந்து வேண்டுவனவற்றை யெடுத்துரைத்து இன்முகத்தான் இயம்பி, அவர் தம்மை வெற்றிகொண்ட வேந்தராய் விளங்கவைத்த பெருமை பெண்ணினத்தையே பெருமைக்குள் ஆழ்த்தியதனை எவரும் அறிய இயலுவதே. பெண்ணின் கடமையெனக் கருத்துட்கொண்டேயல்லாது பெண்ணின் பெருமையெனப் பறைசாற்றத் தன்னகத்துக்கொண்டு புரிந்ததல்ல. அவர்தம் கடனெனக் கண்டே, நாட்டிற்கும், மக்களின் வளர்ச்சிக்கும், அறிவுக்கும், திறத்திற்கும், மணிமுடிபுனையும் மன்னனே தலைவன். தலைவன் எவ்வழியோ, அவ்வழியே அவனைப் பின்பற்றுவோருமென்ற கருத்தைத் தாய்மைக்குலம் தன் கருத்துட்கொண்டே பணியினைப் பண்புடனாற்றியது. மேலும் பெண்ணின் கடனென்ன? அவள்தன் அருந்தொண்டென்ன? அவள்தன் கருத்தென்ன, அவள்தன் அற்றைய நிலை என்ன, இற்றைய நிலை என்ன என்பதனைப் பெண்ணினம் சரிவரப் புரிந்துகொண்டால், பெண்ணினமே பெருமையுடைத்தாய் நாட்டில் நன்னயமாய் வாழ வழி வகுக்குமோர் அரிய பணியா யமையுமெனக்கொண்டே, "பெண்ணின் கடமை" என்ற தலைப்பில் இதனை என் சிறிய அறிவிற்கெட்டியவரை வரைய, இயக்கத் திருவருளைத் தீர்க்கமுடன் சிந்தித்து முற்பட்டேன், இராசேசுவரி என்ற தமிழ்ப்பெண்.

பெண்ணினம் பெருமையுற வாழவேண்டுமானால், பெண்ணினம் கல்வியிற் சிறந்து திகழ்தல் முதன்மை.

அவ்வாறு பெண்ணினம் முழுமையும் உயர்தரக் கல்லூரிகளில் சென்று பயின்று பட்டம் பெற்று வாழ்க்கையை வளமுறச்செய்ய இயலுமாவெனக் கருத்துட்கொண்டால், இயலா. நாட்டின் பொருளாதார வளம் பொறுத்தே, அத்தகைய துறையில் ஆணினத்திற்குச் சரிநிகராகப் பெண்ணினம் கல்வித்துறையில் முன்னேற இயலுமேயல்லாது பிறிதொன்றில்லை. காரணம் என்ன? ஒரு நடுத்தரக் குடும்பத்தை உவமைக்கு எடுத்துக் கொள்வோம். அக்குடும்பத்து இரு ஆண்மக்களும், இரு பெண்மக்களுமிருந்தால், தாய் தந்தையர்கள் விரும்புவது, ஆண்

மக்களிருவரும் கல்லூரி சென்று பட்டம் பெற்று நிதி குவிக்கும் துறையிலீடுபடின் அவர்தம் வறுமையகன்று பெருவாழ்வு வாழலாமென்ற கருத்துட்கொண்டே அதற்கேற்ற வழி துறையிற் செல்ல விரும்புகின்றனரே தவிர, பெண்ணினத்தின் கல்வித் துறையிலோரளவாவது கருத்துச் செலுத்துகின்றனரோவெனில், அதுதானில்லை. பெண்மக்கள் குடும்பக் கலையை மட்டும், பயின்றால் போதும். கற்றுத் தேர்ந்து இவராற்றும் பணியென்ன? கிடைப்பது கெட்ட பெயரே. தவிர நமக்கு நன்மதிப்பல்லவென்றே பெரும்பாலும் எண்ணி வாளாவிருக்கின்றனரே தவிர, அவர்தம் நல்வாழ்வுக்கு உகந்த பணியாற்றுகின்றனரோவெனின், அதுதானில்லை. பெற்றோர்கள் கருத்திவ்வாறு எழுதல் பெண்ணினம் தம் இயல்பிலேயமைந்த அறிவை வளப்படுத்த வாய்ப்பில்லாது வாளாவிருத்தலையே தம் கடனெனக்கொண்டு வாழ்கின்றனரோவெனில், அதுதானில்லை. இயற்கையிலே பெண்ணினத்திற்குரிய, தாய்மைக்குலத்தின் தனிப்பண்பாம் பெருமையென உரைக்கும் தம் கடனும் குடும்பக் கலையில் ஈடுபடுத்தி வருங்கால உலகத்துச் சிற்பிகளை வாரி வையத்து வழங்கத்தக்கதாயதோர் நிலையாம் வாணெலிப் பெட்டியின் தன்மையையே அவர்களடைகின்றனரென்பதை எவரும் எதிர்த்துரையார். அவ்வாறு அவர்கள் வழங்கும் சிற்பிகளை அறிவிற் சிறந்தவராக ஆக்கத் தலைப்படுபவரும் பெண்ணே எனத் துணிந்துரைத்தும் அவர்தம் கடனெனவுமுரைக்கின்றேன். இவ்வாறு அறிவு புகட்டி வருங்காலச் சிற்பிகளை வளமுடன் வளர்க்கப் பெண்ணிற்கும் போதிய அறிவு இருந்தாலே, பொருந்துமேயல்லாது பிறவகையில் பொருந்தா. இதனைப் பெற்றோர்கள் அவர்தம் கருத்துட்கொண்டால், பெண்மக்களுக்கும் பெரும் பட்டக் கல்வி தேவையில்லை. ஓரளவாவது, பெண்ணினம் தம்மையறியவும், அறிந்து நற்பணிகளில் அவர்தம் சிந்தை செல்லவும் வழிவகுத்தல் நலமெனக் கொள்வாரேயன்றித் தவறெனத் தம்முட்கொளார். அத்தகைய கருத்தை வலியுறுத்தப் பெண்ணினம் ஒருங்கு சேர்ந்து முயற்சி செய்தால் அம்முயற்சி திருவினையாக்கும். அது அவர்தம் கடனெனக் கொண்டொழுகுதல் சாலச் சிறந்ததென, நான் உரைக்கின்றேன்.

மேலும் பெண்ணினம் உலகிலே மிகச் சிறந்த செயலை நிலைநாட்டுகின்றது. அச்செயல் எத்தகையதெனின், பிள்ளைப் பேறு என்பதே. ஆணினம் மருவுதலொன்றிலே பெருவிருப்புக் கொண்டு பெண்ணினத்தைச் சுமைதாங்கியென்ற கருத்திலே அவர்களை நினைந்து இழிவு படுத்திப் பெரும் இன்னலுக்காளாக்கி அவர்களைத் தம் கற்புநிலை பிறழச்செய்யப் பெருங்கேடு செய்கின்றார்களென்பதை நானெடுத்துரைத்தல் நன்றல்லவெனினும்,

எடுத்துரைக்கவேண்டிய நிலையில் இன்றைய சமுதாயச் சிற்பிகளாம் ஆணினம் செய்து வருகின்றனரென்பதனை எவரும் மறுத்துரையார். பெண்ணினம் தம் மதியிழந்து ஆணினத்தின் பேருரைகளாற்படும் துன்பங்களைக் கண்ணுற்றால் பொறுமையென்பதே அணிகலனெனக்கொண்டதோர் தாய்க்குலமென்று அவரைப் போற்றல் அறிவுச் செயலாம்.

இத்தகைய ஆணினத்தின் மொழிகளை மெய்யென்று நம்பி அவர்தம் நலத்திற்காய் இவர்தம் கற்பினைக் கெடுத்து, ஆணினத்தவரால் ஒதுக்கப்பட்டு, அவர்தம் பரிசுப்பொருளைத் தாங்கி, அவனியில் தலைநீட்டத் தயங்கிப் பெண்ணினத்தின் பெருமை இப்படிப் பாழ்பட்டதே யென எண்ணி அகத்தில் நினைந்து நினைந்து பிறரறியாவண்ணம் தம் பெற்றோர் சுற்றத்தைவிட்டு எவர் கண்ணிலும் படாது ஆதரவின்றித் திரிந்தும் இயல்பான இறப்பையடைந்தும் வருவது இற்றைய மக்கட்குழுவிலே சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றதென்பதனை எவருமறியலாம். இத்தகைய போக்குக் கொள்கைகளை வெருட்டி அடிக்கத் துணிவுடையவளாயிருப்பதற்கு முதலில் கல்வியறிவு தேவை. சிலருரைக்கலாம், கற்றபெண்களே அவர்தம் குடும்பப்பெருமையெல்லாம் விட்டுக் காதலனுடன் ஊர் சுற்றத் தயங்காரென்றும், குடும்பக் கலைமட்டும் ஓரளவு நன்றாகத்தெரிந்தால் போதும், கற்பு நிலைகெட வழியேற்படாதென வுரைக்கும் பெருமையுள்ளவர்களும் இந்நானிலத்தில்லையென எவருரைக்க இயலும்? கற்ற பெண்கள் தம்மோடொத்த கற்ற ஆண் மக்களுடன் நண்பரென்ற முறையில் நட்புக்கொண்டு உரையாடி வருவதைக் காணும் திண்ணைத் தூங்கிகள் கயிறுதிரித்து அவர்தம் கற்பினுக்கு இழிவு ஏற்படுத்தி அவர்களை அவர்கள்தம் ஒழுக்கத்திலிருந்து தவற அடிகோலுகின்றனர். ஒத்த வயதுடைய ஆணும் பெண்ணும் பழகுவதை ஓரளவு கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு அவர்தம் பெற்றோரைச் சார்ந்தது. தம்மகள் செல்வரொருவரின் செல்வனுடன் சேர்ந்தொழுகுதலைப் பெரும்பேறெனக் கருதும் பெற்றோர்களாலே இத்தகைய இழிநிலை ஏற்படுகின்றது எது எவ்வாறிருப்பினும் பெண்ணினத்திற்கென, அவர்தம் கடனென வழிவகுத்த, உலகம் உய்விக்கப் பிள்ளைப் பேறென்பதை இவர் தமக்கே உரியதென ஒதுக்கிய வல்லானைக் குறைகூறலே சாலப்பொருந்தும்.

ஆண்டவன் கற்பெனப்படுவது இருசாரார்க்கும் இயைந்ததேயெனக் கருத்துட்கொண்டமைத்தாலும், ஆணினத்திற்கும் ஒரு நியதியை அமைத்திருந்தால் இருசாரரும் கற்பில் வல்லுநராய் வாழ இயலுமென்பது எளியளாம் என் கருத்து. இருப்பினும் பெண்ணினம் எவ்வகையிலும் ஆணினத்தால் இழிக்கப்படுவதும்,

அவரை அடிமைகள், விலங்குகளெனக் கருதப்படுவதும் தம்மை யொத்தவர்களென்று எண்ணி மதிக்கப்படாததும் வருந்தத் தக்கதே.

இவ்வாறு ஆணினத்தால் இழிக்கப்பட்டாலும், தங்கடமை யெனக் கருத்துக்கொண்டுழைத்துவரும் பெண்ணினத்தின் பெருமையை எடுத்துரைப்பது எளிதன்று. தன் கணவன் தீக்குணமுடையவனாயினும், அவனைத் தன் கண்ணெனப் போற்றி, அவனுக்கு வேண்டும் பணிகள் புரிந்து அவனால் கிடைத்த பரிசுப்பொருள்களை, தான் வயிற்றுக்கில்லாது வாடி யும், அப்பொருள்களாம் குழந்தைகளைப் போற்றி வளர்க்குந் திறனைக் கருத்துட்கொண்டால் கடமையெனக் கூறுது வேறென்னவென்றுரைப்பது. தன் கணவன் கொண்டுவரும் வருவாய் போதாதெனினும், பெண்மகள் தன்மெய் சோர உழைத்துக் குழவிகளைப் போற்றி வருதல் எவருமறிந்ததே. அவள் தன் கடனெனக்கொண்டே செய்கின்றாள். தன் குழந்தைகளுக்கு உடல்நலங் குறைந்ததெனக் கண்டால், இரவு பகல் விழித்திருந்து அவர்களைப் பேணும் பெருந் தொண்டிலே, தன் நலமெல்லாம் இழக்கின்றாள். தன் கணவன் வேறொரு பெண்ணுடன்கூடிக் காதல் புரிந்து, தன்னைப் புறக் கணித்தாலும், இவளோ அவன் தன் கணவன், அவன் கட்டிய தாலி தன் கழுத்திலணிந்திருப்பதே தனக்குப் பெருமை, காலம் வரும்போது தன்னையுணர்ந்து தன்னை நோக்கித் திரும்புவான், என்று கற்புடன் வாழ்ந்து கண்ணகிக்கு ஏற்பட்ட நிலை பெண் ணினத்திற்கேற்படலென்பது வல்லான் வகுத்த வழியோவென எண்ணித் தன் கடமையாம், அவனுக்கு வேண்டும் பணிபுரியக் காத்திருக்கின்றாள் எது எங்ஙனமாயினும் பெண்ணினத்தின் கடமை இன்னதென அவர்கள் அறிதல் வேண்டும். அறிந்து அதன்படி ஒழுகவேண்டாமென எவருமுரையார்? பெண்மகள் முதலில் கடவுள் வழிபாடுடையவளாயிருத்தல் இன்றியமை யாதது. அத்தகைய கடவுள் வழிபாட்டிற்கு முதன்மையானது கல்வி. பெண்மகள் முதன்முதலில் தன் குழந்தைகளைக் கல்வி யறிவிற் சிறந்தவரா யிருக்கச்செய்தல் நன்று. அவ்வாறு கல்வி யறிவு ஊட்டும்போது கடவுள் வழிபாடும் அவர்கள் அறியும்படி செய்யவேண்டும். வீட்டின் தலைவி எப்படியோ அப்படியே அவள் பெற்ற செல்வங்களும். ஆகையால் பெண்மகள் எவ்வள வுக்கெவ்வளவு எல்லாக் கலைகளிலும் தன்னை மேம்பட்டவளாய்ச் சிறந்து வாழ்ந்து காண்பிக்கின்றனளோ அதுபோலவே அவள் பிள்ளைகளும் விளங்குமென்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். என்றுமே பெண் அவர்தம் கணவர்களின் போக்கையொட்டி அவர்கள் நல்வழியிற் செல்வரேல் அவர்களைப் பின்பற்றியும்,

அவர்கள் தவறான வழியிற்செல்லுவரேல் அவரை நல்வழிப்படுத்தும் அமைச்சராக அமைதல் வேண்டும். தம் குடும்ப நிலையையறிந்து வருவாய்க்குத் தகுந்த முறையில் வாழ்க்கைச் செலவைச் சிக்கனத்துடன் நடத்தி மீத்து வருதல் நன்று. தம்முடைய இல்லங்களைக் கூடியவரை தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் நன்று. கூடியவரை தம் வீட்டுத்தேவைகளைத் தாமே நிறைவு செய்தும் வாங்கும் பொருட்களை வீணாக்காமல் பாதுகாத்தல் நன்று. தம் குடும்பத்திலுள்ளவர்களுடன் நன்முறையிற் பழகி அவ்வீட்டுக்குத் தாமே தலைவியர் என்பதை நற்கருத்துடன் கொண்டு வாழ்தல் நன்று. தம் குழந்தைகள், தம் கணவர் இவர்களின் உடல் நலன்களை உன்னிப்பாய்க் கவனித்தும், தம் உடல் நலத்தையும் கருதி வேண்டுவன புரிதல் வேண்டும். இவ்வாறு மேற்கூறியவை தம் கடனென நினைத்துப் பெண்ணினம் கடமைபுரியுமானால் வள்ளுவர்பெருமான் வாய்மொழியாம்,

> "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு."

என்ற தன்மையை அடைவர். கன்னிப்பருவத்திலிருப்பவர்களாம், காரிகைகளுக்கு எளியளாம் இராசேசுவரி அவர்தம் கடமையை எடுத்துரைத்தல் நன்றெனக் கருதுகின்றேன். கன்னிப்பருவப் பெண்கள் என்றுமே அவர்தம் கற்பைக் காத்தலென்பதில் கருத்துடையவர்களாயிருத்தல் முதன்மை. அறிவு வளர வளரக் கற்பை நாகரீகத்தின் சின்னமென எண்ணுதல் தவறு. அவர்தம் பழக்கவாயிலாகவும், கற்றறிந்த பெண்கள் தம்பெற்றோர் உரைக்கும் கருத்தைச் செவி சாய்க்காது அவர்தம் விருப்பம்போல் கட்டிளங்காளையருடன் சுற்றித்திரிதலும், அவர்தம் மொழிகளால் தம் கருத்திழந்து, கற்பிழந்து, துன்ப நிலையடைந்து தம் வாழ்நாளையே பாழாக்கிக்கொண்டு வருந்துகின்றனரென்பதை அறிதல் நன்று. நாகரீகத்தின் சின்னமென்பது, பண்டைத் தமிழகத்தின் தனி உரிமையாம் கற்பின் கொள்கைகளைக் காற்றிலே பறக்க விடாது, பழந்தமிழ்க் கன்னியருக்குரிய பரம்பரை வழிவந்த பொருள். பழந்தமிழ்ப்பெண்கள் எவ்வாறு அவர்தம் கற்பைக் காத்துப் போற்றிவந்தனரோ, அந்நிலை மேலை நாட்டினரின் நாகரீக மோகத்தில் மூழ்கி, பொழுதுக்கோர் வகை தன்னிலை பிறழும் நாகரீகக் கோலத்தின் சின்னமென்பதே. கூடியவரை பெண்கள், குறிப்பாகக் கன்னியர்கள் கல்லூரிப் படிப்பிற்கு அவர்தமக்காய்த் தனித்தியங்கும் கல்லூரிக்குச் செல்லல் நன்று. அவர்தம கருத்தினைக் கல்வியிலே செலுத்தி ஆணினத்திற்குச் சரி நிகராய்த் தாமும் தம்மறிவாற்றலால் அரசியற்றுறையிலும், குடும்பத்துறையிலும் வல்லுனர்களாய்த்

திகழ்தல் சாலச்சிறந்தது. கன்னியர்தம் ஒழுகலாறுகளைக் கண்டு கட்டிளங்காளைகள் அவர்தம்மை உணர்ந்து தம்முடன்பிறந்தோ ளென எண்ணும்வகையில் நடந்து காட்டுதல் பெண்ணினத்தின் கடமையும் பெருமையுமாகும். மேலும் கற்றறிந்த கன்னியர்கள் காதல் வழிச்சென்று தம்விருப்பம்போல் காதலர்களை, வருங் கால வாழ்க்கையை வளப்படுத்தும் ஆணினத்தைத் தேர்ந் தெடுத்து அவர்தம் பெற்றோரை இவர்தம் கருத்துக்குட்புக வலி யுறுத்தல் தவறென யானுகிய தமிழ்மகளுரைக்கின்றேன். தம் கற்றறிந்த அறிவாலும், தம் பெற்றோரின் அறிவாலும், தமக்கு வேண்டிய நல்லுரை பகரும் பெரியோர்களின் அறிவாலும், இவற்றைச் சமன்செய்து வாழ்க்கைத்துணைக்குகந்தவன் எவ னெனத் தேர்ந்தெடுத்தலே சாலச்சிறந்தது. விளக்கொளி கண்டு வீழும் விட்டிலின் தன்மையை ஒப்ப நடப்பரேல் அதன் தன்மையே தமக்குக்கிட்டும் பரிசெனக் கொளல் நன்று மேலுமொன்றினை மொழிகின்றேன். கன்னியொருத்தி எண்ண லாம், காதல் கொண்டு எவனை எண்ணினேளே அவனே தனக்கு அரியதோர் பொருளாயகன்றனன். இனி என் வாழ்நாள் முழுமையும் எவரையும் கடிமணம் புரியாது வாழ்வேன் என்ற கொள்கையுடன் வாழ்தல் தவறென உரைக்கின்றேன். பெண் ஒருத்தி சிறிதளவு தன் கற்புநிலை பிறழ்வளேல், அதற்குரிய பரிசை அவளடையவேண்டுமென வல்லான் வழிவகுத்துள்ளா னென்பதைக் கன்னி, தன்கருத்துட்கொண்டவளாகித் தனக் குகந்தவனுடன் இல்லறம் புரிவதே பொருந்தும்.

பெண்ணினம் நாட்டிற்குத் தொண்டாற்ற வந்ததோருய ரினம் என்பதைக் கருத்துட்கொண்டு, அவர்தம் கற்புநிலை தவறாது, அணிகலனாகக்கொண்டு நாட்டிலே வாழ்வரேல், அவர் தம்மை எதிரிகளாம் பிற்போக்குடைய ஆணினம், (அனைவரு மல்ல) நெருங்குதற்கே அஞ்சுவரென்ற உண்மையை அறிந் தொழுகல் அவர்தம் கடனெனக் கொளல் வேண்டுமென்று விரும்பி வள்ளுவர் தம் பொய்யாமொழியினைக் கருத்திற்கொண்டு என்றுமே வாழ்ந்தால் பெண்ணினம் பெருமையுடன் வாழும்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்." —(திருக்குறள்)

என்பதை என்றுமே நினைந்து, கல்வியறிவில்லாக் கன்னியர்க்கும் இதன் பொருளைக் கல்வியறிவிற் சிறந்த காரிகையர் பெண்ணினத் திற்காற்றும் தம் பெருங்கடனெனக் கருத்துட்கொண்டு உரைத்து, வாழ வழிவகுத்தும், தாமும் வாழ்ந்து காட்டியும் வருவரேல் அதனினும் சிறந்தது வேறில்லை. வணக்கம்!

நக்கீரர்

[திரு. சொ. கந்தசாமி, பி. ஏ. (ஆனர்சு)]

(செல்வி சிலம்பு ௩௪-பரல் ௩, ௧௧௮ ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, *திருமுருகாற்றுப் படைக்கும் பிற சங்க ஆற்றுப் படைகட்கும் வேறுபாடுகள் உள்ளன. பிற ஆற்றுப்படைகள் இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். இம் முருகாற்றுப்படை ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். பிற சங்க ஆற்றுப் படைகள் ஆற்றுப்படுத்தப் பெற்ரோர் பெயர் பெறுதலும் இந்நூல் பாட்டுடைத்தலைவன் பெயர்த்தாகலும் காண்க. பிற ஆற்றுப் படைகள் பொருட்பரிசை நாடும்; இஃது அருட்பரிசின் குறிப்பிற்று. எனவே, நக்கீரர் செய்த புரட்சியே திருமுருகாற்றுப்படையின் தோற்றம் என்னலாம். புது முறையில் பிறக்கும் இலக்கியத்தை,

"விருந்தே தானே,
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே."

எனத் தொல்காப்பியம் சுட்டுதலானும்; இளம்பூரண அடிகள், "புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்" என்னும் உரைவிளக்கத்தானும் உணர்தல் வேண்டும். இவ்விதியை நோக்கின், திருமுருகாற்றுப்படை தொல்காப்பியர் செய்யும் "விருந்திற்"குப் பொருந்துவதாக உள்ளது.

இனி, முருகாற்றுப்படை "புலவராற்றுப்படை" என்று பண்டுதொட்டுப் பயின்று வந்தமை நச்சினர்க்கினியர்தம் உரையால் அறியலாம். இவ்வாறு கொள்ளின், இஃதும் இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும். அருட்பரிசைப் பெற்றான் ஒருவன் அது பெறுதற்கு அவாவும் புலவன் ஒருவனை முருகனிடத்து ஆற்றுப்படுத்தலைப் "புலவராற்றுப் படை"யில் காணலாம். இந்நூல் 284ஆம் அடியில், "முதுவாய் இரவலன்" என்று கூறப்பெறுதலான், ஆற்றுப்

* செல்வி, சிலம்பு ௩௪, பரல் ௩,—பக்கம் ௧௨௪இல் நக்கீரர் கால முதலியவற்றைக் காட்டும் பகுதியில்" உ. இலக்கண நக்கீரர் காலம்-கி. பி. 650, சமயம் - சமணம் 3. திருமுறை நக்கீரர் காலம் கி. பி. 850, நூல் 11-ஆம் திருமுறையால் ஒன்பது நூல் என திருத்திக்கொண்டு மேலுள்ளவற்றை ஆய்க.

படுக்கப்பெறுவோர் புலவர் என்பது போதரும். பொய்கையார் பாடிய புலவராற்றுப்படை யுள்ளும் "முதுவாய் இரவலன்" என்றே புலவர் குறிக்கப்பெறுகின்றார். இனி, முருகவேளின் இயல்புகளை முதல் 61 அடிகளில் மொழிகின்ற நக்கீரர்,

"எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே."

என்று இயம்புமாற்றான் உள்ளத் தூய்மை ஓம்பி இயவுள் அடியிணையே ஏத்துதல் வல்லாரை முன்னியவை எல்லாம் முட்டின்றி எய்தப் பெறுவார் என அறிவுறுத்துப் பின், முருகனின் இருக்கையை மொழியத் தவங்கி, கூடற் குடக்கில் பீடுறத் திகழும் பரங்குன்றிலும், காலைக்கும் சீரலைவாயிலும், ஒருவாப் பெருமை சேர் திருவாவினன் குடியிலும், சீரகங் கொண்ட ஏரகக் குன்றிலும், மால்வரை நிலத்தும், ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும், ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும், வெறியாட்டயரும் இடத்தும், இயற்கைத் தோற்றத்தும், பழமுதிர் சோலையிலும் முருகப்பெருமான் முகிழ்த்துத் திகழ்வான் என்றெடுத் துரைத்துப் பின்னர், 'முதுவாயிரவல! நீ எவ்விடத்து முருகைக் காணினும் அவ்விடத்தே முகமும் அகமும் மலரக் கைகூப்பித் திருவடி முடிமிசைப் படிய வணக்கமுற்றுச் செல்வ! புதல்வ! மகனே! கூற்றே! சிறுவ! குழவி! தலைவ! மார்ப! புலவ! ஒருவ! மள்ள! வெறுக்கை! சொன்மலை! ஏறே! கிழவ! முருக! ஆள! நெடுவேள்! இயவுள்! மதவலி! குரிசில்! எனப் பலவாறு பரவுக; "நின் இயல்பினை அளந்தறிதல் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய உயிரினங்களுக்கு அரியதாம்; ஒப்புமை யில்லாத ஒருவனே" என்று மொழிந்த அளவையில் முருகன் இளநலம் காட்டி முன்னர்ப் போந்து 'அஞ்சல் ஓம்புமின்' என நல்லுரை நவின்று பெறலரும் பரிசில் நல்கும்" என்று விதந்தெடுத்து விளம்பி ஆற்றுப்படையை அழகுற அமைத்துள்ளார்.

2. இனி, பிள்ளை அவர்கள் வாதிக்கும் இரண்டாவது காரணத்தின் தன்மையை ஆராய்வோம்.

மாரைக் கிளவி வினையொடுதான் முடியவேண்டும்; இதனை,

"மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப." (சொல்-உ0எ)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மாரைக்கிளவி வினையொடு புணரும் மரபு சங்கப் பாக்களில் உள்ளன. ஆயின் திருமுருகாற்றுப்படையில், " தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் " என்னுமிடத்து, முடிமார் = முடித்தவர் என்று பொருள் பட்டு "மனன்" என்னும் பெயர்ச்சொல் கொண்டு முடிந்தது. இங்ஙனம் ஒரோவோரிடத்துப் பெயரோடு இற்று நிற்றலைப் பற்றிக்கொண்டு அந்நூல் பிற்காலத்துப் பிறந்ததெனத் துணிதல் அறந்தானும் என்னில் அற்றன்று: நற்றிணையுள் கூசஆம் பாவில், "காமம் படரட வருந்தி, நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே" என்புழி மாரைக்கிளவி 'எமர்' என்ற பெயர் கொண்டு முடிதலைக் காண்க. அதுவேயுமன்றி, "மார்வினையொடும் முடிமே" (நன்னூல், ௩உஎ) என்புழி மயிலைநாதர் "வினையொடும் முடிமே" என்ற உம்மைச் சிறப்பாற் பெயரொடும் முடிமே எனக்கொண்டு, "பீடின்று பெருகிய திருவிற் பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே" என்னும் புறநானூற்றுப் பாவை மேற் கோள் காட்டல் அறிதற்பாற்று. ஆகலான், சங்க காலத்து இலக்கியங்களில் தொல்காப்பியவிதி நெகிழ்ச்சியுற்ற உண்மை உணரப்படும். இதனை எண்ணிப்பாராராய்த் திருமுருகாற்றுப்படையில் மாரைக்கிளவி பெயரொடு முடிதல் பிற்பட்ட வழக்கு; சங்க கால வழக்கன்று என்று துணிதல் துகளூற்ற கருத்தாம்.

இனி, பாடன்மார், காணன்மார் என்பன பாடுவோர் காண்பார் என்னும் ஆர்ற்று முற்றுச் சொல்லின் எதிர்மறையாய் ஒரு மொழிப் புணர்ச்சியான் மகரம் பெற்று நின்றன; எனவே இவையிரண்டும் மாரைக்கிளவியாகா; மகரம் பெற்ற ஆர்ற்றுச் சொற்களே என்று சேனாவரையர் நிகழ்த்திய விளக்கத்தைக் கடைப்பிடித்து மேற்காட்டிய பாடல்கள் நிரம்பா மேற்கோள் என்னிற் பிறிது கூறுவேன். புறநானூறு ௩கூஉஆம்பாவில், "உடம்பொடும் சென்மார் உயர்ந்தோர் நாட்டே" என்புழியும், அகநானூறு கூஎஆம் பாவில் " அரம்போழ் நுதிய வாளியம்பின் நிரம்பா நோக்கின் நிரையம் கொண்மார்... மறவா" என்புழியும் 'சென்மார்' 'கொண்மார்' வினைப்பெயர்ச்சொற்களாய்ப் பெயர் கொண்டு முடிதலான் மாரைக்கிளவியின் மரபுப் பிறழ்ச்சியுணரப்படும். அகநானூற்றின் பழைய உரைகாரர் "நிரையம் கொண்மார் = நரகம் புகுவார்" என்றே எழுதிச் சென்றனர். அன்றியும் பெயர் மேல் விகுதியாகவும் சங்ககாலத்தில் மாரைக் கிளவி வழங்கிய உண்மை, "தோழிமாரும் யானும்" (அகம். கரு) "மலிபூஞ்சாரல் என் தோழிமார்" (அகம் சஅ: ௬) என்பவற்றால் அறியப்படும். எனவே, 'மாரை' வழக்குப்பற்றிப் பிள்ளை அவர்கள் உரைப்பது போலியுரை என்பது போதரும்.

3. இனி, "பெறீஇயர்" என்னும் சொல் எச்சமாயாதல் வியங்கோளாயாதல் வருதல்வேண்டும். ஆயின், "ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்" என்புழிப் பெற்றவர் என்ற பொருளில் பெயராய் வருதலான் திருமுருகாற்றுப்படை பிற்காலத்தது என்கிறார். ஈங்குப் 'பெறீஇயர்' என்ற சொல் 'பெறீஇயோர்' என்ற சொல்லின் திரிபாகவே வந்துள்ளது. "மரீஇயோர் அறியாது மைந்து பட்டன்றே" என்ற புறநானூற்றுப்பாவில் வரும் 'மரீஇயோர்' மருங்குள்ளோர் என்னும் பொருள்தரும் பெயர்ச் சொல்லாம். அங்ஙனமே 'பெறீஇயோர் பெற்றவர் என்னும் பொருளில் பெயர்ச்சொல்லாய் வந்துள்ளது. 'பெறீஇயோர்' என்பதில் யகரமூர்ந்த ஒகாரம் "பெறீஇயர்" என்பதில் உள்ள யகர மூர்ந்த அகரமாதல் இயல்பே; 'கூறுவம்— கூறுவோம்' என்புழிப் போலக்கொள்க. "பெறீயர்" தொழிற் பெயர் என்று நச்சினார்க்கினியர் உரைகூறி யிருத்தலை உன்னிப் பார்க்கின் பிள்ளை அவர்கள் கருத்துத் தள்ளற்பாலதாம்.

4. 'மதி' இடைச்சொல் ஒரோவோரிடத்துப் படர்க்கையில் ஆளப் பெறுதலான் முருகாற்றுப்படை பிற்காலமாகும் என்பர் பிள்ளை அவர்கள். நக்கீரர் "விழுமிய, பெறலரும் பரிசில் நல்கும் மதிபலவுடன்" என்று அருளுமிடத்து மதியை இடைச் சொல்லாகக் கொள்ளவேண்டாம்; பெயர்ச்சொல்லாகவே கொண்டு "இனி, மதிபலவுடன் எனக்கூட்டி அறிவுகள் பலவுடனே பரிசில் நல்கும் என்று கூறுவாரும் உளர்" என்று நச்சினார்க்கினியர் நவில்வதை ஏற்றுக்கொள்ளலாம். அவர்க்கு முற்பட்ட உரைகாரர் மதியினைப் பெயர்ச்சொல்லாய்க் கொண்ட உண்மை ஒருதலையாக; இடைச்சொல் எனக்கொண்டு படர்க்கையில் வந்தது என்று கூறுதல் நேரிதாக இல்லை. இனி, மதியினை இடைச் சொல்லெனக் கொண்ட பரிமேலழகர், "மதி படர்க்கையில் வருதலைப் புறனடையாற் கொள்க" என்று கழறுதலும் காண்க.

5. தொகை நூல் பாக்களைப் பாடிய நக்கீரர் உலகமும் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் உலகமும் வேறுபடுதலால் இவ்விரு நக்கீரரும் ஒருவர் அல்லர்; இருவேறு காலத்தினர் என்பர் பிள்ளை அவர்கள். இக்கருத்து ஆய்வதற்கு உரியது.

நக்கீரர் யாத்த புறம் ௫௬ஆம் பாடலைத் திருமுருகாற்றுப் படையுடன் ஒப்புமை கூர்ந்த பிள்ளையவர்கள், "தாம் வழிபடும் தெய்வத்தோடு மக்கட் பிறப்பினன் ஒருவனை இந்நக்கீரர் ஒப்புக் கூறுவாரா? தெய்வபத்தியிற் சிறந்த இப்புலவர் மதுவைப் பொற்கலத்தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு ஒழுகுவாயாக என வாழ்த்துவாரா? என்று இரண்டு கேள்விகளை நம்முன்னர்க்

கொணர்கின்றார். ஈண்டைக்கு, "மக்கட் பிறப்பினன் ஒருவன்" என்று எழுதும் அளவிற்கு அரசன் எளியன் என்று சங்ககால மக்கள் கருதினரல்லர். இருபதாம் நூற்றாண்டில் வாழும் பலருக்கு அரசன் "மக்கட் பிறப்பினருள் ஒருவன்" என்ற அளவில்தான் தென்படுவான். இந்நூற்றாண்டில் கூடப் பலதுறைகளிலும் முன்னேறிய ஜப்பானிய மக்கள் அரசனைக் கடவுளாக மதிக்கின்றனர். மேலைநாட்டிலும் கூட (The Devine right thery) அரசரின் கடவுளம்சக் கருத்து நிலவிய காலம் உண்டு. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்னும் பண்பு பழுநிய பண்டைத் தமிழர் அரசனை இறைவனாக எண்ணினர். கடவுள் வாழ்த்துப் பாடி, தமது அறநூலை அருளிய வள்ளுவப் பெருந்தகையும்,

> "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்(கு)
> இறை யென்று வைக்கப் படும்."

என்று அறமுரைத்தார். அல்லாமலும், இயவுளருடன் ஏந்தலை ஒப்புமை கூர்ந்து கவிபுனைதல் பழந்தமிழ் மரபாகும். தொல்காப்பியனாரும் "பூவைநிலை" என்று துறையும் அமைத்துள்ளார். இறைவன் அரசனையும் குறிக்கும் கிளவியாகும்; இறைவன் ஐம்பெருங்குரவராக இலங்குகின்றான் என்பது ஆன்றோர் துணிபு. அவ்வைவருள் அரசனும் ஒருவனாவான். சமயத்தைக் கண்ணெனக் காத்தற்காகத் தம் வாழ்நாட்களைப் போக்கிய நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்" என்றும்; சிவநேயச் செல்வராய குமரகுருபரர், "அனைவோர்க்கும் தெய்வம், இலைமுகப் பைம்பூண் இறை" என்றும் அறிவுறுத்தலை எண்ணுங்கால், சமயக் கருத்துக்கள் அரும்பிக்கொண்டிருந்த சங்ககால நக்கீரர் முருகனைப் பாடிய வாயால் வேந்தனைப் பாடுதல் கூடாது என்றுதல், வேந்தனை இறைவனுடன் ஒப்பிடல் ஒவ்வாது என்றுதல் இயம்புதல் வேண்டாம். இக்காரணத்திற்காக நக்கீரர் இருவரானால், திருமங்கை மன்னனும், குமரகுருபரரும் தனித்தனியே இருபோராவர்!

இனி, "தெய்வபத்தியிற் சிறந்த இப்புலவர், மதுவைப் பொற்கலத்தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு இனிது ஒழுகுவாயாக என வாழ்த்துவாரா?" என்று விடுக்கும் பிள்ளை அவர்கள் வினாவிற்கு விடைகூறத் துணிகின்றேன். முருகனுக்கே மதுவிட்டுப் படைத்தலைச் சங்கப்பாக்கள் சாற்றும் காலை, அரசனை மதுவருந்துமாறு நக்கீரர் பாடினார் என்பதில் என்ன தவறு காணமுடியும்? அங்ஙனம் பாடிய காரணத்திற்காக மதுவருந்தப் பாடிய புலவரும் தெய்வத்தைப் பாடிய

புலவரும் இருவராவர் என்பது பொருந்துமாறில்லை. இவ்வாறு வாழ்த்துதல் சங்ககாலப் புலவர்தம் வழக்கம். உயிர், யாக்கை, செல்வம், இளமை—நிலையாமையினை அறிவுறுத்தத் துவங்கிய மாங்குடி மருதனர்,

"விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும."

என மதுரைக் காஞ்சியில் வாழ்த்துகின்றார். மதுரைக் காஞ்சித் தலைவற்கு நிலையாமையினை உணர்த்தி நன்னெறியில் நடத்தலை நவிலும் பொருண்மொழிக் காஞ்சி பாடும் மாங்குடிகிழார்,

"ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி." (புறம்)

என்று இயம்பியுள்ளார். ஔவைப் பிராட்டியும்,

"பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
......வாழ்தல் வேண்டும்." (புறம். ௩௬எ)

என்று வாழ்த்துகின்றார்!

இனி, சங்கத்து நக்கீரர் தொகைநூற் பாக்களையும் பத்துப் பாட்டுள் காணப்பெறும் திருமுருகாற்றுப்படையினையும் நெடுநல் வாடையினையும் ஒரே காலத்தில் யாத்தனராகக் கொள்ளுதற்கு இல்லை. அவர்தம் தொகைநூற் பாக்களும், நெடுநல் வாடையும் இளமைப் பிராயத்தில் யாக்கப் பெற்றனவாதல் வேண்டும். இல்லறத்தைச் செவ்வையுற நடத்துதற்குப் பொருள்வேண்டும். "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது பொன்மொழியாகும். சங்கப் புலவருட் பலர் புலமைச் செல்வத்தைக் கொடுத்துப் பொருட் செல்வம் பெற்று வாழ்ந்தனர். இம்மையின்பங்களைத் துய்க்காமல் மறுமையின்பம் நாடுதல் பீடாகாது. சமயத்திற்காகவே தம் வாழ்வைச் செலுத்திய ஆளுடைய அரசரும் இல்லற இன்பம் துய்க்காமை கருதிப் பாடினர்.

"..............................
தளையவிழ் கோதை நல்லார் தங்களோ டின்பம் துய்க்க
இளையனும் அல்லேன் எந்தாய் என்செய்வான் தோன்றினேனே."

என்பது அவர் திருப்பாசுரம்.

(தொடரும்)

சைவசமயர் சீர்திருத்தம்

[பண்டித. திரு. கா. பொ. இரத்தினம், எம். ஏ, இலங்கை]

"சைவசமயம் பழம்பெருஞ்சமயம்; தமிழர் சமயம் ஆரியர்கள் இந்தியாவிற்குள் புகுதற்குமுன் அரப்பா-மொகஞ்சதாரோ நாகரிக காலத்திலேயே கி. மு. 3500 ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்து விளங்கிய சமயம். இதனை இந்து சமயத்துள் அடக்கி வழங்குதல் முறையான செயலன்று" எனப் பண்டிதர் கா பொ. இரத்தினம் அவர்கள் கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற இந்து வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவிற் பேசும்பொழுது குறிப்பிட்டார். பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: இந்தியாவின் வைதிக சமயங்களை எல்லாம் இந்து சமயம் என்று வழங்கத் தொடங்கியவர்கள் மேனாட்டவரும் ஆங்கிலப் புலமை பெற்ற கீழ்நாட்டவருமே யாவர். நாவலர் காலம்வரையும் சைவம் தனித்து வாழ்ந்தது. சைவபரிபாலன சபை, சைவப்பிரகாச வித்தியாசாலை முதலியன காண்க. ஆங்கிலம் கற்றவர்களின் தொடர்பாலேதான் இந்து சாதனம் இந்துக் கல்லூரி எனும் பெயர்கள் இடம் பெற்றன. இந்து சமயத்துள்ளே சைவத்தை அடக்கியதால் தமிழின் சிறப்பும், தமிழரின் பண்பும், சைவத்தின் பழமையும் உயர்வும் மங்கிவிட்டன. கத்தோலிக்க சமயம், புறட்டத்தாந்து சமயம் என்று வழங்குதல் போல இந்து சமயம் என்றும், சைவசமயம் என்றும் வழங்குதல் நன்று."

"சைவ சமயத்தை வளர்ப்பதற்கு இலங்கையில் மூன்று வகையான நிலையங்கள் இன்று உள. கோயில்கள், கல்வி நிலையங்கள், சைவசமய சங்கங்கள் என்பனவே அவையாகும். இவை ஒன்றுபட்டுச் சமயத்தொண்டு செய்யவில்லை. இவற்றின் சமயப்பணிகள் இயைபுபடுத்தப்பட்டால் சைவசமயம் தான் இழந்த பழம்பெருமையைப் பெற்றிருக்கும்; சைவத்தின் உயர் நிலைக்கு மாறான அநாகரிகச் செயல்கள் சைவர்களிடையே எப்பொழுதோ ஒழிக்கப்பட்டிருக்கும். சைவத்தின் பெயரால் உயிர்ப்பலி இடுதல், கையிலுள்ள பணத்துக்குத் தகத் துண்டு வாங்கி அருச்சனை செய்வித்தல், வானவிளையாட்டு, சதுர்க்கச்சேரி போன்ற களியாட்டங்களைத் திருவிழாக்களுடன் நடத்தல் முதலியன சைவத்தை மாசுபடுத்துகின்றன. இவற்றை நீக்குதற்கு இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேனும் நம் சைவர்களும் சைவ நிலையங்களும் முற்படவில்லை. முற்படுஞ்

சிலருக்குப் போதிய ஆதரவுமில்லை. வயது வந்தவர்களிலும் வாலிபர்களே முற்போக்கு உடையவர்கள், உணர்ச்சியுடன் முயலத் தக்கவர்கள். ஆகவே இந்து வாலிபர் சங்கத்தினர் ஏனைய வாலிபர் சங்கங்களுடன் சேர்ந்து இந்தக் குறைகளை நீக்கிச் சைவ நீதியை உலகமெலாம் விளங்கச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

"தமிழர் கண்ட நெறி சிவநெறி. தமிழர்பேசும் மொழி தமிழ் மொழி எனவே சிவநெறிக்குத் தமிழோடு உள்ள தொடர்பு பண்டு தொட்டு உண்டானது பிறமொழிகளோடு உள்ள தொடர்பு இடையில் உண்டானது. இடையில் உண்டான தொடர்புகளாற் பழந் தொடர்பு பாதிக்கப்பட்ட காலங்களில் தமிழ்ப்பெருமக்கள் பலர் தோன்றிப் பழந்தொடர்பை நிலை நாட்டியுளர். தேவார திருவாசகங்களைப் பாடியருளிய நாயன்மார் களும் அணிமைக்காலத்தில் வாழ்ந்த நாவலரும் சைவத்தையும் தமிழையுந் தளராமற் பிணைத்து வைத்தார்கள். இந்த நூற் ருண்டிலே தமிழின் தனிச் சிறப்பையும் ஒப்பிலாப் பழமை யையும் தமிழ்மக்கள் நன்கு அறியத் தொடங்கிவிட்டார்கள். இவற்றை வேண்டுமென்றே சிலர் மூடி மறைத்துவைத்தார்கள் என்பதையும் உணரத் தொடங்கிவிட்டார்கள். தமிழ் நாடும், ஈழமும் அரசியற் சுதந்திரத்தையும் பெறறுவிட்டன. எனவே உணர்ச்சியுடைய—உண்மை காணும் ஆற்றலுடைய— தமிழறிஞர் கள் பலர் இன்று சைவ சமய வழிபாடுகள் யாவும் தமிழிலேதான் நடைபெறல் வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியுளர். இந்தத் தலைமுறையிலேயே இன்னும் இருபதாண்டுகளுக்குள்ளே தமிழ் சைவ சமயத்துறையிலே தான் இழந்த முதன்மையைப் பெற்றுவிடும் என்பதிற் சந்தேகமில்லை. பகுத்தறிவைச் சிதைத்து மானத்தைக் கெடுத்து இன்றும் தமிழரைப் பிற மொழிகளுக்கு அடிமைப்படுத்தும் போலித் தமிழருக்கு இனித் தமிழ் நாட்டில் இடமில்லை. மக்களின் விழிப்பையும், இயற்கை நியதியையும் பண்டை வரலாற்றையும் உணர்ந்து தமிழைப் போற்ற வெட்கப்படாமல் வீரத்துடன் வருமாறு இவர்களை இளைஞர்கள் அழைக்கவேண்டும்."

"யாவர்க்கு மாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

இந்தத் திருமந்திரம் சைவத்தின் உட்பொருளை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது. இதிற் குறிப்பிடப்பட்ட

வற்றை மிக எளிதில் யாவரும் செய்யலாம். சாதி, குலம், பிறப்பு, செல்வம், வறுமை, பட்டம், பதவி முதலிய வேறுபாடுகளை எல்லாம் தகர்த்துச் சமத்துவத்தை நிலைநாட்டுவது சைவம். அன்பு அருள் அறம்—இந்த மூன்றும் தமிழன் வாழ்ந்து கண்ட உயர் பண்புகள். இவற்றின் கருத்தழுத்தத்தை உலகிலுள்ள எந்த மொழியிலும் மொழிபெயர்த்துக் கூறல்முடியாது. அன்பிற்றொடங்கி அருளில் முடியும் வாழ்வுநெறிதான் தமிழன் கண்ட அறநெறி. இதுதான் சைவநெறி; சிவநெறி; தமிழ்நெறி; அன்பினைந்திணைக் களவுநெறி. அன்பும் சிவமும் ஒன்று. தமிழும் சிவமும் ஒன்று. எனவே அன்புக்கும் அருளுக்கும் மாறுபட்டனவற்றை யெல்லாம் சைவம் என்று போற்றும் மடமை ஒழிதல் வேண்டும்.

மறைமலையடிகள் நூல்நிலையம்

[சொற்பொழிவுகள்]

3 - 1 - 60 ஞாயிறன்று டாக்டர். S. R. ரங்கநாதன் அவர்கள் 'தமிழ் நூல்களைப் பெருக்குவது எப்படி?' என்ற பொருள்பற்றிச் சுவைமிக்க சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர். "இதற்கு முன்னர் வெளியிட்ட புத்தகங்கள் அனைத்தையும் தொகுக்க வேண்டும். அவற்றைப் பற்றியும் அவற்றின் ஆசிரியர்களைப் பற்றியும் குறிப்புக்கள் திரட்டவேண்டும். புத்தகங்களின் தேவை அதிகரித்துவிட்டது. பல துறைகளிலும் புத்தகங்கள் எழுதுவதற்கு எழுத்தாளர்களும் பெருகிவிட்டனர். எத்துறையில் புத்தகங்கள் இனித் தேவைப்படும் என்பதற்குப் புள்ளி விவரங்கள் எடுத்து அதைப் பதிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எழுத்தாளர்கள், ஓவியர்கள், நூலகப் பொறுப்பாளர்கள், புத்தகம் வெளியிடுவோர் இவரிடையே ஒத்துழைப்புவேண்டும்" என்று தம் உரையில் டாக்டர். ரங்கநாதன் குறிப்பிட்டார்.

6-1-60 புதனன்று மாலை டாக்டர். ரங்கநாதன் தலைமையில் சென்னை யு. எஸ். ஐ. எஸ். நூலக இயக்குநர் திருமதி சி. எப். ஜான்சன் சொற்பொழிவாற்றினர். அமெரிக்காவில் எவ்வாறு நூலகங்கள் இயங்குகின்றன என்பதை ஜான்சன் தம் உரையில் விளக்கினர்.

பொங்கற் புதுநாளில்!

[வித்துவான், சொ. சிங்காரவேலனார்]

[தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்]

பொங்குந் தமிழ்த்தாயே! புதுமை வளர்மதியே!
பொங்கற் புதுநாளில் பொன்னடிகள் போற்றுதுமே! (1)
பெற்றெடுத்த மக்களெமைப் பித்தந் தழுவாமல்
உற்றெடுத்துத் தழுவியின்ப ஊற்றெடுக்க வைப்பாயே!
சங்கப் புலவர்மடித் தவழ்ந்தசீர் இளங்குழவி
பொங்கி யெழுந்தின்று புத்திளமைப் பெண்ணானாய்!
என்றும் இளையவளே! என்னருமைச் செந்தமிழே!
பொன்றும் பொழுதுமுனைப் போற்றிசெய வேண்டுவனே.
இந்தி மொழிபேணி இன்பஞ்சேர் அன்னையுனைச்
சிந்தித் திடலின்றிச் சேயர்சிலர் வாழ்கின்றார்! (5)
அன்னவரும் உன்னடிகள் அன்புடனே ஏத்திசைக்கத்
தண்ணருளை வேண்டுகின்றேன்; தாராயோ தண்மடந்தாய்!
எழுத்துத் துறைபலவும் எங்கும் நினதருமை
வழுத்துந் திறமுடையோர் வாழவருள் செய்குவையே!
தனித்துத் தொழுதுன்னைத் தவழவிடுங் கொள்கைதனை
'இனிப்பில்லை' என்பாரை எடுத்துத் திருத்துவையே!
கலப்பற்ற செந்தமிழால் கதைகட் டுரையெழுதி
நிலத்துன்றன் மொழித்தொண்டில் நிலைக்கவெனைச் செய்குவையே
சாதிப் பிணக்காலும் சமயப் பிணக்காலும்
மோதிக் கலங்காத மோனநிலை யருளுவையே! (10)
ஆட்சிமொழி யாக்கி அன்னையுனை முன்னிடத்தில்
காட்சி பெறவைக்குங் காலமிது நற்காலம்!
கருத்தில் புலவரெனக் காட்சிதரின் அன்னோரைப்
'பொருத்தமிலை; போம்'என்னுங் காலமிது பொற்காலம்!
வாழ்த்துவையே தாயே! வணங்குகிறோம் சேயரெலாம்!
வீழ்த்தித் துயர்துடைத்து வெல்கவென்று பாடுதுமே!
பொங்கற் புதுநாளில் பொன்னடிகள் போற்றுதுமே!
எங்கள் குலவிளக்கே! எழுக! எனப் போற்றுதுமே! (14)

முதற்பாவலரும் பெருநாவலரும்

[மதுரைச்சிவம்]

முதற் பாவலர் என முத்தமிழறிஞர் முறையிட்டழைக்கும் திருவள்ளுவப் பெருந்தகையார், இவ்வுலக மக்கள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளைத் தமது ஒப்புயர்வற்ற திருக்குறளில் வகுத்துள்ளார். அம் முறைகளின்படி நந்தம் தமிழகத்தில் வாழ்ந்து சென்றவர் பலர்; அவருள் நாவலர்—கணக்காயர்—டாக்டர் என முப்பெரும் பட்டங்கள் பெற்ற ச. சோமசுந்தர பாரதியாரும் ஒருவர். இவரை, முதற்பாவலரின் பொருளுரையைப் பின்பற்றி வாழ்ந்த மூதறிஞர் எனலாம்!

'இறைமாட்சி' இயம்ப வந்த முதற்பாவலர், "அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும், எஞ்சாமை வேந்தற் கியல்பு" என்றார். மனத்திண்மையும், கொடையும், அறிவும், ஊக்கமும் ஆகிய இந்நான்கு குணங்களும் நாடாளும் வேந்தனுக்குரியவை என்பது பொய்யில் புலவர் கருத்து. தமிழ்மொழியின் வேந்தராய் விளங்கிய நாவலர் பாரதியாரிடத்து இந்த நான்கு பண்புகளும் இயல்பாய் இருந்தன என்றால் மிகையாகாது.

நாவலர், தமது வழக்கறிஞர் பட்டத் தேர்வை (பி. எல்.) எழுதி முடித்தவுடன், சென்னையிலுள்ள அரசினர் அலுவலகமொன்றில் சில காலம் பணி புரிந்தார். அவ்வலுவலகத்தில் இந்தியர், ஆங்கிலேயர், ஆங்கிலேய-இந்தியர் பணி புரிந்தனர். இந்தியர்கள் தலைப்பாகையுடனும், ஏனையோர் தொப்பியுடனும் வருவது வழக்கம். வெள்ளையர்களுடைய தொப்பிகளைக் கழற்றிவைப்பதற்கெனத் தனியாகத் 'தாங்கி' ஒன்று இருந்தது; ஆனால் அதில் இந்தியர் எவரும் தமது தலைப்பாகையைக் கழற்றி வைத்தல் கூடாது என்பது அவ்வலுவலகத்தில் நெடுநாட் பழக்கமாகக் கையாளப் பட்டு வந்தது. நாவலரோ, தாம் பணிபுரிய வந்த மறுநாளே, அத் 'தாங்கி'யில் தமது தலைப்பாகையைக் கழற்றி வைத்தார்; அது கண்டு வெள்ளையர் வெருண்டனர்; மிரட்டினர்; அச்சுறுத்தினர். நாவலர் அஞ்சினாரில்லை! இவ் வேறுபாடு தகாது எனக் கருதியவராய்த் தலைப்பாகையை அதே 'தாங்கி'யில் கழற்றி வைப்பதில் பின்வாங்கினாரில்லை. இச் செய்தி, அவ்வலுவலக உயர் அலுவலரான துரைக்கு எட்டியது. அவரோ, நாவலரின் அஞ்சாமையைப் பாராட்டினார்; அன்று முதல் வெள்ளையருக்கும் இந்தியருக்குமிடையே காட்டப்பட்ட இவ் வேறுபாடு நீங்கியது!

காங்கிரசுக் கட்சியில் பெரும் பங்கு கொண்டவரான நாவலர், உப்புச் சத்தியாக்கிரக காலத்தில், தென்னகத்திலிருந்து நன்கொடை திரட்டித் தந்ததுடன், தாமும் திங்கள்தோறும் பெருத்த தொகையை அன்பளிப்பாகத் தந்துதவினர். அன்றியும், தமிழிலக்கியக் கழகங்கட்கு அவ்வப்போது நன்கொடை தந்தும், தமிழாசிரியர்கட்குத் தம் நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்தும் உதவி புரிந்துள்ளார். ஏழை மாணவர்கள் கல்வியறிவு பெறும்பொருட்டுத் தமது சொந்தப் பணத்தில் உசிலங்குளம் என்ற ஊரில் பள்ளி ஒன்றையும் நிறுவியுள்ளார். இவையனைத்தும் நாவலரின் ஈகைத் தன்மையைக் காட்டுவனவாம்.

நாவலர், தமிழ்மொழியில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் அளவிறந்த புலமை உடையவர் என்பதை இவர் இயற்றிய நூல்களின் வாயிலாக அறியலாம். 'திருவள்ளுவர்', 'பண்டைச் சேரரைப் பற்றிய சில ஆராய்ச்சிகள்', 'தமிழ் இலக்கியமும் தமிழகமும்' என்ற ஆங்கில நூல்கள், 'தொல்காப்பியத்'தைப் பற்றிய ஆங்கிலக் கட்டுரைகள், இந்திமொழி பற்றித் திரு. இராச கோபாலாச்சாரியாருக்கு எழுதிய ஆங்கிலக் கடிதம்—இவை நாவலரின் ஆங்கிலப் புலமையை அறிவிப்பன. 'திருவள்ளுவர்', 'தசரசன் குறையும் கைகேயி நிறையும்', 'சேரர் பேரூர்', 'சேரர் தாயமுறை', 'மாரிவாயில்' 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி', 'தொல்காப்பியர் பொருட் படலமும் புத்துரையும்', 'நற்றமிழ்'—இவை நாவலரின் தமிழ்மொழிப் புலமையை அறிவிப்பன.

நாவலரின் ஊக்கமுடைமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு, இவரால் தொடங்கப்பட்ட கட்டாய இந்தி எதிர்ப்புப் போராகும். இப் போராட்டத்தில் இவர் பட்ட இன்னல்கள் எண்ணிறந்தன. தாம் பிறந்த எட்டையபுரத்திலேயே, இந்தியை எதிர்த்துப் பேசியதற்காகக் கல்லால் எறியப்பட்டார்; பலரது தூற்றுதலுக்கு உள்ளானர். எனினும் தமது ஊக்கத்தைக் கைவிட்டாரில்லை நாவலர். தொடர்ந்து போராடினர்; வெற்றியும் பெற்றார்!

"அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார், குன்றுவ செய்தல் இலர்" என்பது 'குடிமை' என்ற தலைப்பில் வந்துள்ள குறட்பாவாகும். இதற்கேற்ப வாழ்வு நடாத்தியவர் நாவலர்.

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனர் தொடங்கிய கப்பற் கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பைச் சிலகாலம் ஏற்று நடத்தினர் நாவலர். கப்பற் கம்பெனியின் வளர்ச்சிக்குப் பெரு முயற்சி எடுத்துக்கொண்ட நாவலரை அடக்கி ஒடுக்க ஆவன செய்தனர் ஆங்கிலேயர். ஆயினும் சட்ட நுணுக்கமறிந்த

நாவலரை, ஆங்கிலேயரின் அடக்குமுறை எதுவுஞ் செய்ய இயலாது போயிற்று. எனவே சூழ்ச்சியில் வல்ல ஆங்கிலேயர், கப்பல் கம்பெனிப் பொறுப்பினின்றும் விலகிவிட்டால் பெரிய அரசுப் பதவியைத் தருவதாக நயமுடன் வேண்டினர். இத் தகாத செயலுக்கு நாவலர் ஒருப்படுவரோ? அவ்வாறு வேண்டின வரை, வேண்டிய மட்டும் இழித்துரைத்து வெறுத்தொதுக்கினர் நாவலர்!

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற முதற்பாவலர் கூற்றை, வாழ்வின் எப்பகுதியிலும் கொண்டவர் பெருநாவலர் எனப் பெருமையுடன் கூறலாம். இவரெழுதிய நூல்களனைத்தும் இக் கருத்துப் பற்றியே எழுந்தவையாகும். "எந்தப் பெரியார் எதைப் பற்றிக் கூறினும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; என் மனதிற்கு எது உண்மை என்று படுகிறதோ, அதைச் சொல்வதில் என்றும் நான் தயங்கியதேயில்லை!" என்பது நாவலர் கூற்று!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற குறட்பாவை உள்ளத்துட் கொண்ட நாவலர், தமக்குப் பல்லாற்றானும் உறுதுணை புரிந்த எட்டப்ப அரசர், அண்ணாமலை அரசர், சேதுநாட்டு வேந்தர் ஆகியோர்க்குத் தமது நூல்கள் சிலவற்றை உரிமையுரையாக்கித் தமது நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொண்டார். மேலும், தமது முதல் மனைவி மீனாட்சியின் நினைவுக்கும், நன்றிக்கும் அறிகுறியாகத் தம் இரண்டாம் மனைவியினிடத்துப் பிறந்த பெண்ணிற்கு 'மீனாட்சி' என்ற பெயரை இட்டுள்ளார்.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை, எல்லாரும் செய்வர் சிறப்பு" என்ற திருக்குறள், 'பொருள் செயல் வகை'யில் வந்துள்ளது. இக் குறளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக நாவலரின் வாழ்க்கையைக் கூறலாம். பொருளில்லாத காரணத்தால், படிக்கின்ற காலத்தில் நாவலர் பட்ட தொல்லைகள் பல. அதனால், தாமே அரிதின் முயன்று, அரும்பாடுபட்டுப் பொருளைச் சேர்த்தார். 'புலவர்க்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு' என்பர் அறிஞர். ஆனால் இக்கூற்று இவரளவில் பொய்யாயிற்று!

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார், உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற பொருளுரையின்படி வாழ்ந்தவர் நாவலர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் புன்மை நாவலரிடத்தே காணுதல் இயலாது. அவ்வாறு

உண்மையை உள்ள உறுதியோடு உரைக்கின்றபோது, அதனால் எத்தகைய எதிர்ப்புவரினும் ஏற்றுக்கொள்ளுவார். உண்மைக்காகப் போராடிய உரவோருள் நாவலரை முதல்வராகக் கொள்ளலாம்.

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்ப தொன்றில்" என்ற வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்த நாவலர், தாம் உயிரோடிருக்குங் காலத்தே நிலைத்த புகழினைப் பெற்றுவிட்டார். தமது இளமைக் காலத்திலேயே 'பாரதி' என்ற பட்டத்தையும், வேற்று நாட்டவர் சார்பில் 'நாவலர்' பட்டத்தையும், தமிழ்ப் புலவர் சார்பில் 'கணக்காயர்' பட்டத்தையும், பல்கலைக் கழகச் சார்பில் 'டாக்டர்' பட்டத்தையும் பெற்ற பெருமைக்குரியவர் நம் நாவலர் ஒருவரே!

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ் வார்" என்ற முதற்பாவலரின் முதுமொழிக் கிணங்கப் பெருநாவலர், எல்லாம் வல்ல முழுமுதற் பொருளைத் தம் உள்ளத்தே கொண்டு வழிபட்டவர் என்ற உண்மையை இவரின் நூல்களில் காணலாம். அன்றியும், இவரது வாயானது இடைவிடாமல் 'அட கடவுளே, அட கடவுளே!' என்று சொல்லிக்கொண்டே இருக்கும் இயல்பையும், நேரிற் பழகுவோர் அறிந்திருப்பர். எனவே கடவுட் பற்றுக் கொண்டவர் கணக்காயர் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு முதற்பாவலரின் பொருளுரைப்படி வாழ்ந்து காட்டிய பெருநாவலராம் பாரதியார் மறைந்துபோனாராயினும் இவர்தம் புகழ் இந்நிலவுலகத்து என்றும் நின்று நிலவும் என்பது உறுதி.

பாரதியாரின் உள்ளாற்றல்

[நாஞ்சில், கா. கணபதி]

நாவன்மை தங்கியுள நெஞ்சம்
　　நன்னெறிக் குறையுளான நெஞ்சம்
பாவன்மை பதிந்துநிற்கும் நெஞ்சம்
　　பலகலைகள் தேர்ந்தாய்ந்த நெஞ்சம்
ஆவன்மை தமிழில்நிற்கும் நெஞ்சம்
　　அருந்தமிழில் கிறுகிறுத்த நெஞ்சம்
கோவன்மை யாலெங்கும் வென்ற
　　கோமானும் பாரதியார் நெஞ்சே!

குறள் தந்த வள்ளுவர் குந்த குந்தரா?

[வித்துவான், அ. பாலசுந்தர குருக்கள்]

தெய்வத்திரு மறையாம் திருக்குறளை இயற்றிய ஆசிரியர் பற்றி ஒருவகையான குழப்பநிலை நீண்ட நாளாக நிலவி வருவதாகக் காணப்படினும் அக்குழப்ப நிலை உண்டாகிய காலம் மிகவும் பிற்பட்டதாகும். திருக்குறள் இயற்றப்பட்ட காலத்தில் இல்லாத குழப்பம் வள்ளுவமாலையை அடிப்படையாகக் கொண்டு அதற்குப் பிற்காலத்தில் உண்டானதாக இருக்கலாம். திருக்குறள் ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு உள்ளவாறு கிடைத்திலதேனும் வள்ளுவமாலையால் திருக்குறள் ஆசிரியரின் பெயர் 'வள்ளுவர்' என்பதை நன்குணரலாம். பிற பெயர்களுள் 'வள்ளுவர்' என்ற பெயரே பலராலும் வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறே உள்ளவாறு அறியப்படாத வள்ளுவர் பெருமானின் சமயம் யாது? என்ற வினவிற்கு விடை காண முற்பட்டோர் பலராவர். திருவள்ளுவர் சைவரா? அல்லது வைணவரா? என்று ஆராயப் புகுவோருக்கு அவர் இரண்டிற்கும் பொதுவாக வைதிக சமயச் சார்புடையவராகவே திருக்குறளை வைத்து நோக்கின் காணப்படுவார். சைவரும் வைணவரும் திருவள்ளுவர் பற்றி வாதிக்க உரிமையுண்டு; ஆகையால், வாதிக்கலாம். ஏனெனில், வைதிக சமயங்களின் தத்துவங்களையும் ஒழுக்கங்களையும் பெரும்பாலும் ஒட்டியே திருக்குறள் அமைந்துள்ளது. ஆகையால் வைதிக சமயங்களுக்குப் புறம்பான சமயத்தைச் சார்ந்தவர்கள் திருக்குறள் எம்முடைய சமயச் சார்புடைய நூல் என்றோ அன்றி அதன் ஆசிரியர் எம்முடைய சமயத்தைச் சார்ந்தவர் என்றோ வாதிக்கத் திருக்குறளில் ஒரு சான்றேனும் இல்லை. உண்மை இவ்வாறிருக்கவும் சைனர்கள் சிலரும், சைன சமயத்தையும் பிற சமயத்தையும் ஒப்புநோக்கி உணராது மயங்கிய அறிஞர்கள் பலரும் திருக்குறள் ஆசிரியர் சைனர் என்றும் சைனராக இருக்கலாம் என்றும் கருதினர். மயக்க உணர்வால் உண்டாகிய இக் கருத்தையே உண்மை எனச் சாதிக்க இப்போது சிலர் முனைந்துள்ளனர்.

திருக்குறளில் காணப்படும் பாகதச் சொற்களையும் கடவுள் வாழ்த்தில் காணப்படும் 'ஆதிபகவன்' முதலிய சொற்றொடர்களையும் நோக்கித் திருக்குறள் ஆசிரியர் சைனராக இருக்கலாம் என்று கூறிய கருத்துத் தவறானதென்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் யாவரும் உணர்ந்துள்ளனர். பாகதச் சொற்களைச் சைனர்களேயன்றிப் பிறரும் ஏற்று வழங்கியுள்ளனர். பாகத

மொழி சைனருக்கே உரியதன்று. கடவுள் வாழ்த்தில் காணப்படும் செற்றொடர்கள் சைன சமயத்திற்கும் பொருந்துவனவாகக் காணப்படினும் பொருள் முடிபு சைனசமயத் தத்துவ மரபுக்கு முற்றிலும் மாறுகவே அமைந்துள்ளது. ஆகையால் திருக்குறள் சைனரால் இயற்றப்பட்டதெனக் கூறியவர்கள் யாவரும் திரிபுணர்ச்சியால் அங்ஙனம் கூறினர் என்பதை உணரலாம். இவர்கள் ஒரு புறம் இருக்கத் திரிபுணர்ச்சியும் பற்றுள்ளமுங் கொண்டு விதண்டை என்னும் வீண்வாதம் நிறைந்த நூலெழுத முற்பட்டதோடன்றித் திருவள்ளுவர் என்ற பெயரை நீக்கிக் 'குந்தகுந்தர் குறள்' என்று இனி வழங்குதல் வேண்டும் என்னும் பொருள் தோன்ற வரைந்துள்ளனர். 'தேவர் குறள்'* என்ற நூலில் அதன் ஆசிரியர் இல்லதை உள்ளதாக எவ்வாறு புனைந்துரைக்கின்றார் என்பதை உணருமாறு சிலவற்றைக் காண்போம்.

திருவள்ளுவர் வாழ்க்கையானது பலவகையாகப் புனைந் துரைக்கப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது 'ஏளாச்சாரியார் குறள் இயற்றினர்' என்பதேயாகும். இவ் வேளாச்சாரியார் குறளியற்றினர் என்பதும் உண்மையாக இருக்கலாம். ஏளாச் சாரியார் குறட் பாவினல் சைனசமயச் சார்புடையதாக'இயற்றிய நூலை விடுத்துத் திருவள்ளுவர் இயற்றிய நூலே இவரால் இயற்றப்பட்டதென மயங்கியதால் உண்டான குழப்பம் வள்ளுவர் பெருமானின் பெயரையும் மாற்றவேண்டும் என்ற வரை வளர்ந்துவிட்டது. வள்ளுவர் பெருமானின் வான் மறையானது அமைந்துள்ள சிறப்பே ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் பிற நூல்களைக் கருதா வண்ணம் தன்பா லீர்த்து விட்டது. நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற மூன்றையும் அருங்கலங்களாகக் கொண்டு அநேகாந்த வாதிகளாகப் பிற சமயத்தினரை வென்றதாக நீலகேசித் தெருட்டு முதலிய நூல்களை இயற்றித் தனித்தியங்கிவரும் சைனர்களையும் வள்ளுவர் குறள் கவர்ந்துவிட்டது. திருக்குறளில் உண்டான கவர்ச்சியால்சைனர்கள் தங்கள் நூல்கள் (சைன நூல்கள்) யாவும் பொய்ந் நூல்கள் எனக் கூறுவாரைப் போலத் தம்முடைய சமயம் கூறும் தத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றை மறந்து வாதிக்க முற்பட்டுள்ளனர். சைன சமயத்துக்குரிய தத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றைத் திருக்குறளுடன் பொருத்திக் காட்டினோர் ஒருவரும் இல்லை. தம்முடைய சமயத்துக்குத் திருவள்ளுவர் திருக்குறள் முற்றிலும் முரணனது என்பதை

---

* தேவர் குறள் என்ற நூல் திரு. A. சக்கிரவர்த்தி நயினரால் இயற்றப்பட்டது.

யுணராமல் சைனர்கள் நேர்மையின்றிப் பற்றுள்ளத்தால் வாதிக்க முற்பட்டுள்ளனர்.

ஏளாச்சாரியார் என்பவர் குறட்பாவினால் ஒரு நூலை இயற்றினார் என்றதையே அடிப்படையாகக் கொண்டு இவரால் இயற்றப்பட்ட நூலியாது என்பதை யாராயாமல் வள்ளுவர் இயற்றிய குறளே இவரால் இயற்றப்பட்டதென்ற பொய்க் கருத்தை அறிந்தோ அறியாமலோ பரவுமாறு செய்தவர் 'தேவர் குறள்' என்ற நூலின் ஆசிரியராவார். இவர் 'தேவர் குறள்' என்ற நூலில் சைனசமயத் தத்துவங்களையும், ஒழுக்கங்களையும் வள்ளுவர் குறளுடன் பொருத்திக் காட்டாமல் வள்ளுவமாலைச் செய்யுட்கள் பலவற்றை எடுத்துக் காட்டி அவற்றிற்கு வலிந்தும் நலிந்தும் பொருள்கொண்டு இடர்ப்படுகின்றார். இவரால் இயற்றப்பட்ட 'தேவர் குறள்' என்ற நூல் முழுவதும் மறுக்கத் தக்கதே எனினும் விரிவஞ்சிச் சிலவற்றை மட்டிலும் இங்குக் கூறின் அமையும் என நினைக்கின்றேன்.

"ஏளாச்சாரியார் என்றவர் சைனத் துறவி. இவருக்கு குந்த குந்தர் என்ற பெயரும் உண்டு. இவர் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவ் வேளாச்சாரியாரும் வருசியும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் இருவரும் ஓர் ஆசிரியரிடம் சேர்ந்து கல்வி பயின்றனர். இவ்வேளாச்சாரியாரின் மாணவர் வள்ளுவர். ஆசிரியர் இயற்றிய நூலை வள்ளுவர் அரங்கேற்றினார். ஆகையால் குறள் ஆசிரியரை வள்ளுவர் என்று வசதிக்காகக் கூறினும் குந்த குந்தர் என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். இவ் வேளாச்சாரியார் சமயசாரம், பிரவசனசாரம், பஞ்சாத்திகாயம் என்ற மூன்று நூல்களை இயற்றியுள்ளார். இவை மூன்றுமே முப்பாலாக விரிவடைந்தன. ஆகையால் குறள் ஆசிரியர் குந்த குந்தரேயாவார்" என்று வள்ளுவமாலைச் செய்யுட்களை எடுத்துக் காட்டி வரைந்துள்ளார்.*

'தேவர் குறள்' என்ற நூலில் காணப்படும் மேற்கூறிய முடிபுக்கு வள்ளுவமாலைச் செய்யுள்களுள் ஒன்றும் உதவுவதாகக் காணப்படவில்லை. ஆசிரியர் அவைகளுக்கு வலிந்து பொருள் காண்கின்றார் என்பது அந்நூலை நோக்கின் நன்கு புலனாகும். இவ்வாசிரியர் கூறும் செய்திகள் யாவும் கற்பனையாக அமைந்தவைகள். திருக்குறள் தமிழ்மொழியில் தோன்றிய முதல் நூல் அன்றென்பதையே வலியுறுத்துங் கருத்துக்கள். திருக்குறள் ஆசிரியருக்கு 'வள்ளுவர்' என்ற தமிழ்ப் பெயரும் வேண்டாம் என்பதை விந்தையான முறையில் விளக்கும் கருத்துக்கள்.

---

* தேவர் குறள் என்ற நூலில்.

ஏளாச்சாரியாருக்குப் பதுமநந்தி, குந்த குந்தர் முதலிய பல பெயர்கள் உண்டென்பர். இவ் வேளாச்சாரியின் மாணவர் வள்ளுவர் என்பதற்குச் சான்றில்லை. வள்ளுவரின் மாணவர் குந்த குந்தர் என்று கூறினால் அது மிகையாகாது. இதைப் பற்றிப் பின்னர்க் காண்போம்.

குந்த குந்தர் ஆந்திர இராச்சியத்தில் அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள 'கௌளகொண்ட', என்ற ஊரிற் பிறந்தவர். இவருடைய காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று துணியப் போதிய சான்றிருக்கின்றது.

வடமொழி வாணராகிய வரருசி வாழ்ந்த காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டு என்பதைப் பல சான்றுகளுடன் திரு. சயசங்கரப் பிரசாத் அவர்கள் நிறுவியுள்ளார்கள். ஆகையால் குந்த குந்தரும் வரருசியும் சமகாலத்தவர் என்றது தவறான கருத்தாகும்.

குந்த குந்தர் காலம் கிறித்து சகாப்தத்தின் தொடக்கம் அதாவது கி. பி. முதலிரு நூற்றாண்டுகளாக இருக்கலாம் என்று புரபசர். திரு. உபாத்தியாயே என்பவர் கருதுகின்றார். இவருடைய கருத்தும் துணிவில்லாததாகவே காணப்படுகின்றது. இதனால் நாம் குந்த குந்தர் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்ற கருத்துத் தவறானதென்பதை உணரலாம்.

மகாவீரர் கி. மு. 527 இல் வாழ்ந்தவர். இவரது காலத்துக்குப் பின் 683 ஆண்டுகள்வரை அங்காகம ஞானிகள் வாழ்ந்தனர். எனவே அங்காகம ஞானிகள் காலம் கி. பி. 156 வரையாகும். அங்காகம ஞானிகளுக்குப் பின் பத்திரபாகு முனிவர் வாழ்ந்தார். அவருடைய மாணவர் தரசேனர் என்பவர். தரசேனருடைய மாணவர்கள் பூதபலி, புட்பதந்தர் என்போராவர். இவர்களுடைய காலத்துக்குப்பின் நேமிசந்திரர் காலம். மகாவீரர் காலத்திலிருந்து நேமிசந்திரர் வரையுள்ளோர் காலங்களைக் கணக்கிடின் கி. பி. நான்காம் நூற்றாண்டுவரை கொள்ளலாம். இக் காலவரையறையில் தோன்றிய சைன நூல்கள் யாவும் பிரதம சுருத கிரந்தங்கள் எனப்படும்.

மேற்கூறிய பிரதம சுருதகிரந்தங்கள் தோன்றிய காலத்துக்கு மிகவும் பிற்பட்ட காலத்தவர் குந்த குந்தராவார். இக் குந்த குந்தர் பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவைகளே. யாது காரணத்தாலோ சைனர்கள் இவரை முற்பட்ட காலத்தவர் என்று எழுதி வருகின்றனர். இக் குந்த குந்தர் இயற்றிய நூல்கள் பாகத மொழியில் உள்ளன. இவரை அம் மொழியாராய்ச்சியினர்

வீரகாதா காலத்தைச் சேர்ந்தவராகவும் கொள்ளுகின்றனர் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

‘வீரகாதா’ காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யென்பர். குந்த குந்தரால் இயற்றப்பட்ட நூல்கள் வீரகாதா காலத்தைச் சார்ந் தவைகளாகும். இவற்றையெல்லாம் ஒப்புநோக்கிக் காண்போ ருக்குக் குந்தகுந்தர் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது ஐயத்துக்கிடமின்றித் தெரியவரும். இத்தகைய பிற்பட்ட காலத்தைச் சார்ந்த ஒருவரின் மாணவர் வள்ளுவர் என்று கூறப் புகுந்தது அறிவின்மையாகும்.

‘தேவர் குறள்’ என்ற நூலின் ஆசிரியர் திருவள்ளுவர் காலம் கி. மு. முதல் நூற்றாண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்றவாறு குந்த குந்தர் காலத்தையும் பிணைத்துவிட்டார். இக்குந்த குந்தரின் காலத்தை ஆய்தல் நமது குறிக்கோளன்று. ஆயினும் ‘தேவர் குறள்’ என்ற நூலின் ஆசிரியர் எவ்வாறு இல்லதை உள்ளதாகப் புனைகின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாகவே இதனை இங்குச் சுருக்கமாக வரைய நேர்ந்தது.

இக் குந்த குந்தர் எந்தக் காலத்தில் வாழ்ந்தவராக வேண்டு மானாலும் இருக்கட்டும். இவரியற்றிய நூல்களுக்கும் குறளுக்கும் எவ்வகையான ஒற்றுமையும் இல்லை. இவரால் இயற்றப்பட்ட நூல்களுக்கும் திருக்குறளுக்கும் ஒற்றுமையுண்டென்றால், அவ் வொற்றுமை கோகுலாட்டமிக்கும் குலாம்காதருக்கும் உள் ளதைப் போலவே காணப்படுகின்றது. ஆகையால், ‘தேவர் குறள்’ என்ற நூலின் ஆசிரியர் கூறும் யாவும் தவறானவை என்பதையறியலாம். இந்த ஆசிரியர் எதை வைத்துக்கொண்டு இவ்வளவையும் புனைந்துரைக்கின்றார் என்பதை நோக்கின் உண்மை வெளியாகலாம். ஏளாச்சாரியார் என்பவர் குறளியற் றினார் என்ற செய்தியையே வைத்துக்கொண்டு இவர் நூலை இயற்றி இருப்பது வெளிப்படை.

வள்ளுவர் பெருமான் முப்பாலாக விரித்துக் கூறிய அறம் பொருள், இன்பம் போல் சைனர்கள் கொண்ட முப்பொருள்கள் நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்பவைகளாம். இவற்றையே சைனர்கள் ‘திரிரத்தினம்’ அதாவது மும்மணிகள் என வழங்குவர். தமிழில் அருங்கலச் செப்பென்றொரு சைன நூல் உள்ளது. இந்நூல் மொழி பெயர்ப்பாகும். குறட்பாவினால் ஆனது. வள்ளுவர் பெருமானின் திருக்குறளில் சிலவற்றை ஆசிரிய வசனமாக வைத்துப் பிற்காலத்தில் ஒருவரால் செய்யப்

திருவாளர் ந. சஞ்சீவி (காஞ்சி, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) அவர்களால் தலைமை தாங்கப்பெற்றுப் பல பேரா சிரியரால் சொற்பொழி வாற்றப்பட்டுச் சிறப்புற நிகழ்ந்தது.

இந்துமத பாடசாலைத் தந்தையரான உயர்திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்களைத் தலைவர் தம்பிரானடிகள் நனி மிகப் பாராட்டினர். மாயூரம் ஒரியண்டல் கல்லூரி முதல்வர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், மாசிலாமணி முதலியாரவர்கட்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டினர். இந்துமத பாடசாலையின் ஒத்துழைப்புப் பெரும் பொறுப் பாளரும் அண்ணாவென்றழைக்கப்படும் அறிவாற்றல் மிக்காரு மாகிய புலவர் திரு. நா. ப. தணிகையரனார்க்கு மாசந்நிதானம் அளித்த சிவமணிமாலையினைத் தம்பிரானடிகள் வழங்கி வாழ்த் தினர்.

மாநாட்டு முடிவில் செயலாளரால் அனைவர்கட்கும் நன்றி யும் வாழ்த்தும் நவிலப்பட்டுக் கூட்டமினிது நிறைவுற்றது.

அருளோன் அடிசார் அண்ணல்

சதாசிவப்பண்டாரத்தார்

பண்டாரத்தாரவர்கள் "அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை" விரிவுரையாளராக விளங்கி வியத்தகு பணிபுரிந்த விழுமியார். அவர்கள் 2-1-1960 காலை அண்ணாமலை நகரில் தம் இல்லத்தில் இறையடி எய்தினர். இவர்கள் திருவந் தியத்தில் பிறந்து கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் இருபத்தைந்தாண்டுகள் அலுவல்பார்த்து அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் 1942 முதல் இறுதிக் காலம்வரை பணிபுரிந்து வந்தனர். 'சோழர் வரலாறு, இருண்ட காலம், (மூன்று பகுதிகள்) முதலிய பல அரிய வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் வரைந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். இளமையி லிருந்தே திருக்கோவிற் கல்வெட்டுக்களைப் படியெடுத்து மொழி பெயர்ப்பதில் மிக்க வேட்கையுடையவர். இவர்தம் அரும்பெரும் வரலாற்றை அடுத்த செல்வியில் இவர்தம் உருவப்படத்துடன் விரிவாக வெளியிடக் கருதியுள்ளோம். நம்மால் ஈடுசெய்ய வொண்ணாத பேரிழப்பாய் நம்மைவிட்டுப் பிரிந்த பண்டாரத் தாரின் நல்லாவி இறையடியில்என்றும் இன்புற்று வாழுமாக.

அவர்தம் குடும்பத்தாருக்குக் கழகத்தாரின் பரிவும் ஆறு தலும் உரியவாகுக.

பால் பொங்குகவே!

[புலவர் 'அரசு']

பால்பொங் குகவே! பால்பொங் குகவே!
நால்வள நிலத்தினும் நற்பால் பொங்குக!
பழகிய கழனியிற் பண்புற வுழைத்துச்
செந்நெலுங் கரும்பும் இஞ்சியும் மஞ்சளும்
வாழையுந் தெங்கும் மாவும் பலாவும்
வாழிய நிலமகள் வளம்பெற விளைத்து
நம்முயி ரோம்பும் செம்மைசால் சான்றோர்
உழவர் மனையெலாம் உலப்பிலா ஆநிரை
மழலை மக்கள் வளவிய நிதியம்
எங்கும் எங்கும் இயலுறப் பொங்குக!
எல்லாக் கலைகளும் இதனிடத் துள; இதில்
இல்லாக் கலைமற் றெங்கும் இலையென
வியந்துல கெங்கும் நயந்து புகழக்
கலையெலாந் தமிழிற் பலநெறி பொங்குக!
வள்ளுவன் தந்த வளம்பெறு நல்லான்
தெள்ளுறப் பொழியுந் தீஞ்சுவை முப்பால்
உலகுறு மக்கள் உளமெலாம் நிறைந்து
நலமெலாம் விளைத்து நிலவுறப் பொங்குக!
செந்தமி ழன்னையின் திருவரு ளாலே
எந்த நெறியினும் இயல்வளம் பெற்றும்
நன்றி மறந்து வென்றிசேர் தமிழிற்
களைபல வளர்க்குங் கயமைக் கூட்டம்
உளைவுறப் பணிபுரி உண்மைச் சான்றோர்
செய்பணி வளர்ந்து சீர்பெறப் பொலிக!
வாழிய செந்தமிழ் நாடு!
வாழிய பாரத மாண்புறு நாடே!

நெடுவழி இருமருங்கிலும் எள்ளிட இடமின்றி மாந்தரனைவரும் வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழ்ந்து புகலவொண்ணுப் பேரின்பத்தில் திளைத்தனர். தலைநகர் ஐக்வயமாய்த் திகழ்ந்தது. ஐக் மெய்ம்மறந்து மக்களின் அன்பிலும் பரிவிலும் தோன்றிய இன்பப் பெருங்கடலின் மூழ்கிச் செய்தியாளர்களிடம் தம்மை மறந்து இத்துணைப் பெருங்கூட்டத்தை யாண்டும் கண்டறிந்திலேமெனப் பெருமகிழ்வுடன் கூறினர்.

பலவகையான அணிவகுப்புக்கள், வேடிக்கைக் காட்சிகள், மேளதாளங்கள், பண்ணிசை வண்ணங்கள் பலவும் இடமிடந்தோறும் இன்புற நிகழ்ந்தன. நிழலுருவப்படங்கள் எடுக்கப்பட்டவை பன்னூற்றுக் கணக்காகும்.

திசம்பர் பத்தாம்நாள் காலை 10-30 மணிக்கு இராஷ்டரபதி பவனில் அமெரிக்கத் தலைவரைச் சந்தித்து முதலமைச்சர் நேரு தொண்ணூறு நிமிடங்கள் உலகநிலை குறித்து மனங்கலந்து உரையாடினர். முதலமைச்சர் நேரு தம்மில்லத்துச் சிறந்ததொரு விருந்து நடத்தினர். விருந்திற்குப் பின்னரும் உரையாடினர்.

இந்தியாவின் சிறப்பான இடங்களை ஐசனேவர் பார்வையிட்டார். பின்னர் 14-12-59 இல் புதுதில்லியிலிருந்து புறப்பட்டு ஈரான் சென்றார். ஐசனேவர் வருகையால் இந்தியாவுக்கும் உலகிற்கும் நற்பயன் விளையுமாக.

தமிழ்த் திருநாள்

[C. பத்மாவதி, எம். ஏ.]

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனல்
உழந்தும் உழவே தலை' எனும் தமிழ்மறை
மொழியினைத் தமிழகம் வழிவழிப் போற்றும்
விழுமிய நாளே தமிழ்த்திரு நாளாம்
மொழிமனம் செயல்முற்று நலமே செழிக்கப்
பழக்க வழக்கத் தல்லவை ஒழித்து
விழுமிய ஏற்றுநல் அன்புஅருள் போற்றும்
எழிலின்ப நாளே தமிழ்த்திரு நாளாம்.

வாழ்விசைப்பா *

[தமிழாக்கம் : கு. பரமசிவன், எம். ஏ.]

வாழ்வுவெறும் கனவென்று புலம்பற் பாக்கள்
வகுத்தென்பால் சொல்லாதிர் ! சோம்பும் ஆன்மா
மாள்வடையும்; வெளித்தோற்றம் உண்மை யன்று;
மன்னுபொருள் வடிவெல்லாம் கண்ணில் தோன்ரு. (க)
வாழ்வுண்மை; வாழுதற்கே இந்த வாழ்வு;
மயானம்நம் வாழ்க்கையின் பயனும் அன்று.
“ பாழ்மண்ணில் பிறந்தாய்,மண் தனக்கே மீள்வாய் ”—
பண்டையுரை யீதுயிர்க்குப் பொருத்தம் ஆமோ ? (உ)
விதித்தவழி, விதித்தபயன் கழித்தல் அன்று;
வருந்தலன்று; செயல்புரிதல் ஒன்றே யாகும்;
குதித்தோடும் நாளொன்றும் முன்னேற் றத்தைக்
கூட்டும்வகை செய்திடலே விதித்த தாகும். (௩)
கலைநெடிது; காலமது பறந்து போகும்.
கனத்தென்ன, துணிந்தென்ன, நமது நெஞ்சம்—
புலைநெஞ்சம் கணந்தோறும் அடிப்ப தெல்லாம்
புன்காடு செல்லும்படை முரசின் ஓசை. (
வாய்த்த பெரும் உலகப்போர்க் களத்தும், இந்த
வாழ்வென்னும் இளைப்பாறும் வேளை யுள்ளும்,
மேய்த்தலுறும் மந்தைபோல் ஊமை யாக
மேவாதே ! பூசல்தனில் மறவ னகு ! (ரு)
நன்மைபல வருமேனும் வருங்கா லத்தை
நம்பாதே ! இறந்ததெல்லாம் இறந்து போக !
உன்வாழ்வு நிகழ்காலம்; செயல்கள் செய்வாய் !
உள்ளுக்குள் நெஞ்சுண்டு; தலைமேல் ஈசன் ! (௬)
பெருந்தக்க வாழ்வும்நாம் நடாத்தல் கூடும்;
பெரியோர்கள் வாழ்வெல்லாம் இதனைக் காட்டும்.
பிரிந்திட்ட காலத்தும் நமக்குப் பின்னல் (எ)
பெருங்கால மணற்பரப்பில் சுவடு நிற்கும்.
பிறவியெனும் கடல் செலுத்திக், கலமு டைந்து,
பேதலித்துக் கரையேறும் ஒருவன், முன்னுள்
திறமாக நாம்விடுத்த சுவடு காண்பான் ;
தேறிடுவான்; முன்னேற ஊக்கங் கொள்வான். (அ)
எழுந்திடுவோம்; செயல்புரிவோம் ! எதையும் தாங்கும்
இதயமுண்டு; பயன்பற்றிக் கவலை யில்லை.
உழைத்திடவும் பொறுத்திடவும் கற்றுக் கொள்வோம் !
ஓயாமல் தொழில் புரிவோம் ! பெறுவோம் வெற்றி! (௯)

---

* “ A Psalm of life ” : H. W. Longfellow.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பண்டித நேருவின் சமயக் கருத்து

"மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோர் உயிராற்றலிடம் எனக்கு ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் சமயவாதிகளை மனமாற்ற மடையச் செய்வது போன்ற நிகழ்ச்சிகளால் நான் மனமாற்றம் அடைபவனல்ல. இப்போது உங்களிடையே நான் பேசுவது சமயக் கருத்துடன் அல்ல. ஒவ்வொரு சமயங்களின் சார்பிலும் வழிபாடுகள் செய்யப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இங்ஙனம் பல திறப்பட்ட மனித சமயங்களில் நான் எதையும் சார்ந்தவனல்லன். பின்னர், என் உள்ளத்தைக் கவர்ந்ததுதான் என்னையெனின் காந்தியடிகளும் அவர் ஆற்றிய பணிகளுமேயாகும்" என்று இந்திய முதல் அமைச்சர் பண்டித நேருவர்கள், தில்லி பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இடத்தில் நிறுவப்பட்ட காந்தி பவனத்திற்கு அடிப்படைக் கல் நாட்டிய காலை குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிப்பு: பண்டித நேரு அவர்களின் இக் கருத்தினால் தனித்து நின்றியங்கும் ஓர் உயிராற்றல் உளது என்னுமோர் உண்மை புலனாவது ஈண்டு நோக்கற்பாலது.

(உ) நாளிதழ் வெளியீட்டில் இந்தியாவுக்கு 3-ஆவது இடம்

ஒவ்வொரு நாட்டிலும் வெளியிடப்பெறும் நாளிதழ் வெளியீடுகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தியா உலகில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று ஐ. நா. கல்வி, கலாசார அறிவியல் கழகத்தினர் வெளியிட்டுள்ள புத்தகக் குறிப்புக் கூறுகிறது.

[அமெரிக்காவில் 1820 இதழ்களும், மேற்கு செருமனியில் 481 இதழ்களும், இந்தியாவில் 476 இதழ்களும் வெளியிடப் பெறுகின்றன. அஃதாவது 146 நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தையும், மேற்கு செருமனி இரண்டாவது இடத்தையும், இந்தியா மூன்றாவது இடத்தையும் பெற்றிருக்கிறது.

குறிப்பு: நாளிதழ் வெளியீட்டில் இந்தியா பொதுவாக மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பினும் தென்னகத்தைப் பற்றிய வரையில் நாளிதழ்கள் குறைவே. மக்களின் கல்வியறிவை அளவிட நாளிதழ்களின் எண்ணிக்கை நல்லதோர் அளவு கோலாகும்.

(ங) வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் புதிய தலைவராகப் பன்மொழிப் புலவர், திரு. கா. அப்பாத்துரையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்

என்னும் செய்தி யறிந்து மகிழ்ச்சியடைகிறோம். திரு. அப்பாத்துரை அவர்கள் பல்லாற்றானும் அப் பதவிக்குத் தகுதியுடையவர். அவர்தம் தலைமையில் தமிழ் எழுத்தாளர் சங்கம் நற்றமிழ்ப்பணி புரியும் என நம்புகிறோம். அவருக்கு நமது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்வதோடு, இங்ஙனம் தக்கார் ஒருவரைத் தேர்ந்தெடுத்த தமிழ் எழுத்தாளர்களையும் பாராட்டுகிறோம்.

திருப்பனந்தாள் காசிமடத்தாரின் திருமுறைக் கொடைப் பொருள்

நாடோறும் திருமுறை விண்ணப்பித்தற்கெனத் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் சிவத்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் அடிகள் அவர்களால் ஓதுவார்கள் அமர்த்தப்பட்டுத் தேவார வைப்பும் நிறுவப்பெற்றுள்ளது. அங்ஙனந் திருமுறை ஓதப்பெறும் திருவூர்களும், ஓதுக்கப்பட்டிருக்கும் வைப்பும் பற்றிய விவரம் வருமாறு :

1.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னம் பாலிப்பு திருமுறை நிதி	ரூ.	4,00,0[illegible]
2.	காஞ்சிபுரத்தில் திருக்கச்சியேகம்பன் உருத்திராக்கத் தேவார நிதி	ரூ.	50,000
3.	திருவண்ணாமலையில் தேவார நிதி	ரூ.	24,000
4.	தில்லையில் இராஜராஜ அபயகுலசேகர சோழன் நினைவுத் தேவாரவைப்பு நிதி	ரூ.	16,000
5.	திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி	ரூ.	35,000
6.	மதுரையில் தேவார நிதி	ரூ.	50,000
7.	திருக்குற்றால நாதர் தேவார நிதி	ரூ.	26,500
8.	கன்னியாகுமரி ஆச்சிராமம் வகையறா தலங்களில் அன்னம் பாலிப்பு திருமுறை வகையறா நிதி (சுசீந்திரத்தில்)	ரூ.	2,50,000
9.	பாபநாசத்தில் அகத்தியர் தேவார நிதி	ரூ.	25,000
10.	ஸ்ரீவைகுண்டத்தில் தேவாரபாராயணம்		...
11.	இராமேசுவரத்தில் தேவார நிதி	ரூ.	51,000
12.	திருக்கேதார யாத்திரை, திருச்சிராப்பள்ளியில் திருமுறை வகையறா நிதி	ரூ.	1, 00,000

மதிப்புரை

"வேலன் சிந்தனைப் பூங்கொத்து"

இதன் ஆசிரியர் : திரு. புலவர், வி. பொ. பழனிவேலன், பி. ஒ. எல்., தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, அறந்தாங்கி. வெளியீடு: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், அறந்தாங்கி, விலை ஒரு வெள்ளி. இந்நூலின்கண் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பதுமுதல் "துப்பாதே" என்பது ஈறாகப் பதினான்கு தலைப்புக்கள் காணப்படுகின்றன. கற்பார் நாடிநலனுணர்ந்து வாழ்வதற்கு வேண்டிய இன்றியமையாப் பொருள் பலவும் நூலாசிரியரவர்களால் இதன்கண் நன்கு விளக்கப்பட்டுள்ளன. புகலிடம் நாடிவந்த ஆரியர் ஒவ்வாப் புனைவு பலகூட்டிப் புராணமென்னும் பெயரான் மக்களிடையே மயலூட்டித் தொன்மையை மறைப்பித்து மறக்கச் செய்தனர். அவ் வுண்மையை இவ்வாசிரியர் அகப்புறச்சான்றுகளான் விளக்கியுள்ளனர். தமிழர்தம் தனிப் பண்பாடும் ஒழுக்கமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

நம் முன்னோராகிய பழந்தமிழ்ச் சான்றோர் தெய்வத் திருவருளால் தம் நுண்ணுணர்வினாற் கண்டு வழிபட்டு அமைத்த திருக்கோவில், திருவுருவவழிபாடு, திருமணச் சடங்கு முதலியவற்றையும் ஆரியர்களால் வந்த வரவுகளே என ஆசிரியர் கருதும் கருத்து நம் முன்னோர்க்குப் பெருமை தருவதும் நாட்டு நல்வாழ்வுக்கு அரண் செய்வது மாகாதென்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

இவைகளை யமைத்துக்கொண்டு, எஞ்சியவற்றுள் கொள்ளத்தக்கவைகளைக் கைக்கொண்டு செந்தமிழ் அன்பர்கள் கற்றுப் பயன் எய்துவார்களாக.

"திருமாதேசுரர் வரலாறு என்னும் மாதேசுரன்மலை வழிநடைக் கும்மி"

ஆக்கியோர் ஆலாம்பாளையம் தமிழ்த்தொண்டன் ஆ. அரங்கநாதன் அவர்கள். கிடைக்குமிடம் 'சதானந்த விலாஸ், சவுளி வியாபாரம் சேலம்-1. விலை காசு 37. ஆசிரியரவர்கள் தெய்வப்பெற்றியாளர், அருள்நலங்கனிந்த கும்மி, அனைவரும் ஓதி வழிபடுதற்கேற்ற அருமை வாய்ந்தது.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.

JAMAL MOHAMED COLLEGE, TIRUCHIRAPALLI.
11 JUL 1966
LIBRARY.

ஆராய்ச்சிப் பேரறிஞர்

திரு. தி. வை. சதாசிவ பண்டாரத்தார்

தோற்றம்: 1892 மறைவு: 1960